23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும்
(Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca
Tel.:416.315.9397 / www.mahendran.ca

நதி 23 | பாலம் 02 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 15, 2013

# ஆசிரியர்களுக்கு தொழிற்சங்கம் தேவையா?

ஒன்ராரியோ பொதுப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் ஒன்ராரியோ மாகாண அரசிற்கும் இடையேயான ஒப்பந்தம் ஓகஸ்ற் 31, 2012 உடன் முடிவடைந்தது. அரசிற்கும் ஆசிரிய சங்கங்களுக்கும் இடையே புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாததால் வேலைநிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆசிரியசங்கங்கள் எடுக்காமல் இருப்பதற்காக ஒன்ராரியோ அரசு 'மாணவர்களுக்கு முதன்மையிடம்' என ஒரு சட்டமூலத்தைக் கொண்டுவந்து ஆசிரியசங்கங்கள் வேலைநிறுத்தம் செய்ய முடியாமல் தடை செய்திருந்தது.

ஆனால் ஆசிரியசங்கங்கள் தொடர்ந்தும் பல்வேறு விதமான ஒத்துழையாமை இயக்கங்களை அரசிற்கு எதிராக நடத்தி வந்தன. இதன் உச்சக்கட்டமாக கடந்த ஜனவரி 11, 2013 வெள்ளிக்கிழமை ஒன்ராரியோ முழுவதும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்து பாட-சாலைகளுக்கு முன்னால் பதாதைகளுடன் நிற்க வேண்டும் என ஆசிரிய சங்கங்கள் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தியிருந்தன. ஆனால் ஒன்ராரியோ முதல்வரோ இது சட்டவிரோதமான வேலைநிறுத்தம் என்று கூறியிருந்தார். ஆசிரியசங்கங்களோ இது வேலை நிறுத்தம் அல்ல இது ஒரு தொழிற்ச்சங்க நடவடிக்கை என்று கூறின.

இறுதியில் ஒன்ராரியோ முதல்வர் அரசிற்கும் ஆசிரியசங்கங்களுக்கும் பொதுவாக இருக்கின்ற சுதந்திரமான ஒன்ராரியோ தொழிலாளர் தொடர்புகளை விசாரிக்கும் சபையிடம் இதுபற்றி முறையிட்டிருந்தார். அவர்கள் ஒன்ராரியோ முதல்வர் கூறியமாதிரியே ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அது சட்டவிரோதமான செயல் என தீர்ப்பளித்தனர். இதை மீறி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்கள் ஒவ்வொருவரும் 2 ஆயிரம் டொலர் தண்டப்பணம் செலுத்துவதோடு ஆசிரிய தொழிற்சங்கமும் 25ஆயிரம் டொலர் தண்டப்பணம் செலுத்த வேண்டும். இதனால் சபையின் முடிவுக்கு இணங்க ஆசிரியசங்கங்கள் வேலைநிறுத்தம் செய்வது என்ற முடிவை இரத்துச் செய்துவிட்டனர்.

ஆசிரியர்கள் வெள்ளிக்கிழமை பாட-சாலைக்கு சமூகமளிக்கமாட்டார்கள் என நினைத்து கல்விச்சபை பாடசாலையை வெள்ளிக்கிழமை மூடிவிடுவதாக முடிவெடுத்தது. அதைத்தொடர்ந்து பாட-சாலை பேரூந்துகளும் தமது சேவையை வெள்ளிக்கிழமை நிறுத்தியிருந்தன. இதனால் வேலைக்கு செல்லும் பெற்றோர்கள் மிகவும் இடஞ்சல்களுக்கு உள்ளானார்கள். ஒன்ராரியோ தொழிலாளர் தொடர்புகளை விசாரிக்கும் சபை தனது முடிவை தெரிவிக்கும்போது ஜனவரி 11, 2013 வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியாகி விட்டது. அதன்பின்னர் கல்விச்சபை பாடசாலைகளை மூடிவிடுவது என்று முன்னர் எடுத்த முடிவை மாற்றி பாட-சாலைகள் வெள்ளிக்கிழமை திறந்திருக்கும் என அறிவித்தன. இவ்வாறான ஒன்றுக்கு ஒன்று முரணான முடிவுகளால் வெள்ளிக்கிழமை மிகவும் குறைந்தளவு மாணவர்களும் ஆசிரியசங்கத்தை சேர்ந்த 76,000 ஆசிரியர்களும் பாடசாலைக்கு சென்றனர்.

இதைப்பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதிய 'குளோப் அண்ட் மெயில்' பத்திரிகை ஆசிரியர்களுக்கு தொழிற்சங்கங்கள் தேவையா என கேள்வி எழுப்பியுள்ளது. அது மேலும் தெரிவிக்கையில், ஒன்ராரியோவில் பொதுச்சேவைக்கான பணஒதுக்கீடு குறைந்து கொண்டு வருகிறது. ஒன்ராரியோ அரசின் பொதுச்சேவையில் 1.1 மில்லியன் மக்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களில் அரச உத்தியோகத்தர்கள், சமூகசேவை செய்பவர்கள், தாதிமார், ஆசிரியர்கள், நகர்காவலர், குப்பை அள்ளுவோர் என பலர் இருக்கின்றனர். இவர்களுக்கான சம்பளமாக ஒன்ராரியோ அரசு வருடாந்தம் 58 பில்லியன் டொலர் பணத்தை செலவிடுகிறது.

அரசின் பொதுச்சேவையில் இருப்பவர்கள் பொதுமக்களின் தேவைகளை கவனிப்பவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இவர்களது தொழிற்சங்கங்களோ தற்போது மிகவும் பலம் வாய்ந்தனவாகவும், தமது அங்கத்தவர்களது சம்பள உயர்வு, மேலதிக விடுமுறைகள், சுகயீன விடுப்புகள், வேலையை நிரந்தரமாக





வைத்திருக்கக் கூடிய முயற்சிகள் போன்றவற்றிற்காகவே போராடுகின்றன. தற்போது தொழிற்சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு சேவை செய்வதாகக் கூறிக்கொண்டு தவிர்க்க முடியாமல் பொதுமக்களின் தேவைகளுக்கு எதிராகவே செயற்படுகின்றன.

ஆசிரியர்கள் தாங்கள் ஒரு தொழில் நிபுணர்கள் (Professionals) என்று கூறுகிறார்கள். அது மிகவும் சரியான கூற்று. ஆனால் மற்றைய தொழில் நிபுணர்களுக்கு இருக்கும் கட்டுப்பாடுகள் (Standards and Practices) இவர்களுக்கு இல்லை. அவர்களது வேலை நேரம் தொழிற்சங்கத்தால் வரையறை செய்யப்பட்டுள்ளது (Precisely Regulated). ஆசிரியர்களது தொழிற் திறமை சரியாக மதிப்பீடு செய்யப்படுவது இல்லை (No meaningful performance reviews). சரியாக படிப்பிக்காவிட்டாலும் ஒரு ஆசிரியர் தண்டிக்கப்படமாட்டார். அதேபோல் நன்றாக

தொடர்ச்சி 02ஆம் பக்கம்




MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE
TOYOTA


KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
10 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022








# ஆசிரியர்களுக்கு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



படிப்பித்தாலும் ஒரு ஆசிரியருக்கு விசேடசலுகை தரப்படமாட்டாது. அதாவது ஆசிரியர்கள் நன்றாக கற்பித்தாலும் சரி, வடிவாக கற்பிக்கா விட்டாலும் சரி ஒரேமாதிரி சம்பள உயர்வு கொடுக்கப்பட்டு ஒரேமாதிரியாகவே நடத்தப்படுகிறார்கள் (Nobody gets rewarded for outstanding work or penalized for awful work). தொழிற்சங்கங்கள் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்காகவே தொடங்கப்பட்டன. அவை ஆசிரியர் தொழிலிற்கு உகந்தவை அல்ல. இவ்வாறு ஜனவரி 12, 2013 இல் வெளியான குளோப் அண்ட் மெயில் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# வைத்தியர்கள் செய்யும் தவறுகள் வெளியிடப்படமாட்டாது

வைத்தியர்கள், தாதிமார்கள், பல் வைத்தியர்கள் மற்றும் மருந்தாளர்கள் விடும் தவறுகளுக்காக அவர்களது தொழிற்சங்கங்கள் அவர்களுக்கு விடும் எச்சரிக்கைகள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவது இல்லை. கடந்த ஐந்து வருடகாலத்தில் 2000 இற்கு மேற்பட்ட எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன. இவ்வாறான எச்சரிக்கைகள் நோயாளர்களின் முறைப்பாட்டாலேயே விடப்பட்டுள்ளன. முறைப்பாட்டை செய்தவருக்கு தான் முறைப்பாடு செய்தவருக்கு எதிராக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்பது தெரியாது. ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை இவ்வாறாக விடப்பட்ட எச்சரிக்கைகள் சிலவற்றை பிரத்தியேகமாக எழுதி கேட்டுப்பெற்றுக்கொண்டது.

ஒன்ராரியோவில் 267,000 ஆயிரம் கண்காணிக்கப்படும் மருத்துவசேவை உத்தியோகத்தர்கள் (வைத்தியர்கள், பல் வைத்தியர்கள், கண் வைத்தியர்கள், மருந்தாளர்கள்) இருக்கிறனர். இவற்றை கண்காணிக்க 21 தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. 2007 இல் இருந்து 2011 வரை 2205 எச்சரிக்கைகள் இந்த 21 சங்கங்களும் விடுத்துள்ளன. இவற்றில் 1211 ஐ வைத்திய சங்கமும், 251 ஐ பல் வைத்தியர் சங்கமும், 202 ஐ மருந்தாளர் சங்கமும் விடுத்துள்ளது. இவற்றில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

ரொறொன்ரோ வைத்தியர் Harry Himal என்பவர் தனது நோயாளிக்கு செய்த ஒரு பரிசோதனை முடிவை (Colonoscopies) சரியாக வாசித்து தகுந்த அறிவுரையை குறிப்பிட்ட கால எல்லைக்குள் வழங்கவில்லை. இதனால் அவரது நோயாளியான Bert Gabrieil புற்றுநோயால் இறந்தார். அவரது மனைவி Rosemarie Rohrbach Gabrieil வைத்திய சங்கத்திற்கு தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து, அச்சங்கம் வைத்தியருக்கு அவர் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவரது நோயாளிக்கு மேலதிக பரிசோதனைகள் செய்ய அறிவுறுத்தவில்லை என எச்சரிக்கை செய்திருந்தது. இதுபற்றி எந்தவிபரமும் Rosemarie இற்கு தெரியப்படுத்தவில்லை.

ரொறொன்ரோ வைத்தியர் Faith Patricia Feinberg தனது

தொடர்ச்சி 14ஆம் பக்கம்




விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.


Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
   www.tamilvanakkam.com


Dr. Bhaminy Mohendran
Dentist
1200 Markham Rd, #119
(Markham & Ellesmere)
416 289 7187
7595 Markham Rd, #4
(Markham & 14th Ave.)
905 201 8900
Opened 7 days a week

## வாசகர் எண்ணம்

விளம்பரத்தில் துறையூரான் எழுதிய ஹவாய் சுற்றுலா பற்றிய கட்டுரை அருமை. இது போன்ற பயண அனுபவங்களை அனுபவித்தவர்கள் கூறும்போது எமது எதிர்கால பயணங்களிற்கு பலனளிக்கும்.

சண்முகம் (Brampton)

••••

திரு. சுரேஸ் (அகணி) அவர்களால் தங்கள் பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வரும் கணினி சம்பந்தமான கட்டுரையை தொடர்ந்து வாசிக்கும் வாசகர்களில் நாங்களும் இருவர். மேற்படி கட்டுரையில் கணினி சம்பந்தமான விடயங்களை விலாவாரியாக எழுதி வருவதோடு அவற்றிற்குரிய ஆங்கில தமிழ்ப் பதங்களையும் குறிப்பிட்டு, சாதாரணமானவர்களும் விளங்கிக்கொள்ளும்படியாக எழுதி வருவது வரவேற்கத் தக்கது. அவர் தொடர்ந்தும் இன்னும் பல கட்டுரைகளை எழுத வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் இவர் இல.1160, அலகு 2 (A) பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள மண்டபத்தில், முதியோர் மேம்பாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கு தன்னார்வத் தொண்டனாக கடந்த மூன்று வருடங்களாக கணினியை கற்பித்து வருகிறார். அக்கழக அங்கத்தவர்களாகிய நாங்களும் அவரிடம் கணினி கற்று வருவதில் பெருமை அடைகின்றோம். இவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதும், கனடா தமிழீழச் சங்கத்தில் நிறைவேற்று இயக்குனராக சேவையாற்றுகிறார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. அவருடைய சேவைகள் தொடர விளம்பரம் பத்திரிகை வாசகர்களாகிய நாங்களும் முதியோர் மேம்பாட்டுக்கழக அங்கத்தவர்களும் மனமார வாழ்த்துகின்றோம்.

இவை தவிர தங்கள் பத்திரிகையில் வெளிவரும் ஆக்கங்களை எழுதிவரும் சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், கலகலப்பு தீசன், வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) ஆகியோருக்கும் எங்கள் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

அன்புடன்
மார்க்கம். சந்திரன், பவானி. சந்திரன்

# தமிழ் மாதங்கள்

கடந்த இதழ் தொடர்ச்சி...

தமிழ் ஆண்டுகள் அறுபதாக பிரிக்கப்பட்டுள்ளன. சுழற்சி முறையில் இப்பெயர்கள் ஆண்டுகளுக்கு இடப்படுகின்றன.

| எண் | பெயர் | கிரெகொரியின் ஆண்டு | எண். | பெயர் | கிரெகொரியின் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| 01. | பிரபவ | 1987–1988 | 31. | ஹேவிளம்பி | 2017–2018 |
| 02. | விபவ | 1988–1989 | 32. | விளம்பி | 2018–2019 |
| 03. | சுக்ல | 1989–1990 | 33. | விகாரி | 2019–2020 |
| 04. | பிரமோதூத | 1990–1991 | 34. | சார்வரி | 2020–2021 |
| 05. | பிரசோற்பத்தி | 1991–1992 | 35. | பிலவ | 2021–2022 |
| 06. | ஆங்கீரச | 1992–1993 | 36. | சுபகிருது | 2022–2023 |
| 07. | ஸ்ரீமுக | 1993–1994 | 37. | சோபகிருது | 2023–2024 |
| 08. | பவ | 1994–1995 | 38. | குரோதி | 2024–2025 |
| 09. | யுவ | 1995–1996 | 39. | விசுவாசுவ | 2025–2026 |
| 10. | தாது | 1996–1997 | 40. | பரபாவ | 2026–2027 |
| 11. | ஈஸ்வர | 1997–1998 | 41. | பிலவங்க | 2027–2028 |
| 12. | வெகுதானிய | 1998–1999 | 42. | கீலக | 2028–2029 |
| 13. | பிரமாதி | 1999–2000 | 43. | சௌமிய | 2029–2030 |
| 14. | விக்கிரம | 2000–2001 | 44. | சாதாரண | 2030–2031 |
| 15. | விஷு | 2001–2002 | 45. | விரோதகிருது | 2031–2032 |
| 16. | சித்திரபானு | 2002–2003 | 46. | பரிதாபி | 2032–2033 |
| 17. | சுபானு | 2003–2004 | 47. | பிரமாதீச | 2033–2034 |
| 18. | தாரண | 2004–2005 | 48. | ஆனந்த | 2034–2035 |
| 19. | பார்த்திப | 2005–2006 | 49. | ராட்சச | 2035–2036 |
| 20. | விய | 2006–2007 | 50. | நள | 2036–2037 |
| 21. | சர்வசித்து | 2007–2008 | 51. | பிங்கள | 2037–2038 |
| 22. | சர்வதாரி | 2008–2009 | 52. | காளயுக்தி | 2038–2039 |
| 23. | விரோதி | 2009–2010 | 53. | சித்தார்த்தி | 2039–2040 |
| 24. | விக்ருதி | 2010–2011 | 54. | ரௌத்திரி | 2040–2041 |
| 25. | கர | 2011–2012 | 55. | துன்மதி | 2041–2042 |
| 26. | நந்தன | 2012–2013 | 56. | துந்துபி | 2042–2043 |
| 27. | விஜய | 2013–2014 | 57. | ருத்ரோத்காரி | 2043–2044 |
| 28. | ஜய | 2014–2015 | 58. | ரக்தாட்சி | 2044–2045 |
| 29. | மன்மத | 2015–2016 | 59. | குரோதன | 2045–2046 |
| 30. | துன்முகி | 2016–2017 | 60. | அட்சய | 2046–2047 |

## தமிழ் ஆண்டுகள்

அபிதான சிந்தாமணியில் (1932) தமிழ் ஆண்டுகள் என்று கூறப்பட்ட ஆண்டுகள் பெயர்கள்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

TUTORING
@ GTA Square
Saturday & Sunday 9:00 To 11:00
• Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
• Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
• Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )
Kamal: 416.696.5007 / 647.268.5007
15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)



APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# தொலைக்காட்சி

கேள்வி: சத்குரு, தொலைக்காட்சி எங்கள் நேரத்தை அதிகமாக ஆக்கிரமித்துக் கொள்கிறது. நாங்களே அதை விரும்பிப் பார்ப்பதால் எங்கள் குழந்தைகளையும் அதிகமாக தடுக்க முடியவில்லை. இதைக்குறித்து தங்கள் கருத்து அறிய விரும்புகிறோம்.

சத்குரு: நீங்கள் விரும்பும்படி வாழ்வதற்கான தைரியம் உங்களுக்கில்லை. எனவேதான் சினிமாவோ அல்லது டிவியோ மிகவும் விரும்பி பார்க்கிறீர்கள். சினிமா அல்லது டிவியில் நீங்களாக உங்கள் வாழ்க்கையில் எதுவும் செய்யத் தேவை இருக்கவில்லை. ஏனெனில் உங்களுக்காக உங்கள் கதா நாயகன், உங்கள் கதாநாயகி காதலிக்கிற னர். சண்டை போடுகிறார்கள், குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள், எல்லாமே அவர்கள் செய்கிறார்கள். நீங்கள் எதுவும் செய்யத் தேவையிருக்கவில்லை. எனவே தான் அனைவரும் டிவியை விரும்புகிறார்கள். மற்றவர்கள் மூலமாக தாங்கள் வாழ நினைக்கிறார்கள். நீங்கள் சென்று யாரையா வது காதலிக்க வேண்டுமென்றால் ஏகப்பட்ட பிரச்சினைகள் வரும், இல்லையா? நீங்கள் சென்று யாருடனாவது சண்டையிட வேண்டு மென்றால் ஏகப்பட்ட பிரச்சினைகள் வரும். ஆனால் இப்போது உங்கள் கதாநாயன் உங்களுக்காக காதலிக்கும்போதோ அல்லது சண்டையிடும் போதோ உங்களுக்கு ஒரு பிரச்சினையுமில்லை, வீட்டிலேயே உட் கார்ந்து எல்லா அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளலாம். எங்கும் போகத் தேவை யில்லை, எதுவும் செய்யத் தேவையில்லை. நீங்கள் யாரையெல்லாம் வீட்டிற்குள் விட

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

மாட்டர்களோ அவர்களெல்லாம் டிவி மூலமாக உங்கள் வீட்டிற்குள் புகுந்து விட்டார்கள். குடிகாரர்கள், கொலைகாரர்கள், பேய், பிசாசு... எல்லோரும் உங்கள் வீட்டிற்குள் வந்து நடனமாடிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள்தான் முடிவெ டுக்க வேண்டும், எந்த அளவிற்கு அவர்களை உங்கள் வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டும் என்று. இல்லையென்றால் முழு வீட்டையும், உங்கள் மனதையும், குழந்தைகள் மனதையும் முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்வார்கள். நவீன விஞ்ஞானத்தால் ஏற்பட்ட மன முதிர்ச்சியற்ற விளைவுகளில் இது ஒன்று. எதையாவது புதிதாக கண்டுபிடித்து விட்டால் அதை உடனே உலகம் முழுக்க பரப்பிவிட துடிக்கிறார்கள். ஏனெனில் அதில் பணம் புழங்குகிறது. மற்றொரு காரணம், சிறிது தாமதம் செய்து விட்டாலும் வேறு யாராவது அதேபோல் கண்டுபிடித்து பணம் பண்ணி விடுவார்கள்.

புதிய கண்டுபிடிப்புகளில் நன்மை இல்லாமல் இல்லை. ஆனால் எந்த ஒரு கண்டுபிடிப்பை யும் எந்த அளவிற்கு பயன்படுத்துவது என்று நாமும் பார்க்க வேண்டும். இப்போது 24 மணி நேரமும் டிவி ஓடுகிறது. 200 சேனல்களுக்கு மேல் இருக்கிறது. எனவே எல்லா சேனலும் உங்களை எப்படி கவர்வது என்று 24 மணி நேரமும் போட்டி போடுகின்றன. எனவேதான் பேயும் பிசாசும் உங்கள் டிவியில் உலவுகின்றன. குழந்தைகள் அந்தக் காட்சி களைப் பார்க்கும்போது பயப்படுபவர்களா கவும் மனக் கோளாறுடனும் வளர்வார்கள்.


எதையாவது புதிதாக கண்டுபிடித்தால் 10 வருடம் கழித்து அந்தக் கண்டுபிடிப்பால் என்னென்ன பிரச்சினை ஏற்பட்டன என்று விரிவாக சொல்கிறார்கள். உடனே வேறொன்று புதிதாக அறிமுகப்படுத்துகிறார் கள். அடுத்து பத்து வருடம் கழித்து கடைசியாக வந்த கண்டுபிடிப்பில் ஏற்பட்ட பிரச்சினைகள் என்னென்ன என்று அடுக்குகிறார்கள். இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கை எப்போதும் உங்களைத் தொடர்ந்து மன்னித்துக் கொண்டே இருக்காது. நமக்கு ஏதாவது ஒன்றில் கூட முழுமையாக புரிதல் இல்லை. மருத்துவத்தில் கூட ஒவ்வொன்றுக்கும் சிறப்பு மருத்துவரை வைத்திருக்கிறோம். கண்ணுக்கு ஒரு மருத்துவர், மூக்குக்கு ஒரு மருத்துவர், காதுக்கு ஒரு மருத்துவர், விஞ்ஞானம் இப்படித்தான் ஒவ்வொன்றையும் பகுத்துக் கொண்டே போகிறது. மனிதனின் தேவை கள் குறித்து முழுமையாக சிந்திப்பவர் யாரும் இல்லை.

அமெரிக்காவில் டிவி, வீடியோ போன்ற ஒளி ஊடகங்களில் மக்கள் அதிக நேரம் செலவழிக்கிறார்கள். சிறுவர்களை விட இளைஞர்கள் அதிக நேரத்தை செலவழிக் கிறார்கள். சிறுவர்களை விட இளைஞர்கள் அதிகம் வீடியோ கேம்ஸ் விளையாடு கிறார்கள். 26லிருந்து 30 வயதுவரை உள்ள இளைஞர்கள்தான் அதிகம் வீடியோ கேம்ஸ்ல் உட்கார்ந்து கொண்டு டிஸ்யூம் டிஸ்யூம் என்று சுட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இன்னமும் சிறுவர்களாகவே இருக்கிறார்கள். வளர்ச்சி பெறவே இல்லை. அந்த வயது வாலிபர்களில் சுமார் 34 சதவீத மக்கள் இப்படி 1 நாளில் சுமார் 6 மணி நேரம் விளையாடுகிறார்கள். இது தேசத்தின் வளர்ச்சிக்கே அழிவைக் கொடுக்கும்.

இப்போது அமெரிக்காவில் ஒரு வருடத்தில் சுமார் 5000 பொறியாளர்கள்தான் உருவாகிறார்கள். ஆனால் சீனாவில் 620,000 பொறியாளர்கள் உருவாகிறார்கள். இளைஞர் இது போன்று டிவி, டிவி கேம்ஸ்ல் தீவிரமாக ஈடுபடும்போது இது போன்ற சரிவு தவிர்க்க முடியாதது. 11, 12 வயது சிறுவர்கள் இது போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டால் அது வேறு. ஆனால் 25 வயது இளைஞர்கள் வாழ்க்கையில் ஒரு உத்வேகத்துடன் ஈடுபட வேண்டிய நேரத்தில் இது போன்ற மனதைக் கெடுக்கும் செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது கண்டிப்பாக தேசத்தை சேதத்திற்கு இட்டுச் செல்லும். இந்த சேதம் பொருளாதாரம் பற்றியதாக மட்டும் இருக்காது.

10 வருடங்களுக்கு முன்பு டிவியைத் திறந்தால் காட்சிகள் மெதுவாக நகரும். இப்போது.. காட்சிகள் மின்னல் வேகத்தில் இருக்கின்றன. இது அனைவருக்கும் குறிப்பாக குழந்தைகளுக்கு மிகவும் கெடுதல். அந்தக் காட்சிகளை பார்ப்பவர்கள் டிவிக்கு முன்பு நிறைய நேரம் உட்கார்ந்திருக்கும்போது கண்களைக்கூட மூடாமல் அசையாமல் உட்கார்ந்து பார்க்கிறார்கள். இவையெல்லாம் அவர்களுக்கு சிறிது காலம் கழித்து துன்பம் தரும். ஏனெனில் நீங்கள் பார்க்கும் ஒவ்வொரு காட்சியும், கேட்கும் ஒவ்வொரு சத்தமும், மூளையில் ஒரு குறிப்பிட்ட விதத்தில் விளைவை உண்டாக்குகிறது. அவை அவர்கள் மனதிற்குள்ளேயே இருந்து நீண்ட காலத்திற்கு வினையாற்றும். குழந்தை கள் வீட்டில் இன்டர்நெட் பார்க்கிறார்கள். தெருவில் வீடியோ கேம் விளையாடுகிறார் கள். விளையாட்டிலேயே குண்டு எறிகிறார்கள, துப்பாக்கியால் சுடுகிறார்கள். உலகத்தின் உண்மை நிலையை சிறுவர்களும் அறிவதில் தவறில்லை என நாம் நினைத்துக் கொள்கிறோம். ஆனால் விளைவு சாதாரணமாக இருப்பதில்லை.

யாரோ ஒருவர் இது போன்ற விளையாட்டுக் கருவிகளை வைத்துக்கொண்டு பணம் பண்ண முயற்சித்தால் நாம் அதை அனுமதிக்கக் கூடாது. இது குழந்தைகளின் மனநிலையை கண்டிப்பாக மாற்றும். சில காலம் கழித்து அவர்கள் தங்கள் மனதையே கையாள முடியாமல் போய்விடும். பிம்பங்கள் திரையில் வரும் தற்போதைய வேகம் கண்டிப்பாக அவர்களுக்கு கெடுதலைத்தரும். இதுபோன்ற காட்சிகளை தொடர்ந்து பார்க்கும் சிறுவர்களுக்கு பின்னாளில் தியானம் கூட சொல்லித்தர முடியாது. ஏனெனில் அவர்களால் ஒரு இடத்தில் நிலையாக உட்கார முடியாது, அப்படி மாறி விடுவார்கள். இப்போது நம் நாட்டில் பள்ளிச் சிறுவர்களை வைத்துப் பார்த்தால் கூட, கிராமத்துச் சிறுவர்கள் எந்த சிரமமுமின்றி ஒரே இடத்தில் நிலையாக உட்கார



சத்குரு வாசுதேவ்

முடிகிறது. ஆனால் நகரத்துச் சிறுவர்களால் அப்படி உட்கார முடிவதில்லை.

மனிதனுடைய நோயே எதிலும் நிலையாக, உறுதியாக இருக்க முடியாததுதான். உடலளவில், மன அளவில் அல்லது எதிலும் உறுதியாக இருக்க முடியாததுதான் அவனுக்கு நோயாக மாறுகிறது. தாங்கள் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக பலர் மனிதர்களை இந்த நிலைக்கு ஆளாக்கி விடுகிறார்கள். மனிதர்களின் வாழ்வில் ஒரு சிறிது நேரம் கூட அமைதி இருப்பதில்லை. நான்கு பேர் சேர்ந்து உலாவச் சென்றால் கூட அந்த நால்வருமே தனித்தனியாக வேறு யாரோ ஒருவருடன் செல்போனில் பேசிக் கொண்டே நடக்கிறார்கள். நமது மனிதநேயம் கூட தற்போது இத்தனை குழந்தைத் தனமாகத்தான் இருக்கிறது. நாம் எதிலாவது ஆர்வப்பட்டு விட்டால் எந்த இடத்தில் நிறுத்திக் கொள்வது என்பது தெரியவில்லை. விளைவு பற்றி கவனமில்லாமல் செயல்படுகிறோம்.

எப்போதையும் விட தற்போதைய மனித சமுதாயம் மிகவும் வலிமையிழந்து இருக்கிறது. தொழில் நுட்பம் என்று பார்த்தால் மிகவும் அற்புதமானவைகள் சாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உடல் அளவில், மன அளவில், பெரும்பாலான மக்கள் வலுவிழந்து இருக்கிறார்கள். ஒலி-ஒளி சாதனங்களின் பயன்பாட்டை மக்கள் மிகவும் குறைத்து கொள்ள வேண்டும். இந்த சாதனங்கள் இல்லாதிருந்தால், நீங்கள் அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் உலாவச் சென்றிருப்பீர்கள், விளையாடச் சென்றிருப்பீர்கள், ஆனால் அதைவிடுத்து அவற்றின் முன் மணிக்கணக் காக உட்காரும்போது, உங்களுக்கு பதிலாக அந்தத்திரைக்குள் வேறு யாரோ உலாவச் செல்கிறார்கள். உங்களுக்காக விளையாடு கிறார்கள். உங்களுக்காக மலையேறுகிறார் கள். நீங்கள் வாழ்க்கையில் எதுவும் செய்யத் தேவையில்லை. அந்தத்திரையோடு சேர்த்து உங்களுக்காக ஒரு சவப் பெட்டியையும் இணைத்து விடலாம் போலிருக்கிறது.

நகரத்தில் இருப்பவர்களுக்கு டிவி பார்ப்பது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே இருக்கி றது. அவர்கள் ஆசிரமத்திற்கு வந்தால் அங்கிருப்பவர்களை பார்த்து, “ஓ, நீங்கள் டிவி கூட பார்ப்பதில்லையா?” என்று பரிதாப மாக கேட்கிறார்கள். ஆசிரமத்து மக்கள் வாழ்க்கையில் ஏதோ தவறவிடுவதைப் போல முடிவெடுக்கிறார்கள். ஆசிரமத்து மக்கள் டிவி பார்க்காததால் எதையும் இழந்துவிட வில்லை. நீங்கள் ஏதாவது கிணற்றிற்குள் விழுந்து சிக்கிப்போய்விட்டால், கிணற்றில் நடப்பது மட்டுமே வாழ்க்கை என்று நினைக்கிறீர்கள்.

நீங்கள் எங்காவது மலைப்பகுதிக்கோ, ஏரி அல்லது சமுத்திரப் பகுதிக்கோ சென்று 2, 3 நாட்கள் தங்கியிருந்தால், திடீரென்று அனைத்துமே உங்களுக்குள் ஒரு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



# மோட்கேஜ்-கிளினிக்

வோக்-இன் **சனிக்கிழமை** தோறும் 9.00am -5.00 pm வரை

சீறோ டவுனில வீட்டை வாங்கிப்போட்டு

கஷ்டப்படுகிறீர்களா?

மோட்கேஜ் = வீடு

மிச்சகடன் = எதிர்கால வாழ்க்கைக்கடன்

மிச்சக்கடன் எல்லாத்தையும் ஒன்றாக்க

மாதாந்தம் தவணைப்பணம் செலுத்தாத

செக்கன்ட் மோட்கேஜ் தேவையா?

மோட்கேஜ் செய்யிறமோ இல்லையோ உங்களுக்கு

பொருத்தமான இலவச ஆலோசனை தரலாம்.

வந்துபேசிப்பாருங்கோ!! பிடிச்சிருந்தா .......... எல்லாம் செய்வம் !!



**416-644-3555**

**CENTUM Rapid Mortgages Inc.**

FSCO LIC # 10156

Office: T.P: 416-644-3555 Fax: 888-644-3556

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



தயா PK கந்தையா BAS, ABR, AMP

**Principal Broker / President**

FSCO License # M 08001083

T.P : 416-716-8707

ஜெ. இராசதுரை (Jey) MBA, BBA (Hons), AMP

**Mortgage Development Manager & Agent**

FSCO License # M 09001428

T.P : 416-624-4843

rapid realty inc. 416-259-2002 "Rapid Response; Rapid Results"

# 2012ஆம் ஆண்டு விளையாட்டுக்கு மிக முக்கியமான ஆண்டு

## விளையாட்டுத் தகவல்கள்

344

2012ஆம் ஆண்டு விளையாட்டுக்கு மிக முக்கியமான ஆண்டு என்றே கூறலாம். இவ்வருடத்தில் லண்டனில் நடைபெற்ற பிரம்மாண்ட ஒலிம்பிக் போட்டி, டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர், யூரோ கிண்ண கால்பந்து தொடர், கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்கள் போன்ற எண்ணற்ற போட்டிகள் நடைபெற்றன.

### யூரோ கிண்ண கால்பந்து:

சாம்பியன் பட்டத்தை வென்றது ஸ்பெயின். ஐரோப்பிய கிண்ண இறுதி ஆட்டத்தில் இத்தாலியை 4-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி நடப்பு சாம்பியன் ஸ்பெயின் கிண்ணத்தை தக்க வைத்துக் கொண்டது. ஐரோப்பிய கிண்ண கால்பந்து போட்டி கடந்த ஜுன் மாதம் 8ஆம் திகதி போலந்து மற்றும் உக்ரேனில் தொடங்கியது. இந்த போட்டியில் ஐரோப்பிய கண்டத்தை சேர்ந்த முன்னணி 16 அணிகள் பங்கு பெற்றன. இதில் சி பிரிவில் இடம் பெற்றிருந்த நடப்பு சாம்பியன் ஸ்பெயின் மற்றும் இத்தாலி அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின. அரை இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் போர்ச்சுகல் அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. மற்றொரு அரை இறுதியில் இத்தாலி 2-1 என்ற கோல் கணக்கில் வலுவான ஜேர்மனி அணியை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டி உக்ரேனின் கீவ் நகரில் நடைபெற்றது. ஸ்பெயின் அணியில் முதல் 11 பேர் அணியில் பெப்ரிகாஸ் இடம் பெற்றார். இத்தாலி அணியில் எந்த பெரிய மாற்றமும் இல்லை. ஜேர்மனிக்கு எதிராக விளையாடிய அதே வீரர்களே இந்த ஆட்டத்திலும் களம் இறங்கினர். ஆரம்பம் முதலே ஸ்பெயின் அதிரடியாக விளையாடியது. இதனால் 14வது நிமிடத்தில் ஸ்பெயின் முதல் கோலை அடித்து இத்தாலிக்கு அதிர்ச்சியை அளித்தது. மைதானத்தின் வலது பக்கத்தில் இருந்து கிட்டத்தட்ட மைனஸ் டிகிரியில் இருந்து பெப்ரிகாஸ் கிராஸ் செய்த பந்தை மான்செஸ்டர் சிட்டி வீரர் டேவிட் சில்வா தலையால் முட்டி கோலுக்குள் அடித்தார். இந்தக் கோல் மூலம் ஸ்பெயின் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. தொடர்ந்து 41வது நிமிடத்தில் ஸ்பெயின் அடுத்த கோலை போட்டது. நடுகளத்தில் இருந்து சேவி செய்த பாஸை பெற்ற ஜோர்டி ஆல்பா அதனை மிக நேர்த்தியாக கோலாக மாற்றினார். முதல் பாதியில் ஸ்பெயின் 2-0 என்று முன்னிலை பெற்றது. பிற்பாதியில் ஆன்டனியோ காசோனாவுக்கு பதிலாக 34 வயது அனுபவமிக்க உடினிஸ் ஸ்டிரைக்கர் ஆன்டானியோ டி நடாலி களம் இறக்கப்பட்டார். இறங்கிய உடனே மிக அருமையாக ஒரு ஹெடிங் செய்தார். ஆனால் ஸ்பெயின் கோல்கம்பத்துக்கு சற்று மேலே சென்றதால் கோலாகவில்லை. இரு கோல்கள் பின்தங்கிய நிலையில் இத்தாலி வீரர்கள் கோல் அடிக்க கடும் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் ரியல்மாட்ரிட் கோல்கீப்பர் இகெர் கேசிலாஸ் இத்தாலி வீரர்களின் கோல் முயற்சிகளை தகர்த்து எறிந்து விட்டார். பின்னர் மாற்று ஆட்டக்காரராக இறங்கிய ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ டார்ரஸ் தன் பங்குக்கு 84வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். ஸ்பெயின் அணிக்காக டார்ரஸ் அடிக்கும் 31வது சர்வதேச கோல் இதுவாகும்.

முதல் சுற்று லீக் ஆட்டத்தில் இத்தாலியிடம் கடும் பாடு பட்ட ஸ்பெயின் இறுதி ஆட்டத்தில் இத்தாலியை உண்டு இல்லை என்று ஆக்கியது. ஆட்டத்தின் இறுதிக்கட்டத்தில் 88வது நிமிடத்தில் ஸ்பெயின் 4வது கோலை அடித்தது. பெர்னான்டோ டார்ரஸ் பாஸ் செய்த பந்தை ஜுவான் மாத்தா வளைக்குள் தள்ள ஆட்ட நேர இறுதியில் ஸ்பெயின் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது. ஐரோப்பிய கிண்ண வரலாற்றில் முதல் முறையாக 4 கோல் அடித்து ஸ்பெயின் கிண்ணத்தை கைப்பற்றியது புதிய சாதனை ஆகும். இதற்கு முன் 1964, 2008ம் ஆண்டுகளில் ஸ்பெயின் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

### பிரீமியர் லீக் சாம்பியன் பட்டத்தை 44 ஆண்டுகளுக்கு பின்பு வென்றது மான்செஸ்டர் சிட்டி

பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் சிட்டி அணி 3-2 என்ற கோல் கணக்கில் குயின்ஸ்பார்க் ரேஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி 44 ஆண்டுகள் கழித்து பிரீமியர் லீக் பட்டத்தை வென்றது. பிரீமியர் லீக்கி போட்டியின் கடைசி நாள் ஆட்டங்கள் நடைபெற்றது. இதுவரை நடந்த 37 ஆட்டங்கள் மூலம் மான்செஸ்டர் யுனைடெட் அணியும், மான்செஸ்டர் சிட்டி அணியும் தலா 86 புள்ளிகள் பெற்றிருந்தன. எனினும் கோல் வித்தியாசத்தில் மான்செஸ்டர் சிட்டி முதலிடத்தில் இருந்தது. மேலும் சிட்டி அணி 1968ஆம் ஆண்டுக்கு பிறகு இங்கிலீஸ் பிரீமியர் லீக்கில் பட்டம் வென்றதில்லை. குயின்ஸ்பார்க் ரேஞ்சர்ஸ் அணிக்கெதிரான இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றால் பிரீமியர் லீக் பட்டத்தை வெல்ல முடியும், என்ற நிலையில் சிட்டி அணி களமிறங்கியது. தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடிய மான்செஸ்டர் சிட்டி 39வது நிமிடத்தில் முதல் கோல் அடித்தது. இந்த சீசனில் இவர் அடித்த ஒரே கோல் இதுதான். முதல் பாதியில் சிட்டி 1-0 என்று முன்னிலையில் இருந்தது. பிற்பாதியில் 48வது நிமிடத்தில் மான்செஸ்டர் சிட்டியின் தடுப்பாட்டக்காரர் லெஸ்காட் செய்த தவறால் குயின்ஸ்பார்க் பதில் கோல் அடித்து போட்டி 1-1 என்று சமநிலை கண்டது. இந்நேரத்தில் குயின்ஸ்பார்க் வீரர் பர்ட்டன், சிட்டி வீரர் கார்லஸ் டாவெஸை முழங்கையால் இடித்ததால் நடுவர் பர்ட்டனுக்கு சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றினார். இதை தொடர்ந்து குயின்ஸ்பார்க் 10 வீரர்களுடன் விளையாடியது. ஆனால் 10 வீரர்களுடன் விளையாடிய குயின்ஸ்பார்க் சளைக்காமல் போராடி ஆட்டத்தின் 68வது நிமிடத்தில் 2வது கோல் அடித்தது. இதன் மூலம் குயின்ஸ்பார்க் 2-1 என்று முன்னிலை பெற்றது. ஆட்டம் சமனில் முடிந்தால் கூட மான்செஸ்டர் யுனைடெட் பட்டம் வென்று விடும் என்ற நிலையில் சிட்டி வீரர்கள் போராடினார்கள். ஆனால் ஸ்டாப்பேஜ் நேரத்தில் நிலைமை மாறத்துவங்கியது. 92வது நிமிடத்தில் மான்செஸ்டர் சிட்டியின் எடின் டெசூகா தலையால் முட்டி 2வது கோலை அடித்தார். தொடர்ந்து 94வது நிமிடத்தில் பெனால்டி ஏரியாவுக்குள் பொலி ட்டலி கொடுத்த பாஸை செர்ஜியோ அகுவாரா கோலாக மாற்ற ஈஸ்ட்லேண்ட் மைதானமே அதிர்ந்தது.

தோற்கும் நிலையில் இருந்த மான்செஸ்டர் சிட்டி ஸ்டாப்பேஜ் நேரத்தில் அதிரடியாக விளையாடி 2 கோல்கள் அடித்து 3-2 என்ற கோல் கணக்கில் குயின்ஸ்பார்க்கை வீழ்த்தியதோடு 3 புள்ளிகளையும் ஈட்டியது. நடப்பு சீசனில் 38 ஆட்டங்கள் முடிவில் மான்செஸ்டர் சிட்டி மான்செஸ்டர் யுனைடெட் அணிகள் தலா 89 புள்ளிகள் பெற்றிருந்தாலும் அதிக கோல்கள் அடித்த அடிப்படையில் சிட்டி பிரீமியர் லீக் பட்டத்தை தட்டி சென்றது. இதற்காக மான்செஸ்டர் சிட்டி 44 ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது. அதே வேளையில் சுந்தர்லேண்டுக்கு எதிரான ஆட்டத்தில் 1-0 என்று வெற்றி பெற்ற நடப்பு சாம்பியன் மான்செஸ்டர் யுனைடெட் பட்டத்தை பறிகொடுத்தது. இந்த அணி 2007 முதல் 2011 வரை தொடர்ச்சியாக 4 சீசனில் இங்கிலீஸ் பிரீமியர் லீக் பட்டத்தை தன்வசம் வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### 100வது சதத்தை நிறைவு செய்து உலக சாதனை படைத்தார் சச்சின்


இந்தியாவின் முன்னணி நட்சத்திர துடுப்பாட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர் தனது நூறாவது சதத்தை நிறைவு செய்தார்.ஆசிய கிண்ண கிரிக்கட் போட்டியின் வங்கதேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் பல கடும் விமர்சனங்களுக்கு அடுத்து இந்த சாதனையை எடுத்துள்ளார். கிரிக்கட் உலகின் நட்சத்திர துடுப்பாட்டக்காரர் சச்சின் தெண்டுல்கர் 2011 உலகக்கோப்பை தொடரின் போது இங்கிலாந்திற்கு எதிரான ஆட்டத்தில் 120 ஓட்டங்கள் எடுத்து தனது 98 வது சதத்தை நிறைவு செய்தார். அதனையடுத்து மார்ச் 12, 2011 அன்று தென் ஆபிரிக்க அணிக்கெதிரான ஆட்டத்தில் 111 ஓட்டங்கள் எடுத்து தனது 99 வது சதத்தை பூர்த்தி செய்தார். அதன் பிறகு பல்வேறு டெஸ்ட் தொடர்கள், ஒருநாள் போட்டித் தொடர்களில் விளையாடிய போதும் அவரால் தனது 100 வது சதத்தை நிறைவேற்ற முடியாமல் திணறினார். கடந்த நவம்பரில் மேற்கந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டி ஒன்றில் 94 ஓட்டங்களில் ஆட்டமிழந்து 6 ஓட்டங்களில் சதமடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். இதையடுத்து, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியத் தொடரின் போது சச்சின் ஓட்டங்கள் எடுக்க திணறினார். இதனால் முன்னாள் கிரிக்கெட் வீரர்களின் விமர்சனத்திற்கு ஆளானார். அவரை அணியிலிருந்து நீக்க வேண்டும் என்று கபில்தேவ் உட்பட சிலர் கருத்து தெரிவித்திருந்தனர். இருப்பினும் சச்சின் மேல் நம்பிக்கை கொண்ட இந்திய தெரிவுக்குழு ஆசியக் கிண்ண தொடரில் வாய்ப்பு அளித்தது. இலங்கைக்கு எதிரான போட்டியில் 6 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்த சச்சின் வங்கதேசத்திற்கு எதிரான இன்றைய போட்டியில் தனது 100 வது சதத்தை அடித்து உலக சாதனை படைத்தார். சர்வதேச ஒருநாள் அரங்கில் இது அவருக்கு 49 வது சதமாகும். 138 பந்துகளை சந்தித்து 10 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உட்பட 100 ஓட்டங்கள் அடித்து இச்சாதனையைச் சச்சின் படைத்துள்ளார். தனது 99 வது சதத்திற்குப் பின்பு சரியாய் 370 (ஒரு வருடம், நான்கு நாட்கள்) நாட்கள் கழித்து தனது 100 வது சதத்தை பூர்த்தி செய்துள்ளார். தற்போது வரை 461 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 49 சதம், 95 அரை சதம் விளாசியிருக்கிறார். 188 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 51 சதம், 65 அரை சதம் விளாசி சச்சின் டெண்டுல்கர் உலக சாதனை படைத்திருக்கிறார். மேலும், இந்த போட்டியின் மூலம் 2000 பவுண்டரிகளையும் கடந்து சச்சின் உலக சாதனை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### டி20 உலகக் கிண்ணம்

நான்காவது டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் செப்டெம்பர் 18ம் திகதி முதல் ஒக்டோபர் 7ம் திகதி வரை நடைபெற்றது. இத்தொடரில் இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் உட்பட 12 அணிகள் பங்கேற்றன. ஆடவர் பிரிவின் இறுதிச்சுற்றில் மேற்கிந்திய தீவுகள் அணி, இலங்கை அணியுடன் மோதியது. இதில் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் அணி கிண்ணத்தை வென்றது. இப்போட்டியின் நாயகனாக மேற்கிந்திய தீவுகள் அணியின் மர்லோன் சாமுவேல்ஸ் தெரிவானார். இத்தொடரின் நாயகனாக அவுஸ்திரேலியாவின் ஷேன் வாட்சன் தெரிவானார். இந்த தோல்வியின் மூலம் இலங்கை அணி தொடர்ந்து நான்காவது முறையாக இறுதிச்சுற்றில் உலகக் கிண்ணத்தை தவறவிட்டது.

### டென்னிஸ்

சர்வதேச டென்னிஸ் தொடரில் அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் நடைபெற்றன. அவுஸ்திரேலியா ஓபன் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஜனவரி 16ம் திகதி முதல் 29ம் திகதி வரை நடைபெற்றது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் உலகத் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் ரபேல் நடாலை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார். அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: ஜோகோவிச் சாம்பியன் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகத் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் பெலாரசின் விக்டோரியா அசரென்கா, ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். இவர் வென்ற முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். அவுஸ்திரேலிய ஓபன்: விக்டோரியா அசரென்கா சாம்பியன் பிரெஞ்சு ஓபன் பிரெஞ்சு ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மே 27 முதல் யூன் 11ம் திகதி வரை நடைபெற்றது. ஆடவர் பிரிவில் ஸ்பெயினின் ரபேல் நடால், செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை வீழ்த்தி 7வதுமுறையாக பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்று சாதனை படைத்தார். பிரெஞ்சு ஓபன் சாம்பியன் பட்டத்தை வென்றார் நடால் மகளிர் பிரிவில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, இத்தாலியின் சரா எர்ரானியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். பிரெஞ்சு ஓபன்: முதன் முறையாக மரியா



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# 2012 ஆதன வியாபாரம் மீள்பார்வை!

வழமைபோல, 2012ஆம் ஆண்டிலும் பலவித எதிர்பார்ப்புகளுடனும் ஏமாற்றங்களுடனும் ஆதன வியாபாரம் கரையேறியுள்ளது. 2012 ஆன் ஆரம்பத்தில் எதிர்மறையாகவே தொடங்கியது. இருந்தபோதிலும் முதல் 6 மாதங்களிலும் ஜனவரியிலிருந்து யூன் 2012 வரை மிகவும் ஆரோக்கியமான



வியாபாரமாகவே இருந்தது. விலை 09, 2012 இல் இருந்து ஏற்றம், அதிகரிக்கப்பட்ட ஆதனவியாபாரம் மிகவும் மும்முரமாகக் காணப்பட்டது. மத்தியவங்கி ஆளுனர், மத்தியவங்கி அமைச்சர்கள் பலவிதமான எதிர்மறை எதிர்வு கூறுகளை கூறியபோதிலும் எதுவித பயனும் ஏற்படவில்லை. இறுதி ஆயுதமாக அடமானக் கடன் வழங்கும் முறையில் இறுக்கமான முறையை யூலை நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இறுக்கமான நிலை விலையிலும் வியாபாரத்திலும் இறுக்கமான, மந்தமான நிலையை ஏற்படுத்தியது. தொடர்ச்சியாக டிசம்பர் 2012 வரை ஆதனவியாபாரம் மந்தநிலையாகவே இருந்தது. குறிப்பிடும் படியாக அடுக்குமாடி மனை வியாபாரத்தில் இதனை மிகவும் இலகுவாகக் காணக்கூடியதாக இருந்தது. 2012 ஆண்டின் இறுதியில் சராசரி வீட்டு விலை $497,298 ஆகக் காணப்பட்டது. ஏறக்குறைய 7% அதிகரிப்பாக முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காணப்பட்டது. ஆனால் மொத்த வியாபாரம் (November of sales 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது) ஏறக்குறைய 4%குறைவாகக் காணப்பட்டது. 2012ஆம் ஆண்டின் ஆதனத்தின் சராசரிவிலை இதுவரையில் ஆகக்கூடியதாகக் காணப்படுகின்றது. கடந்த 15 வருடங்களாக ஆதனவிலை அதிகரித்தே வந்துள்ளது. இருந்தபோதிலும் இந்த காலகட்டத்தில் சில வருடங்களில் மொத்தமாக கைமாறிய வீடுகள் குறைந்தும் காணப்பட்டுள்ளது. குறிப்பாக 2007 அதிகூடியதாக 93,193 ஆதனங்கள் கைமாறியுள்ளன. 2011ஆம் ஆண்டும் 89,096 ஆதனங்கள் கைமாறியுள்ளன.

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 382

ஆதனம் வாங்குவதற்கு போதியளவு வாங்குனர்கள் ஆதனச்சந்தையில் இருக்கின்றபோதும் இறுக்கமான அடமானக்கடன் சூழ்நிலை, வியாபாரத்தில் இறுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எது எவ்வாறு இருப்பினும் இந்த வருடம் நிச்சயம் கடந்த வருடம் (2012) போல் இருக்காது என எதிர்பார்க்கலாம்.?

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது,
பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.
Broker / Owner



5215 Finch Ave, E, #203, Toronto
Tel.:416.321.6969
Traders Blvd #29, Mississauga
Tel.:905.712.2666

**FOR RENT**

Brand new 2 + bedroom, 2 washrooms corner unit. Tridel condo. for rent. Asking price $1650

**GTA SQUARE**

**MIDDLEFIELD & FINCH**




Mainfloor retail, commercial unit for sale. Price $139,900

**WANTED**

10 Acre or more land wanted in GTA.

# ‘மஞ்சள் நிற சைகை ஒளி’யில் வீதி ஒழுங்கு சட்டத்தினை மீறினால்

*AMBER LIGHT TRAFFIC VIOLATION*

## கனடிய தகவல் தொடர் 188

**இப்படியொரு சம்பவம் வாகனம் செலுத்தும் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம்!**

திடீர் என்று பொலிஸ் உத்தியோகத்தர் தமது வாகனத்தில் பின் தொடர்ந்து துரத்தி வந்து தங்களின் வழமையான நிறுத்தும் சைகைகளை காட்டி நிறுத்துகிறார். உடனடியாக அங்கு தண்டனை ரிக்கற் தரப்படுகின்றது. தண்டனை ரிக்கற்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“Amber light - Fail to stop”
Under Sec. 144 (15) HTA”
(வீதி ஒழுங்கு சட்டம் 144 (15) என்ற பிரிவின்படி மஞ்சள் நிற சைகை ஒளியில் நிறுத்தத் தவறியது)

அந்த நேரம் தப்பு என்பதை எண்ணாமல் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட உணர்வே ரிக்கற்றினை வாங்கிய சாரதிக்கு தெரியும்.

ஒன்ராரியோ மாகாண வீதி ஒழுங்கு சட்டவிதிகள் (Ontario traffic law act) உட்பட உலகின் சகல நாடுகளிலும் உள்ள வீதி ஒழுங்கு சட்டவிதிகளில் ‘மஞ்சள் நிற சைகை ஒளி’ (Yellow amber light) என்றால் அதன் அர்த்தம் ‘எச்சரிக்கை’ (Drive with caution), என்பதே அர்த்தமாகும். இங்கு பச்சை நிற சைகை ஒளியில் (Green traffic light) வாகனம் செலுத்திக் கொண்டிருக்கும்போது, திடீர் என மஞ்சள் நிற சைகை ஒளிக்கு (Yellow amber light) மாறினால் நிறுத்த வேண்டிய சிவப்பு சைகை ஒளி (Red traffic light) வரப்போகின்றது அதற்கு எச்சரிக்கை செய்யும் அறிவிப்பே இதுவாகும். இது வாகனமோட்டும் சகலருக்கும் தெரிந்த விடயம், சந்தேகமே அங்கு இல்லை. ஆனால் பலரும் பல இடங்களில் ‘மஞ்சள் நிற சைகை ஒளியில்’ வாகனம் செலுத்திய குற்றசாட்டில் கனடா வாழ்வில் தண்டனை ரிக்கற் பெற்றிருப்போம். இந்த அனுபவம் பலருக்கும் இருந்திருக்கும்.

இத்தகைய குற்றச்சாட்டு தொடர்பான சிக்கல்கள் வரும்போதே திரு. எரிக் லாய் (Mr. Eric lai) என்ற வீதி ஒழுங்கு சட்டத்துறை சார்ந்த நிபுணர் “ரொறொன்ரோ ஸ்ரார்” பத்திரிகையில் இத்தகைய குற்றசாட்டுகளில் வாதாடிய தமது நீதிமன்ற அனுபவங்கள் தொடர்பான கட்டுரை தொடரில் எழுதும் பலசட்ட நுணுக்கங்களையும், ஏராளமான ஆதார தகவல்களையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் தண்டனை ரிக்கற்றுக்கு பணத்தினை செலுத்தி விட்டால் தண்டனை பெற்ற குற்றவாளி என்ற நிலைமைக்குள் சுமார் மூன்று வருடத்திற்கு உட்படுகின்றோம். ஆனால் அவரது கட்டுரை தொடரின் ஆதாரப்படி இத்தகைய குற்றசாட்டுகளில் அகப்படுவோர் நிரபராதி என்று வாதாடி தப்பிக் கொள்ளும் நிகழ்வுகள் அதிகம் என குறிப்பிடுகின்றார்.



சரி! இப்போது விடயத்திற்கு வருவோம். (அவர் என்ன சொல்கின்றார் என்றால்) மஞ்சள் நிற சைகையில் ஒரு சந்தியினை கடந்து சென்றால் சட்டப்படி பின்வரும் தண்டனைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். அவையாவன பின்வருமாறு!

- பணத்தண்டனை $180 டொலர்
- மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்
- இக்குற்றப்பதிவு மூன்று வருடங்களுக்கு பதிவில் இருப்பதால் வாகன காப்புறுதியின் விலையினையும் பாதிக்கும்.

(வீதி ஒழுங்கை சிவப்பு நிற சைகை ஒளியில் நிறுத்தாமல் போனால் என்ன தண்டனையோ? அதே தண்டனை இதற்கும் வழங்கப்படுகிறது.)

ஆனால் இந்த மஞ்சள் நிற சைகையில் வாகனம் செலுத்தும் குற்றம் பற்றி மாகாண வாகன ஒழுங்கு சட்டத்தின் பிரிவு (Ontario highway traffic act 144.15) பின்வருமாறு ஆங்கிலத்தில் வரையறை செய்கின்றது.

‘Every driver approaching a traffic control signal showing a circular amber light and facing the light shall stop his/her vehicle if he/she can do safely, otherwise he/she may proceed with caution’

அதாவது ஒவ்வொரு சாரதியும் மஞ்சள் நிற சைகை ஒளியில் சந்தி ஒன்றினுள் பிரவேசிக்கும் நிலமை ஏற்பட்டால் அவ்வாறு பிரவேசிக்காது நிறுத்த வேண்டும். அவ்வாறு பாதுகாப்பாக நிறுத்த முடியாவிட்டால் ஜாக்கிரதையோடு இருபக்க அவதானத்துடன் கடந்து செல்லலாம் என்பதே இதன் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இங்கு ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்ட இச்சட்டப்பிரிவின் மேலே குறிப்பிடப்படும் இரு விடயங்களை கவனமாக படியுங்கள்’ அதாவது இரு விடயங்கள் இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1. மஞ்சள் நிற வீதி ஒழுங்கு சைகை ஒளியில் (Amber traffic light) நிறுத்துதல் வேண்டும்.
2. அவ்வாறு பாதுகாப்பாக நிறுத்த முடியாது போனால், அவதானமாக நிறுத்தாது போகலாம்.

கமராக்கள் பொருத்தப்பட்ட சந்திகளில் கூட சிவப்பு நிற சைகை ஒளியில் சந்தியில் உள்ள தடித்த கோட்டினை (Thick White line) கடந்து வாகனம் பிரவேசித்தால் மட்டுமே முதல் படம் கிளிக் பண்ணப்படுகின்றது. அதே வாகனம் நடு சந்தியில் போகும் போது இரண்டாவது படம் கிளிக் செய்யப்படும்.

ஆனால் இங்கு மஞ்சள் நிற சைகை ஒளியில் தடித்த வெள்ளை கோட்டினுள் கடந்த வாகனம் சந்தியினுள் பிரவேசித்தால் கமராக்கள் படம் பிடிக்காது. எனவே மஞ்சள் நிற சைகையில் நாம் பிரவேசித்தால் அது குற்றமா? சரி இத்தகைய குற்றசாட்டில் ரிக்கற் வாங்கியவர்கள் நீதிமன்ற வழக்குக்கு மனு செய்தால் நீதிமன்றத்தில் என்ன நடக்கும்?

- நீதிமன்ற வழக்கு தொடுநர் (Court Prosecutor) பொலிஸ்சாரின் சாட்சியத்தின் அடிப்படையில் மஞ்சள் நிற சைகை ஒளியில் இலகுவாக வாகனத்தினை நிறுத்தியிருக்கலாம். அவ்வாறு நிறுத்தாது சந்தியினுள் பிரவேசித்தது குற்றம் என்பது நிரூபிக்கப்படல் வேண்டும். அவ்வாறு நிரூபிக்கப்படும் போது குற்றவாளி ஆகின்றோம்.

- மஞ்சள் நிற சைகைக்கு மாறும் போது பாதுகாப்பாக நிறுத்த முடியாத நிலைமை ஏற்பட்ட காரணத்தினாலேயே பாதுகாப்பான முறையில் சந்தியினை கடந்து சென்றேன் என்பதினை குற்றம் சாட்டப்பட்டவர் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கும் போது குற்றத்திலிருந்து தப்பிக் கொள்கின்றார். (ஏனெனில் மஞ்சள் நிற சைகை ஒளி மாறும் போது திடீர் என பதட்டத்துடன் பிடிக்கும் பிரேக் என்பது பின்னால் தொடர்ந்து வரும் வாகனத்தினை ஒன்றுடன் ஒன்று மோதும்



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment

# கனடா ஒரு கண்ணோட்டம்

## கனடாவின் வரலாறு சின்னங்கள்

கனடிய உரிமைகள் – சுதந்திரங்கள் பட்டயம்

பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம்

ஆளுநர் – அதிபதி

அரசியல் யாப்பு

அரசுத் தலைவர்

கனடாவின் சின்னங்களுள் நீர்நாய் ஒன்று. இது ஐந்து சத நாணயத்தில் காணப்படுகிறது.

இன்று நாம் ஒன்ராறியோ, குவிபெக், நியூ, பிறவுண்ஸ்விக், நோவா ஸ்கோஷியா என்று குறிப்பிடும் மாகாணங்கள் 1867 யூலை 1ம் திகதி ஒருங்கிணைந்து கனடா என்னும் புதிய நாட்டை அமைத்தன. இதுவே ஒருங்கிணைவு எனப்படுகிறது. 1867ம் ஆண்டின் பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டத்தின் மூலம் ஒருங்கிணைவு நடைமுறைக்கு வந்தது.

காலப்போக்கில் மற்ற மாகாணங்களும் ஆள்புலங்களும் கனடாவுடன் ஒருங்கிணைந்தன.

மாகாணங்களும் ஆள்புலங்களும்



ஒருங்கிணைந்த திகதிகள்

1867 ஒன்ராறியோ, குவிபெக், நோவா, ஸ்கோஷியா, நியூ பிறவுண்ஸ்விக்
1870 மனிற்றோபா, வடமேற் புலங்கள்
1871 பிரிட்டிஷ் கொலம்பியா
1873 பிறின்ஸ் எட்வேட் தீவு
1898 யூக்கன் ஆள்புலம்
1905 அல்பேட்டா, சஸ்கச்சுவான்
1949 நியுபவுண்லாந்து
1999 நுனவுற்

உங்கள் மாகாணம் அல்லது ஆள்புலம் எப்பொழுது கனடாவுடன் ஒருங்கிணைந்தது?

மேப்பிள் இலை கனடாவின் புகழ்பூத்த சின்னம். 1700ம் ஆண்டிலேயே இது கனடா வின் சின்னமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எமது ஒருசத செப்பு நாணயத்தில் இது காணப்படகிறது. 1937ம் ஆண்டின் பின்னர் இதன் வடிவமைப்பு மாறியது அரிது.

கனடாவின் தேசியக் கொடியில் ஒரு சிவப்பு மேப்பிள் இலையைப் பொறிக்கும் வழக்கம் 1965 பெப்ரவரி 15ம் திகதி நடைமுறைக்கு வந்தது. இதுவே எமது தலையாய சின்னமாய் விளங்குகிறது.

## நாடாளுமன்றக் கட்டங்கள்

ஒன்ராறியோவில் இருக்கும் ஒட்டாவா மாநகரமே கனடாவின் தலைநகரம். நாடாளு மன்றக் கட்டடங்கள் அங்கேயே இருக்கின்றன. அக்கட்டடங்களின் நடுவில் காணப்படும் கோபுரம் அமைதிக் கோபுரம் எனப்படுகிறது.

கனடாவின் முதலாவது பிரதம அமைச்சர்

1867ல் சேர் ஜோன் ஏ.மைக்டோனல்ட் கனடாவின் முதலாவது பிரதம அமைச்சர் ஆனார். அவரது படம் பத்து டாலர் தாள் காசில் காணப்படுகிறது.

தொடரும்...

*- மணி வேலுப்பிள்ளை*


Train to be a ...

Community Service Worker With CO-OP



Other Diploma Programs:

Computerized Accounting

THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE

Network Engineering

Microsoft | IT Academy Program

Business Administration

Medical Office Assistant

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

citiCOLLEGE

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Customized Corporate Training available for:
*MS-Office 2003, 2007, 2010*
*Upgrade MS-Office 2003 to 2007 or 2010*
*Microsoft server 2003 and 2008 Subjects*
*A+ Certification / Cisco CCNA*

OACC PROUD MEMBER

Call Now: (416) 840-9179

*Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005*

www.CitiCollege.ca

Financial Assistance may be available to those who qualify

# GTA Square இல் அமைந்துள்ள Heros Catering உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்க வேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.

**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு** ***January 28, 2013*** **இற்கு முன்பாக தொலைநகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)* மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர் களுள் ஒரு அதிஷ்ட சாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Heros Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**
(* Some conditions may apply)

- **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)* 416.282.8059 இல் தொடர்புகொள்ளவும்.**

**போட்டி இலக்கம் 6இல் வெற்றிபெற்றோர்**
ஜெயந்தி, ரொறொன்ரோ

### போட்டி இலக்கம் - 7

| | | | |
|---|---|---|---|
| 6x | 1 | 1- | |
| | 3- | | 2 |
| 2÷ | | 5+ | 3- |
| 12x | | | |

### விடை- போட்டி இலக்கம் - 6

| | | | |
|---|---|---|---|
| **1** | **3** | 2 | 4 |
| **3** | 4 | 1 | 2 |
| 4 | 2 | 3 | 1 |
| 2 | 1 | 4 | **3** |

**Instructions:** 1. Each row and each column must contain the numbers 1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

# மஞ்சள்...

**08ஆம் பக்கத்தொடர்ச்சி**

நிலைமையினையும் உருவாக்கலாம்)



பொதுவாக இத்தகைய குற்றசாட்டுகளில் குற்றத்தினை நிரூபிக்க சரியான ஆதாரம் இல்லையேல் காலதாமதமின்றி நீதிமன்ற வழக்கு தொடுநர் வழக்கினை வாபஸ் வாங்கி விடுவது நீதிமன்றத்தில் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகளாகும். ரொறொன்ரோவில் பல வருடங்களாக வீதி, ஒழுங்கு குற்றசாட்டுகளில் ஆஜராகும் ஓ.ரீ.ரீ சட்டநிறுவனத்தினர் (O.T.T Legal group) பின்வரும் குறுக்கு கேள்விகளில் நிரூபிக்ககூடிய பதில் இல்லையேல் இந்த குற்றசாட்டினை உடைப்பது என்பது சாதாரண விடயம் என்பதனை தங்கள் பதிவேடுகளில் வெளியிட்டுள்ளனர்.

அவையாவன பின்வருமாறு
'How long is the amber light at the location? working properly' அந்த சந்தியில் எவ்வளவு நேரம் மஞ்சள் சைகை வேலை செய்யும்? சரியாக தொழிற்பட்டதா?

Where was the vehicle when the light turned from green to amber?
மாறும் போது How long distance from that moment to entrance of intersection how long reaction time?

பச்சையிலிருந்து மஞ்சளுக்கு சைகை ஒளி மாறும்போது வாகனம் எந்த இடத்தில் நின்றது? அந்த இடத்திற்கும் சந்தியில் பிரவேசிக்கும் இடத்திற்கும் உள்ள தூரம், கணநேரம் எவ்வளவு?
What about distance of the following vehicle?
பின்னால் தொடர்ந்து வந்த வாகனங்களின் தூரங்கள் எவ்வளவு?

மேற்குறிப்பிடப்பட்ட குறுக்கு கேள்விகளுக்கு குற்றத்தினை நிரூபிக்கும் திருப்தியான பதில்கள் இல்லையேல் குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்படும் என்பதனை இச்சட்டநிறுவனத்தினர் தங்கள் இணையதள பதிவுகளில் சர்வ சாதாரணமாக குறிப்பிடுகின்றனர்.

அதாவது மஞ்சள் நிற வீதி ஒழுங்கு சைகை ஒளிக்கு மாறும் போது திடீர் என நிறுத்துவது என்பது பாதுகாப்புக்கு ஆபத்து என்பது நிரூபிக்கப்படும் போது குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்படுகின்றது. ஆனால் சந்தி ஒன்றில் வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ திருப்புவதற்கு அனுகும் போது வாகனத்தின் வேகம் மெதுவாக்கப்பட்டுக் கொண்டுவரப்படுவ- தால் அங்கு நிறுத்துவது சுலபம். அந்த இடத்தில் இந்த குறிப்பிட்ட சட்டவிதியினை மீறினால் நிரபராதி என்பதிலிருந்து தப்புவது சிரமமாக இருக்கும் என்பதனையே இத்துறை சார்ந்த சட்டத்துறைவல்லுனர்கள் தங்கள் ஆய்வு கட்டுரைகளில் குறிப்பிடுகின்றனர்.

# தொலைக்காட்சி...

**04ஆம் பக்கத்தொடர்ச்சி**

இனிமையான தாக்கம் ஏற்படுத்துவதை உணரமுடியும், கவனித்திருக் கிறீர்களா? இது ஏனெனில், உங்களுக்குள் இயற்கையான விடயங்கள் அதிகம் நுழையும்போது அனைத்தும் இனிமையாகிறது. வாழ்க்கை என்றால் எப்படி இருக்கவேண்டும் என நமக்கு அவை நினைவூட்டுகின்றன.

சூரியன் உதிக்கிறான், பறவைகள் கூவுகின்றன, வண்ணத்துப் பூச்சிகள் பறக்கின்றன, மலர்கள் மலர்ந்திருக்கின்றன, காலையில் எழுந்து பார்த்தால் உங்கள் இதயம் இன்னமும் துடித்துக் கொண்டிருக் கிறது. இந்த அற்புதங்களையெல்லாம் எப்போதாவது ரசித்திருக்கிறீர்களா? நீங்கள் இப்போது உங்களைச் சுற்றி எப்போதும் ஒரு பரபரப்பான உலகை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் சில காலம் கழித்து அவை உங்களை வேறு பாதையில் செலுத்தி விடலாம். எனவே உங்கள் குழந்தைகள் வழிதவறிப் போகாமல் இருக்க நீங்களும் கவனம் செலுத்த முடியும்.

உங்கள் குழந்தையின் மேல் நீங்கள் உங்களை திணிக்காமல் அவர்களுடன் நட்பாய் பழகினால், அவர்கள் வழி தவறிப் போவது மிகவும் குறைவாக இருக்கும். ஆனால் அதை உறுதியாகக் கூற முடியாது. எப்போது நீங்கள் ஒரு குழந்தையைப் பெற்றீர்களோ அப்போதே நீங்கள் ரிஸ்க் எடுக்க தயாராகி விட்டீர்கள் என்று அர்த்தம். ஏனெனில் நீங்கள் மட்டும் அவனைப் பாதிப்ப தில்லை. அவன் வசிக்கும் தெரு, அவன் பார்க்கும் டிவி நிகழச்சிகள், அவனது நண்பர்கள், அவன் ஆசிரியர்கள் அனைவரும் அவனிடம் தாக்கத்தை உண்டு செய்கிறார்கள். யார் அல்லது எது அவனை அதிகமாகக் கவர்கிறதோ அதன்வழி அவன் நடக்கத் தொடங்குகிறான். அவனது கவனத்தை பெரும்பாலும் கவர்வது நீங்களாக இருக்கும்படி பார்த்துக் கொண்டால் உங்களுடன் சேர்ந்திருப்பதையே அவன் விரும்புவான். எனவே நீங்கள் உங்களை ஆனந்தமானவராகவும், அறிவுள்ளவராக வும், அற்புதமானவராகவும் காட்டிக் கொண்டால் அவன் வேறு யாரையும் நாட மாட்டான். எதற்கும் அவன் உங்களையே தேடி வருவான். நீங்கள் அந்த நிலையில் இல்லாவிட்டால், வேறு யார் அவன் ஆர்வத்தை தூண்டுகிறார்களோ அவர்கள் பக்கம் தான் அவன் போவான். 100 சதம் இதில் உறுதி சொல்ல முடியாவிட்டாலும் இப்படிப்பட்ட நிலைக்கு நீங்கள் மாறும் போது அவன் உங்களைப் பின்பற்றும் வாய்ப்பு அதிகமாக இருக்கும்.


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**

# தமிழ் மாதங்கள் யார் தமிழர்?

03ஆம் பக்கத்தொடர்ச்சி

## உத்தம ஆண்டுகள் (20)

1. பிரபவ 2. விபவ 3. சுக்கில 4. பிரமோதூத 5. பிரசோத்பத்தி 6. ஆங்கீரச 7. சிறிமுக 8. பவ 9. யுவ 10. தாது 11. ஈசுவர 12. வெகுதானிய 13. பிரமாதி 14. விக்ரம 15. விச 16. சித்திரபானு 17. சுபானு 18. தாரண 19. பார்த்திப 20. விய

## மத்திம ஆண்டுகள் (20)

1. சர்வசித்த 2. சர்வதாரி 3. விரோதி 4. விகிர்தி 5. கர 6. நந்தன 7. விசய 8. சய 9. மன்மத 10. துன்முகி 11. ஏவிளம்பி 12. விளம்பி 13. விகாரி 14. சார்வரி 15. பிலவ 16. சுபகிருது 17. சோபகிருது 18. குரோதி 19. விசுவாவசு 20. பராபவ

## அதம ஆண்டுகள் (20)

1. பிலவங்க 2. கீலக 3. சவுமிய 4. சாதாரண 5. விரோதி கிருது 6. பரிதாபி 7. பிரமாதீச 8. ஆனந்த 9. இராகூச 10. நள 11. பீங்கள 12. காளயுக்தி 13. சித்தார்த்தி 14. ரவுத்ரி 15. துன்மதி 16. துந்துபி 17. உருத்ரோத்காரி 18. இரத்தாகூசி
19. குரோதன் 20.அகூய

## கிரெகொரியின் நாட்காட்டி



உரோமையில் புனித பேதுரு பெருங்கோவி லில் உள்ள திருத்தந்தை பதின்மூன்றாம் கிரகோரியின் கல்லறை. நாட்காட்டி சீர்திருத்தம் கொண்டாடப்படும் காட்சி

கிரெகொரியின் நாட்காட்டி (Gregorian calendar) என்பது இன்று உலகில் பரவலாக பயன்பாட்டில் உள்ள நாட்காட்டி யாகும். இது கி. மு 45 இல் ரோமப் பேரரசர் ஜூலியஸ் சீசரால் உருவாக்கப்பட்ட ஜூலியின் நாட்காட்டியின் (Julian calendar) ஒரு திருத்தப்பட்ட வடிவமாகும். இத்தாலியரான அலோயிசியஸ் லிலியஸ் (Aloysius Lilius) என்ற மருத்துவரால் முன்வைக்கப்பட்டது. இது பிப்ரவரி 24 1582 இல் அப்போதைய திருத்தந்தையான திருத்தந்தை பதின்மூன்றாம் கிரகோரியின் ஆணைப்படி துவக்கி வைக்கப்பட்டது. இதன் காரணமாக பின்னாளில் இந்நாட்காட்டிக்கு "கிரகோரியன் நாட்காட்டி" என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இந்த நாட்காடியின் படி இயேசு பிறந்ததாக கணிக்கப்பட்ட ஆண்டிலிருந்து ஆண்டுகள் இலக்கமிடப்பட்டன. மேலும் இக்காலப்பகுதி "ஆண்டவரின் ஆண்டு" எனவும் பெயரிடப் பட்டது. இது கிபி 6 வது நூற்றாண்டில் டயனீசியஸ் எக்சீகுவஸ் (Dionysius Exiguus) என்னும் கிறித்தவத் துறவியால் உரோமையில் துவக்கப்பட்ட ஆண்டுக் கணிப்பு முறையாகும்.

கிரிகோரியன் நாட்காட்டி பயன்படுத்தும் முன்னர் இருந்த ரோமானிய நட்காட்டியில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் எனப் பத்து மாதங்கள் கொண்டதே ஒரு ஆண்டாகும். பின்னரே ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்கள் சேர்க்கப்பட்டன. கிரகோரியின் நாட்காட்டியானது "ஜூலியன் நாட்காட்டியின்" சராசரி ஆண்டைவிட நீளமாகக் காணப்பட்டமையால் இளவேனிற் சம இராப்பகல் நாள், நாட்காட்டியில் பின்னோக்கி நகர்வதைத் திருத்துவதற்காக முன்கொணரப்பட்டது. மேலும் உயிர்த்த ஞாயிறு நாளை கணக்கிட பயன்பட்ட சந்திர நாட்காட்டியும் பல குறைகளைக் கொண்டிருந்ததும் இன்னொரு முக்கிய காரணமாகும்.

ஸ்பெயின், போர்ச்சுக்கல், போலிஷ் லிதுவேனியன் காமன்வெல்த், இத்தாலியின் பெரும்பகுதிகள் போன்றவையே கிரிகோரியன் நாட்காட்டியை முதலில் ஏற்றுக் கொண்டன. 1582 அக்டோபர் முதல் இவை கிரிகோரியன் நாட்காட்டியைப் பயன்படுத்தத் தொடங்கின. இங்கிலாந்தும் அமெரிக்காவும் 1752 ஆம் ஆண்டிற்குப் பிறகே கிரிகோரியன் நாட்காட்டியை அங்கீகரித்தன. ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலும் இந்த நாட்காட்டி புழக்கத்திற்கு வந்தது. கிரிகோரியன் நாட்காட்டியை கடைசியாக ஏற்றுக் கொண்ட நாடுகளில் கடைசியாக வருவது கிரீஸ் ஆகும். 1923 பிப்ரவரி 15 இல் தான் இந்நாடு கிரிகோரியன் நாட்காட்டியை அங்கீகரித்தது.

http://ta.wikipedia.org/s/b6
விக்கிப்பீடியாவில் இருந்து.

**- தொகுப்பு - கமலாகரன்**

தமிழர் என்றால் யார்?
அவர்களை எப்படி இனம் காணலாம்?

'அட, இதில் யோசிக்க என்ன இருக்கிறது. தமிழ் நாட்டில் வாழும் எல்லோரும் தமிழர்கள் தான்,' என்று பட்டென சொல்ல தோன்றினால், 'அப்படியானால் தமிழ் நாட்டில் வாழும் உருது பேசுபவர் தமிழரா?' 'வெளி நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மனிதர்கள் தமிழர்கள் இல்லையா?' என்ற கேள்வியும் வரும்.

அப்படியில்லை, அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், தமிழ் பேசுபவராக இருந்தால் அவர் தமிழரே, என்று விளக்கம் சொன்னாலோ, அப்படியானால் நெதர்லாந்துகாரரான கமில் ஸ்வெலிபில் எனும் தமிழ் அறிஞரும் தமிழர் தானா? ஒரு சராசரி தமிழனை விட, அதிகம் தமிழைப் பற்றி தெரிந்துவைத்திருக்கிறவர் ஆயிற்றே. அப்படியானால் அவர் தமிழர் தானே? என்று வாதிட்டாலோ, 'அதெல்லாம் இல்லை, அவருக்கு எவ்வளவு தமிழ் தெரிந்திருந்தாலும், அவருடைய அசல் தாய் மொழி டச்சு தான், அவர் சொந்த விருப்பத்திற்காக அவர் தமிழ் கற்றார்'. தேர்சி பெற்றார். அவர் தமிழுக்காக, எவ்வளவு சாதித்திருந்தாலும் அவர் தமிழர் ஆக மாட்டார். காரணம், அவர் தாய் மொழி தமிழே இல்லை' என்று பதில் வரும்.

இதில் ஒரு சிக்கல் இருக்கிறது. ஒரு வேளை, தமிழ் பெற்றோருக்கு பிறந்தும், பல காலம் வெளி நாட்டில் வாழ்ந்ததால் தலைமுறை தலைமுறையாக, ஆங்கிலம், ஜெர்மன், அல்லது, ஃபிரென்ஞ்ச் மட்டுமே பேசும் தமிழ் தெரியாத மனிதராக இருந்தால், அப்போது அவர் தமிழரில்லையா? உதாரணம்: இன்று ஃபிஜி, மொரீஷியஸ், செஷல்ஸ், தென்னாப்பிரிக்கா, மேற்கு இந்தீஸில் வாழும் பல தமிழ் வம்சாவழியினருக்கு தமிழே தெரியாதே. அவர்களின் தாய் மொழி என்று அவர்கள் நினைப்பது, அந்தந்த ஊரின் மொழியை மட்டும் தானே.

அல்லது, வேலை நிமித்தமாக தமிழ் நாட்டில் வசிக்க நேர்ந்ததால், தொன்று தொட்டு பல தலை முறைகளாக தமிழையே பேசிக்கொள்கிறார்கள் '..உதாரணத்திற்கு இன்று தமிழ்நாட்டில் வாழும் பல ரெட்டிமார்கள் வீட்டிலும், மனதிற்குள்ளும் தமிழைத்தான் பேசிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு தெலுங்கே தெரிவதில்லை'..அப்படியானால் அவர்கள் தமிழர்களா?

அப்படி இல்லை, தமிழ் தெரியுமோ தெரியாதோ, அது அவ்வளவு முக்கியம் இல்லை. அவர்களின் பெற்றோர்கள் எந்த மொழியை பேசும் இனத்தை சேர்ந்தவர்கள் என்பது தான் முக்கியம். பெற்றோரின் பூர்வீக மொழி மட்டும் தான் அடையாளம் என்றால், என் தாய் தமிழச்சி இல்லை, வேற்று மொழிக்காரி என்றால், நான் தமிழர் இல்லையா?

இல்லை, உன் தந்தை தமிழராக இருந்தால் போதும், யாராவது ஒரு பெற்றோர் தமிழராக இருந்தாலே தமிழர் என்ற அந்தஸ்த்தை பெறலாம், என்றாலோ, அடுத்து வரும் கேள்வி, 'அப்படியானால் தமிழ் என்பது மொழியின் அடையாளமா? இனத்தில் அடையாளமா?'

தமிழ் எனும் மொழியை யார் வேண்டுமானாலும் கற்றுக்கொண்டு பேசலாம், காந்திகூடத்தான் தென் ஆப்பிரிக்கா சிறையில் இருந்த போது தமிழை கற்றுக்கொண்டார். அதற்காக அவர் தமிழராகிவிட முடியுமா? அதெல்லாம் இல்லை, தமிழ் என்பது ஒரு இனம்.

சரி, இனம் என்றால் என்ன? ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசித்து, ஒரே ஆரம்ப மொழியை பேசி, ஒருமித்த கலாச்சாரம், கருத்தாக்கம், மரபு, நம்பிக்கை, ஆகியவற்றை பின்பற்றும் ஒரு குழுவை தான் இனம் என்போம். இப்படி ஆரம்பித்த இனம், பிறகு வெவ்வேறு பாதைகளை தேடிப் பிரிந்து போனாலும், அவர்கள் ஆரம்பத்தில் ஒரே குடும்பமாக இருந்ததால், கடைசிவரை அவர்கள் சகோதரர்களே.....அதனால் தான் தமிழர், தெலுங்கர், மலையாளி, துலு, கன்னடக்காரர் என்ற மேலோட்டமான பிரிவினைகளைத் தாண்டி, அனைத்து திடராவிடமொழி பேசுபவர்களும் ஒரே கூட்டம் தான். காரணம் இவரகள் எல்லோருமே ஆரம்ப காலத்தில் ஒரே மொழியை பேசி, ஒரே இடத்தில்

**தொடர்ச்சி 18ஆம் பக்கம்**

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

Accounting & Tax Services
• Book keeping • Preparation of monthly & year - end financial statements • Filing of annual corporate returns • Payroll • Periodical HST & WSIB returns • Personal tex planning & preparation of returns • CRA audit representation

Guru: 647.400.8730 / Nithi: 416.219.4902
E-mail: accounting.taxservices@hotmail.com

# காலத்தோடு வளரும் கணினிகள் -13

அன்பான வாசகர்களே!

ஒரு கணினியை வாங்கும் பொழுது மையச்செயற்பாட்டகம் (CPU) உடன் விசைப்பலகை (keyboard), மவுஸ் (Mouse) என்பவற்றையும் பெற்றுக் கொண்டால் மிகுதியாக திரையகம் (மொனிற்றர் Monitor) இனை வாங்கவேண்டும்.



கணினியின் விலைக்குள் இது உள்ளடக்கப் படுவதில்லை. எமது தேவைக்கேற்ப வெவ்வேறு அளவுகொண்ட திரையகங்களில் பொருத்தமானதைத் தெரிவுசெய்து வாங்க வேண்டும். கணினியைக் கொள்வனவு செய்யும்பொழுது கவனிக்க வேண்டிய பல விடயங்களைப் பற்றிக் கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேன். எனவே இந்த இதழில் திரையகங்கள் பற்றிச் சுருக்கமாக ஆராய்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன். ஒரு நுகர்வோர் கணினியில் (Personal Computer) குறிப்பாக மேசைக் கணினிகளில் (DeskTop Computer) பாவிப்பதற்குத் தேவையான திரையகத் திற்குக் குறைந்தது 100 கனேடியன் டொலர் செலவு செய்ய வேண்டியிருக்கும். ஓரளவு பெரிதான திரையகம் தேவை என்னும் பொழுது இவற்றின் விலை 200 கனேடியன் டொலர் வரை செல்லும். கணினிச் சந்தையில் வெவ்வேறு விதமான திரையகங்கள் பல விலைகளிலும் காணப்படும். முன்பு பாவித்த திரையகங்களையும் ஓரளவு குறைந்த விலையில் வாங்கிக் கொள்ளலாம். கணினிப் பாவனையில் வசதியான, பொருத்தமான திரையகங்களை வாங்கிக் கொள்வது முக்கியமானது. மடிக்கணினிகளில் திரையகம் கணினியில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் மடிக்கணினிகளை வாங்கும் பொழுது எமது தேவைக்குப் பொருத்தமான திரையகம் கொண்ட மடிக்கணினிகளைத் தெரிவு செய்வது முக்கியமானது.

கணினிகள் தொழிற்படுவதற்குத் தேவையான அத்தியாவசியமான கருவிகளில் ஒன்றாக திரையகம் (மொனிற்றர் Monitor) உள்ளது. இது ஒரு வெளியீட்டுக் கருவியாகும் (Output Device). நுகர்வோர் கணினியுடன் தொடர்பை ஏற்படுத்த உதவும் ஒரு அடிப்படைக் கருவி ஆகும். பழைய மொனிற்றர்கள் எதிர் முனைக் கதிர்க் குழல் (கதோட் றே ரியூப் CRT-Cathode Ray Tube) வகையினதாக இருந்தது. 1859இல் யூலியஸ் பிளக்கர் (Julius Plucker) எனப்படும் ஜேர்மன் கணித நிபுணரே எதிர் முனைக் கதிரினைக் கண்டறிந்தார். 1878இல் சேர் வில்லியம் குருக்ஸ் (Sir William Crookes) எதிர் முனைக் கதிர்க் குழலின் கண்டுபிடிப்புக்கான அடித்தளத்தை ஏற்படுத்தினார். 1897இல் வேர்டினான்ட் புரோன் (Ferdinand Braun) என்ற ஜேர்மனிய அறிஞரால் எதிர் முனைக் கதிர்க் குழல் கண்டுபிடிக்கப்பட்டது. மின்னணுவின் (எலக்ரனின் Electron) கண்டுபிடிப்பின் மூலம் எதிர் முனைக் கதிர்க் குழல்கள் முன்னேற்றம் அடைந்தன.



இந்த வகையான எதிர் முனைக் கதிர்க் குழல்களைக் கொண்ட திரையகங்கள் பாவனையில் இல்லாமல் போய்விட்டன. தட்டைத் திரைகள் (Flat Screen) அதிகமாகப் பாவனையில் வந்துவிட்டன. தட்டைத் திரைகளில் நீர்மப் படிகத் திரை (லிக்கியுட் கிறிஸ்ரல் டிஸ்பிளே LCD - Liquid Crystal Display ) மிகவும் பிரபல்யமானது. 1888இல் பிரைட்றிச் ரெயினைசர் (Friedrich Reinitzer) கரட்டில் இருந்து நீர்மப் படிக வகையிலான கொழுப்பினைக் (cholesterol) கண்டுபிடித்தார். முதலாவது நீர்மப் படிகத் திரை 1972இல் அமெரிக்காவில் பீற்றர் புரோடி அவர்களால் உருவாக்கப்பட்டது. 90களில் நீர்மப் படிகத் திரை வேகமாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

HP, Samsung, Acer, LG, Viewsonic, BenQ, Dell, Sony போன்ற பல பெயர் கொண்ட நீர்மப் படிகத் திரைகள் கணினிச் சந்தையில் காணப்படுகின்றன. 100 கனேடியன் டொலர் முதல் 3500 கனேடியன் டொலர் வரை பெறுமதி வாய்ந்த நீர்மப் படிகத் திரைகள் காணப்படுகின்றன. LCD திரையகங்கள் CRT திரையகங்களை விட பாரம் குறைந்தவையாகவும், மெல்லியதாகவும் காணப்படுகின்றன. LED திரையகங்கள் LCD இனை விட மெல்லியதாகவும், பாரம் குறைந்ததாகவும் இருக்கும். அநேகமான திரையகங்களில் ஸ்பீக்கேர்ஸ் (speakers) உள்ளடக்கப்பட்டிருக்கும். HDMI (High-Definition Multimedia Interface) அநேகமான திரையகங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளது. பிளாஸ்மாத் திரைகள் அதிக வெப்பத்தை வெளியிடுவதோடு அதிக மின்சாரச் செலவையும் ஏற்படுத்துகின்றன. ஆனால் இதன் ஒளித்தோற்றத் திறன் நன்றாக இருக்கும். கணினியில் மையச் செயற்பாட்டகத்தின் (CPU) உள்ளே காணப்படும் வரைவியல் மட்டை (கிரபிக்ஸ் காரட் Graphics Card) இருமத் தகவலை (binary data) மையச்செயற்பாட்டகத்தில் இருந்து பெற்றுப் படங்களாக மாற்றித் திரையகத்தில் காண்பிக்கின்றது.

தொடு திரை (Touch Screen) வகையான திரையகங்களில் உள்ள உணரிகள் (சென்சர்ஸ் Sensors) மூலமாக தொடுதலைப் புரிந்து கொள்கின்றன. தொடுதிரைகளைக் கொண்ட திரையகங்கள் மிகவும் விலையுயர்ந்தவை.

19 அங்குலம், 22 அங்குலம், 24 அங்குலம், 27 அங்குலம் எனப் பல்வேறு அளவுகளில் திரையகங்கள் வருகின்றன. பெரிய திரையகங்கள் பொதுவாக விலை கூடியதாக இருக்கும்.

மடிக்கணினிகளில் (LapTop Computers) பொருத்தப்பட்டுள்ள திரையகங்களுக்குப் பதிலாகவும் பெரிய திரையகங்களை மடிக்கணினிகளில் காணப்படும் 15 முனைகள் கொண்ட வீடியோ (ஒளித்தோற்றம்) இணைப்பு மூலம் பொருத்திக் கொள்ளலாம். இந்த இணைப்பு மூலமே அதிகமாக கணினியுடன் புரோயெக்ரரும் (Projector) இணைக்கப்படுகின்றன. ஒரு கணினியுடன் புரோயெக்ரரை இணைப்பதற்கு வேறு வகையான இணைப்புக்களும் கணினிகளில் காணப்படுகின்றன. இவை பற்றி நாங்கள் பின்பு ஆராய்வோம்.

அநேகமான மடிக்கணினிகளில் மேலதிகமாக இணைக்கப்படும் திரையகத்தையும், மடிக் கணினியுடன் நிரந்தரமாகப் பொருத்தப் பட்டுள்ள திரையகத்தையும் ஒரே நேரத்தில் பாவிக்கக் கூடிய வசதி உள்ளது. சில மடிக்கணினிகள் அளவில் ஓரளவு பெரிதாக வருவதற்கான காரணம் பெரிய திரையகத்தை உள்ளடக்குவதற்கே ஆகும்.


மடிக்கணினிகள் கீழே விழுவதால் அல்லது வேறு காரணங்களால் பாதிப்புற வாய்ப்பு உள்ளது. இவ்வாறான நிலை ஏற்பட்டால் இலகுவாக புதிய திரையகங்களைப் பொருத்திக் கொள்ளலாம். நுகர்வோரால் இதைச் செய்வது கடினமாக இருந்தாலும் கணினியைத் திருத்துவோரால் இலகுவாக புதிய திரையகம் பொருத்தப்படலாம்.

கணினி பாவிக்கப்படாத நேரத்திலும், மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்ட நேரத்திலுமே திரையகங்களைச் சுத்தப்படுத்த வேண்டும். திரையகங்களைச் சுத்தப்படுத்துவதற்கு காய்ந்த மென்மையான துணியைப்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# ஓடும் நீர் உறைவதில்லை 159

## பனிக்கால நெருப்பு

துணையையும் துணியையும்
தூர விலக்கிவிட்டு
தொலைந்து போகின்றவர்கள்
தொலைந்து போகின்றவர்கள் அல்ல
வாழ்தலைப் புரியாமல்
வாழ்க்கையைப் பனியாக்கி
உறைந்து போகின்றவர்கள்

துணைக்குள்ளும் துணிக்குள்ளும்
தூரம் தெரியாமல்
தொலைந்து போகின்றவர்களும்
தொலைந்து போகின்றவர்கள் அல்ல
வாழ்தலைப் புரியாமல்
வாழ்க்கையை நெருப்பாக்கி
வெந்து போகின்றவர்கள்




தூரம் புரியும் வரை
வாழ்தல் புரிவதில்லை
வாழ்தல் புரியும் வரை
வாழ்வது வாழ்க்கை இல்லை

வாழ்தலின் தூரம்.....
பனிக்குள் உறைய விடாத
நெருப்பில் வேக விடாத
பனிக்கால நெருப்பின்
பயன்பாட்டுத் தூரம் அது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நன்றியுடன் KG Master

## பொன்னாசை

பெண்களைப் புரிய முடியவில்லை
என்றான் நண்பன்
சேர்ந்து வாழ் புரிந்துகொள்வாய்
என்றேன் நான்
சேர்ந்துதான் வாழ்கிறேன் முடியவில்லை
என்றான் நண்பன்

நண்பன்... இருபது வருட இல்லற வாழ்க்கை
இரண்டு குழந்தைகள்

எது புரியவில்லை? சொல்லு நண்பா!
என்றேன் நான்



அடுக்கடுக்காய் நகைகளை
அடுக்கி வைத்திருந்தும்
அட்டியல் வேண்டும் என்று
அடம் பிடிக்கின்றாள் மனைவி
என்றான் நண்பன்

புரியவில்லையே உனக்கு?
என்றேன் நான்

என்ன புரியவில்லை?
என்றான் நண்பன்

அடுக்கிய விறகில்
என் அம்மாவை எரிக்குமுன்
அத்தனை நகைகளையும்
அகற்றித் தந்தவன் நீ தானே?
என்றேன்

அரை நிமிட நேரம்
அசைவின்றி இருந்துவிட்டு
ஆ...மா...ம் என்றான்
நண்பன்

## தாயின் முதற்பெயர்

அதிகாலை மூன்று மணி
அழைப்பொன்று தொலைபேசிக்கு
அழைத்தது தம்பியின் துணைவி
அழுதுகொண்டே சொன்னார்
"அம்மா போய்விட்டா அண்ணா"

என் அன்னை "பூரணம்"
இரவலாகப் பெற்ற மூச்சை
எண்பது ஆண்டுகளின் பின்
இறுதியாகக் கொடுத்திருந்தார்
மீண்டும் ஓர் அழைப்பு
அழைத்தது என் கடைசித் தம்பி
"அம்மாவின் அம்மா பெயர்?
அதிர்ச்சியில் உறைந்து போய்
"அம்மம்மாவின் பெயரா?" என
அசடு வழியக் கேட்டுவிட்டு
அழைப்பதாகக் கூறினேன் நான்



குழந்தையில் அம்மாவை
இழந்தவர் என் அம்மா

அதனால்
அம்மம்மாவின் விடயங்கள்
என்னை அணுகவும் இல்லை
அவர் பெயரையும்
நான் அறிந்திருக்கவும் இல்லை

ஆனாலும்
அப்பாமார்களின் பெயர்கள்
அச்சு வடிவில் வருவதனால்
அப்பா வழியிலும் அம்மா வழியிலும்
பூட்டப்பா வரை தெரியும்

எழுந்தது ஒரு தாகம்
புரிந்தது ஒரு புது வழி

தமது உடலுள் எமதுடலும்
தமதுயிரில் எமதுயிருமாய்
தரணிக்கு எம்மைத் தரும்
தாய்மாரின் பெயர்
தலைமுறை பல காணவேண்டும்!

அதற்கு
ஒவ்வொரு குழந்தைக்கும்
நடுப்பெயர் வேண்டும்
அது தாயின்
முதற்பெயராக வேண்டும்

**KG Master**
–www.kgmaster.com
- www.facebook.com
- kgmaster.yourlifecoach

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# 2012ஆம்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

ஷரபோவா சாம்பியன் விம்பிள்டன் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் பிரிட்டன் தலைநகர் லண்டனில் யூன் 25ம் திகதி முதல் யூலை 8ம் திகதி நடைபெற்றது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பிரிட்டனின் ஆண்டி முர்ரேயை வீழ்த்தி 7வது முறையாக விம்பிள்டன் பட்டத்தை வென்றார். விம்பிள்டன் பட்டத்தை 7வது முறையாக வென்றார் ரோஜர் பெடரர் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், போலந்தின் ரட்வன்ஸ்காவை வீழ்த்தி 5வது முறையாக விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்றார். விம்பிள்டன் டென்னிஸ்: 5வது முறையாக பட்டத்தை வென்றார் செரினா வில்லியம்ஸ் அமெரிக்க ஓபன் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஓகஸ்ட் 27ம் திகதி முதல் செப்டெம்பர் 10ம் திகதி வரை நடைபெற்றது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் பிரிட்டனின் ஆண்டி முர்ரே, செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார். அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்றார் முர்ரே மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், பெலாரசின் விக்டோரியா அசரென்காவை வீழ்த்தி 4வது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றார். 4வது முறையாக பட்டத்தை வென்றார் செரினா.

# காலத்தோடு...

12ஆம் பக்கத்தொடர்ச்சி



பயன்படுத்தலாம். கண்பார்வைக்கு அணியும் கண்ணாடிகளைச் சுத்தம் செய்யப் பயன்படும் மைக்கிரோ பைபர் (microfiber) துணி மிகவும் பொருத்தமானது. தேவை ஏற்பட்டால் மட்டும் டிஸ்ற்றில் வோட்டர் (distilled water) ஈரமாக்கப்பட்ட துணியைப் பாவிக்கலாம். தட்டைத் திரை (Flat Screen) கொண்ட திரையகங்களின் திரை மிகவும் மென்மையானதாக இருப்பதால் கூடிய கவனம் தேவை.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

# வைத்தியர்கள் செய்யும்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

நோயாளியின் அகஉறுப்பில் ஏற்பட்ட இரத்தப் போக்கை 2004 இல் செய்த பரிசோதனைகளில் இருந்து சரியாக அடையாளம் கண்டு அவரை விசேட மருத்துவரிடம் செல்லுமாறு அறிவுறுத்தவில்லை. இதனால் அவரது நோயாளி 77 வயதில் 2007 இல் புற்றுநோயால் இறந்தார். நோயாளியின் மகள் வைத்திய சங்கத்திற்கு தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து அச்சங்கம் வைத்தியருக்கு அவர் 2004 இல் நோயின் அறிகுறியை சரியாக கண்டு அவரை விசேட மருத்துவரிடம் அனுப்பவில்லை என எச்சரிக்கை செய்தது. இதுபற்றி எந்த விபரமும் முறைப்பாடு செய்தவருக்கு தெரியாது.

ரொறொன்ரோ பல் வைத்தியர் Gary Glassman தனது நோயாளியின் வைத்திய தகவல்களை சரியாகப் பார்க்காமல் அவருக்கு ஒவ்வாமை உள்ள மருந்து ஒன்றை ஊசிமூலம் ஏற்றியதால் அந்நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது. இதற்காக பல் வைத்தியர் சங்கம் அவரை எச்சரிக்கை செய்துள்ளது. இவ்வாறு இன்னும் பல மருந்துவ சங்கங்கள் செய்த எச்சரிக்கைகளை ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை பிரத்தியேகமாக பெற்று ஜனவரி 11, 2013 இதழில் பிரசுரித்துள்ளது.

# "ஸ்ரீ சத்திய சாயி போற்றி" இசைத்தட்டு அறிமுக விழா

ஜனவரி 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 63 பார்மசி அவெனியூ இல் அமைந்துள்ள Oakridge Community Recreation



Centre இல் விக்டோரியா பார்க் சாயி நிலையத்தின் நிகழ்வாக ஸ்ரீ சத்திய சாயி போற்றி இசைத்தட்டின் அறிமுக விழா ஆடம்பரமின்றி இனிதே நடைபெற்றது. நிகழ்வுக்கு முன்பாக பஜனை நடைபெற்றது. நிகழ்ச்சியினைச் செல்வி சயனிகா சுரேஸ் திறமையாகத் தொகுத்து வழங்கினார். நிலையத்தின் தலைவர் தர்மராஜா அவர்கள் தனது தலைமையுரையில் தமது நிலையத்தில் பாடலாசிரியர் அகணி சுரேஸ் அவர்களினதும், குடும்பத்தினரினதும் பங்களிப்பும், ஈடுபாடும் அளப்பரியது என்று குறிப்பிட்டதோடு, இசைத்தட்டின் மூலம் கிடைக்கும் பணம் ஒரு நல்ல சேவைக்குப் பயன்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த இசைத்தட்டில் உள்ள பாடல்கள் அகணி சுரேஸ் அவர்களால் 'சாயி அமுதம்' என்ற நூலில் எழுதிப் பதிவாகியிருந்தது. பாடல்கள் புட்டபர்த்தியில் M.S. வித்யா அவர்களால் இசையமைக்கப்பட்டு வித்யா குழுவினரால் பாடப்பட்டு பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 87வது பிறந்த தின வெளியீடாக இசைத்தட்டு வெளியிடப்பட்டது. அடுத்ததாக நிகழ்வில் உரையாற்றிய அகணி சுரேஸ் அவர்கள் இசைத்தட்டின் உருவாக்கம் பகவான் சாயியின் அருளினால் மட்டுமே சாத்தியமானதெனக் குறிப்பிட்டதோடு இசைத்தட்டிற்கான பதிவு நிறைவுற்ற நாளில் பாடகர்களின் கனவில் பகவான் சாயி தோன்றி ஆசி வழங்கியமை பற்றியும் ஒரு பாடகருக்கு அவர் பாடிய 'கனவினில் வருவாயோ' என்ற பாடலைத் திரும்பவும் பாட முடியுமா என பகவான் சாயி கேட்பதாகக் கனவு கண்டதாகவும் தனது உரையில் குறிப்பிட்டார். மேலும் திரு. இணையத்தினால் நடைபெற்ற யாப்பிலக்கண பயிற்சிப் பட்டறை மூலம் அகணி போன்று பயிற்சி பெற்ற பல கவிஞர்களும் நிகழ்வில் பங்கு பற்றியதோடு அவர்களால் உருவாக்கப்பட்ட கனடா தமிழ் கவிஞர் கழகத்தின் தலைவர் மாவிலி மைந்தன் சண்முகராஜா ஒரு வாழ்த்து மடலை கவிஞர் குழாமுடனும், ஆசான்களுடனும் சேர்ந்து பாடலாசிரியர் அகணி அவர்களுக்கு வழங்கினார்கள்.



ராஜசிங்கம் அவர்களின் மனப்பூர்வமான பணியினால் அவர் மூலமாகவே இந்த இசைத்தட்டு உருவாக்கம் நடைபெற்றதெனவும் குறிப்பிட்டார். அங்கு உரையாற்றிய திரு. ராஜசிங்கம் அவர்கள் இசைத்தட்டு உருவாக்கத்தின் பின்னணி பற்றி உரையாற்றினார். அடுத்து அவையில் இசைத்தட்டில் இருந்து சில பாடல்களின் பகுதிகள் இசைக்கப்பட்ட பொழுது இசைத்தட்டின் சிறப்பை அவையோர் நன்கு அறிந்து கொண்டனர். நிகழ்வில் அகணி சுரேஸ் அவர்களின் யாப்பிலக்கண ஆசான்களான கவிநாயகர் வி. கந்தவனம், பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கிச் சிறப்பித்தனர். கனடா தமிழ் எழுத்தாளர் இசைத்தட்டினை திரு. ராஜசிங்கம் வெளியிட சிறப்புப் பிரதிகளை திருவாளர்கள் தர்மராஜா, கந்தவனம், அலெக்ஸ்சாந்தர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இறுதியாக பங்குபற்றிய விருந்தினர் அனைவருக்கும் இசைத்தட்டுக்கள் வழங்கப்பட்டு பக்தி கலந்த ஒரு அருமையான நிகழ்வாக இனிதே நிறைவேறியது. இசைத்தட்டினைச் செவிமடுத்த பலரும் இந்த இசைத்தட்டு மிகவும் நன்றாக உள்ளதாகப் பாராட்டி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இசைத்தட்டைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 416 732 8021 (சுரேஸ்) உடன் தொடர்புகொள்ளவும்.

# மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்றுவலியும் தீர்வுகளும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

பெண்ணாகப் பிறந்த அனைவருக்கும் 'மாதவிலக்கு' என்பது தவிர்க்க முடியாத அனுபவம். முன்பு மூப்படைதல் (மாத விலக்கு) தொடங்குவது 15 வயதில் ஆரம்பித்தது. இப்போதெல்லாம் 10 வயதிலே தொடங்குகிறது. 15 வயதிலுள்ள இளம் பெண்ணுக்கு உள்ள மனப் பக்குவம் 10 வயது சிறுமிக்கு இருப்பதில்லை. அதனால் அந்த சிறுமி மனத்தடுமாற்றத் திற்கு உள்ளாகிறாள். அதனால் அவளது உடலும் மனமும் பல வேதனைகளைச் சந்திக்கின்றன.



சராசரியாக ஒரு பெண் தனது 12 வயதில் பருவமடைந்தால் 45 வயது முதல் 50 வயதுவரை மாதவிடாய் தொடர்ந்து மாதா மாதம் நிகழும். இதனால் அந்தப் பெண் தனது வாழ்வில் 30 வருடங்கள் சுமார் 300 தடவையாவது மாதவிடாயைச் சந்திப்பாள். இதில் 50 சதவீதத்திற்கு மேலான பெண்கள் அடிவயிற்று வலியை அனுபவிக்கின்றனர்.

பல பெண்களுக்கு இவ்வலியானது இடுப்பு, தொடைகள் வரை பரவிக் காணப்படும். இவ்வலியானது மாதவிலக்கு வருவதற்கு ஒரு சிலமணி நேரம் முன்பு ஆரம்பித்து ஓரிரண்டு நாட்கள் பெண்களுக்கு மாத விலக்கின்போது முதலிரண்டு நாட்களில் லேசான வலி ஏற்படுகிறது. 10% பெண்களுக்கு வலி அதிகமாகி இயல்பு வாழ்க்கையே பாதிப்படைகிறது. முன்பெல்லாம் தாய்மார்கள் தமது பெண் பிள்ளைகளை வீட்டிலிருந்து சிறப்பாக வளர்த்தெடுத்தார்கள். ஆனால் இன்றைய



நிலைமை வேறு. வேலை வேலை என்று தமது பிள்ளைகளைக் கவனிக்க மறந்து விடுகின்றனர். குறிப்பாக மாதவிடாய் காலங்களில் இன்றைய பெண்களுக்கு தகுந்த அரவணைப்பும் உணவு முறையும் இல்லை என்றே கூறலாம். இதனால் இந்த இளம் பெண்கள் தேவையில்லா மன அழுத்தத்திற்கு ஆளாகி அவதியுறுகின்றனர்.

### வயிற்றுவலி ஏற்பட காரணம்

சில பெண்களுக்கு கருப்பை மெலிந்து தேவையான ஊட்டச்சத்து இல்லாமல் வலிமையற்று இருக்கும்.

### மாதவிடாய் வலியானது இருவகைப்படும்.

1. முதல் நிலை வலியுள்ள மாதவிலக்கு - கருப்பப் பையின் தசைகள் சுருங்கி அதன் உட்சுவர் இறுக்கமடைகிறது. இதன் காரண-



மான வலிகள் தீங்கற்றது. இவ்வலியானது 20 வயதிற்கு பிறகோ அல்லது குழந்தை பெற்ற பின்போ மறைந்து விடுவதற்கு வாய்ப்புகள் அதிகமுள்ளது.

2. இரண்டாம் நிலை வலியுள்ள மாத விலக்கு - இதில் கர்ப்பப் பையின் சுவர்களில் நார் திசுக்கட்டிகள் (Fibroid Tumor) ஏற்படுவதாலோ, பால்வினை தொற்றுக் களாலோ, கர்ப்பப்பை உட்படலாம். வேறிடங்களில் பரவிப் பெருத்தாலோ, இடுப்புக்குழி நோய்களாலோ, கருப்பை கட்டிகள் அல்லது நீர்ப்பை கட்டிகளாலோ ஏற்படுகிறது.

### வயிற்றுவலிக்குத் தீர்வு

### உணவுமுறை

1. மாதவிடாயால் ஏற்படும் வயிற்று வலிக்கு அந்த சமயங்களில் உளுந்து கலந்துள்ள உணவுகளை உட்கொள்வதால் சரியாகும். மேலும் இத்துடன் பனைவெல்லம் சேர்த்து களி செய்து உண்ணலாம். இதில் பனை வெல்லத்திலுள்ள இரும்புச் சத்தும் உளுத்தம் மாவும் கருப்பையை வலுவுறச் செய்வதுடன் வயிற்று வலியைக் குணமாக்கும்.

2. எள்ளு சேர்த்த உணவுகள் நல்ல பலனை கொடுக்கும்.

3. சோற்றுக் கற்றாளை மடலை உரித்து நுங்கு போன்ற பகுதியை தண்ணீரில் அலசி தினமும் ஒரு துண்டு சாப்பிட கருப்பை வலி குறையும்.

### மருந்து

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அடி வயிறு வலி, தசைவலி, கால்வலி போன்றவற்றிற்கு கீழ்கண்ட மருந்தை உபயோகித்தால் வலி குறையும். வலி நிவாரணி மாத்திரையை விட (Pain Killer) இது குறைந்த நேரத்தில் வேலை செய்து நிரந்தர பலனைத் தரும்.

1. வெற்றிலை - இரண்டு
2. சின்ன வெங்காயம் - இரண்டு
3. பூண்டு - இரண்டு
4. சீரகம் - ஒரு தேக்கரண்டி

இவை அனைத்தையும் சிறிது வெந்நீர் விட்டு மிக்ஸியில் அரைத்து பின் இதனை வடிகட்டி அந்த நீரை ஒரு வேளை அருந்த வேண்டும். இதுபோல் காலை, மாலை இருவேளையிலும் வலி ஆரம்பித்த நாள் முதல் அருந்த வேண்டும். வயிற்றுவலி நிற்பதுடன் இதனால் கர்ப்பப்பையும் பலப்படும்.

**யோகா பயிற்சியில் இலகுவான தீர்வு**

முறையான யோகாசனப் பயிற்சிகளால் மாறாத நோய்களே கிடையாதென்று கூறலாம். இதனைக் கடந்து நோயின்றி வாழும் நோய்த் தடுப்பு முறைகளைத்தான் யோகா போதிக்கின்றது.

பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகள், ஒழுங்கின்மை, உபாதைகள் போன்றவற்றை நீக்கும் பயிற்சிகள் பல யோகாவில் உண்டு. அவை

1. விபரீதகரணி - Adventure
2. பட்ஸிமொத்தாசனம் - Forward bend
3. தனுராசனம் - Bow
4. பாதஹஸ்தாசனம்- Head to feat pose
5. யோகா முத்ரா - Yoga mudra
6. நவாசனம் - Boat
7. நாடிசுத்தி பிராணாயாமம் - Deep Breathing
8. தியானம் - Meditation

இவற்றில் ஒரு சிலவற்றையேனும் ஒரு யோகாசன ஆசிரியர் மூலம் பயின்று தினமும் 20 நிமிடங்களாவது செய்து வந்தால் 4 முதல் 8 வாரங்களில் முழுமையான தீர்வு கிடைக்கும்.







Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm
416.617.5721



**இணுவில் திருவூர் ஒன்றியம் பெருமையுடன் வழங்கும்**

**பொங்கல் விழா - 2013**



**காலம்:** 10.01.2013 (சனிக்கிழமை)
**நேரம்:** மாலை 5:00 மணி
**இடம்:** கனடா கந்தசாமி கோவில், விழாமண்டபம்

மகாவித்துவான் இணுவில் ந. வீரமணிஐயர் கலையரங்கு
733 பேர்ச்மவுண்ற் வீதி, ஸ்காபுரோ

**நிகழ்ச்சிகள்**

- சிறுவர் நகழ்ச்சிகள், • பேச்சு, • பரதநாட்டியம், • வாத்திய விருந்து
- இன்னிசை விருந்து, • தாளவாத்தய கச்சேரி, • கரியோக்கிப்பாடல்கள்,
- மிருதங்க சோலோ.

மற்றும் பல கண்ணைக் கவரும் நடனங்கள் செவிக்கு விருந்தாகும் இனிய இசை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்

**416.496.9071 / 416430.0422 / 647.928.7407**





**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# முதியோர் நிலைமையும் அவர்களைத் தாக்கும் நோய்களும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

கடந்த இதழ் தொடர்ச்சி...

**மூட்டுவீக்கம்** *(Osteo Arthritis)*


பெரும்பாலும் முதுமைக்காலத்தில் முதுகுத்தண்டின் மேற்புறத்தில் சுற்றியுள்ள குருத்தெலும்புகள் தகுந்த போசாக்கு இன்மையால் தளர்வடையத் தொடங்கும். அத்துடன் முதுகுத்தண்டின் இடையேயுள்ள திரவமும் வரட்சியடைத் தொடங்கி வேதனையும், வலுவற்ற வீக்கமும் ஏற்படலாம். இப்படி நிகழும் போது முதுகுதண்டு மூட்டுக்கள் ஒன்றோடு ஒன்று உராய்வு ஏற்பட்டு முதுகுவிறைப்புடன் வேதனையும் தென்படும். பெரும்பாலும் நீண்டநேரம் ஒரே இடத்தில் இருந்து எழும்பும்போது அல்லது துயில் முடிவுற்ற பின் எழும்பும் வேளையிலும் ஏற்படலாம்.

**அடுத்து வருவது எலும்பு நலிவுநோய்** *(Osteo Psoriasis)*.

இது பெரும்பாலும் வயது செல்லச்செல்ல முதியவர்களுக்கு கல்சியச்சத்து குறையத் தொடங்கிவிடும். இதனால் எலும்புகளுக்கு தேவையான கல்சியச்சத்து பற்றாக்குறை வினால் முதுகுத் தண்டில் உள்ள எலும்புகள் நொருங்கத் தொடங்குவதுடன் மேலும் தரம்குறைந்த துவாரங்கள் ஏற்படலாம் எனவும் அறிய முடிகின்றது. இந்நிலை ஏற்படும்போது தும்மினாலோ அல்லது படுக்கையில் சரியும் போதோ வேதனையை உணரமுடியும். இந்நிலை பெரும்பாலும் முதியோரான ஆண்களை விட பெண்களுக்கே அதிகம் நிகழ்வதுண்டு. இப்படியான தன்மைகள்: சிறுநீரகம், சிறுநீர்ப்பை முன்வாய்ச்சுரப்பி அல்லது கருப்பை போன்ற உறுப்புகளில் ஏதும் வியாதிநிலை இருக்கும் போதும் ஏற்படலாம் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

**முதியோருக்கு ஏற்படும் இடுப்புச்சந்துவலி** *(Sciatica)*.

இதனை இடுப்புச்சந்துவாதம் எனவும் கூறுவோர் உளர். முதுகுவலி உள்ளோருக்கு ஓரளவு ஏற்பட இடம் உண்டு. இடுப்பிலும் காலிலும் இருந்து கீழே குதி வரை செல்லும் நரம்புகளின் இடையில் இருக்கும் வட்டு அல்லது எலும்பு அல்லது எலும்புக்குச்சு (Donespur) என்பவற்றால் நெரிபட்டு அமுத்த நிலை ஏற்படலாம். இந்நிலையில் பாதங்களில் இருந்து காலின் கீழ் பகுதிவரை வலித்தன்மை ஏற்பட்டு வரட்சித்தன்மையும் காணப்படும். விறைப்புடன் உணர்ச்சியற்று தசையும் பலம்மற்றுத் தென்படும். இன்னும் சில முதியவர்களுக்கு கழுத்துவலி ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலை பெரும்பாலும் முதுகுத்தண்டோடு சேர்ந்த எலும்புகள் மெத்தை போன்ற வட்டுக்கள் வலிவடைந்து, தமது குருத்தெலும்புகளை இழுக்கும் போது எலும்பு மூட்டு வீக்கம் ஏற்படலாம். இதனால் எலும்புகள் ஒன்றோடு ஒன்று சேரும்போது வலித்தன்மை புலனாகும். மேலும் அசையும் போதும் சிலவேளைகளில் வலித்தன்மை தென்படலாம். இந்நிலை இருப்போர் குப்புறப்படுக்கும் பழக்கத்தை தவிர்ப்பது நல்லதாகும்.




Normal joint    Joint affected by osteoarthritis

கழுத்துவலி அதிகரித்தால் முதல் குளிர்நீர் ஒத்தணம் செய்து கொள்வது நல்லது. பல தடவை செய்யலாம். இதனால் நற்பயன் உண்டு. வலி குறைந்த பின் வெந்நீர் ஒத்தணம் பிடிப்பது நன்று. சில முதியவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டு துன்பப்படும் நிலையும் உண்டு. இவர்கள் பெரும்பாலும் போதிய தண்ணீர் அருந்த வேண்டும். மரக்கறிவகை சூப்பு பாகம் செய்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் உணவுவகை உண்ணும்போது மரக்கறிவகை, கீரைவகை, சலாட் போன்றவற்றை அதிகம் உண்ணுவது நன்று. எண்ணெய்ப்பொருட்களை அதிகம் உண்ணக்கூடாது. இடையிடையே சீரகக் கூட்டுக்கறி பாகம் செய்து உணவுடன் சேர்ப்பது நன்மை பயக்கும்.

பழவர்க்கத்தில் மாதுளம்பழம், வத்தகப்பழம், வெள்ளரிப்பழம், நெல்லிக்காய் போன்ற வற்றை சாப்பிட்டு வந்தால் சலக்கடுப்பு நீங்குவதுடன் சிறுநீரும் தடையின்றி வெளியாகும். இடையிடையே மல்லிக் கசாயம், வெந்தய ஊறல், நெல்லிரசம் போன்றவை தவறாது சாப்பிட்டுவரின் நன்மை பயக்கும் நிலையைக் கண்டு கொள்வீர்கள். அத்துடன் கறிமுருங்கை யிலையை எடுத்து பிட்டுத் தயாரிக்கும் போது சேர்த்து பாகம் செய்து சாப்பிட்டு வந்தால் மூட்டு வேதனை குறைவடைய இடம் உண்டு. இவற்றை இங்கு குறிப்பிட்ட போதும் தங்களின் உடல்நிலை காலநிலைக்கு ஏற்ப தவறாது நன்கு தரமுள்ள நார்ச்சத்து பொருட்களை கையாள வேண்டும். மேலும் தங்களுக்கு பசியின்மை இருந்தால், அதற்குரிய காரணத்தை தங்கள் வைத்தியர்களிடம் சென்று பரீட்சித்து சிகிச்சை பெறுவது நன்று.

தூக்கமின்மை முதியோருக்கு ஏற்படுவது வழக்கம். இவர்களின் உடல் நிலைத் தாக்கம் தேவையற்ற சிந்தனை, குடும்ப பிரச்சினை, படுக்கை சரியாக அமையா விட்டாலும் இப்படி பல தன்மைகளால் தடைப்படலாம். இவற்றில் குறையிருப்பின் தவிர்த்துக் கொள்ளவும். எண்ணெய் உணவுப் பொருட்கள் உடம்பில் சேருவதி னால் கொழுப்புப்பதார்த்தம் அதிகரித்து மாரடைப்பு ஏற்படுவதற்கு வழியாக அமைந்துவிடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நன்று. தவிர்ப்பது உத்தமம்.


மற்றும் சலரோகம், புற்றுநோய் போன்றவை தாக்காதிருக்க தவறாது தங்கள் வைத்தியர்களிடம் சென்று பரீட்சித்துக் கொள்வது மிக இன்றியமையாததாகும். அவர்கள் கூறியபடி தவறாமல் சமூகம் கொடுத்து வருதல் வேண்டும். நற்பயன் அடைவீர்கள்.

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.707.4378

**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**
mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**


**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at *Scarborough & Stouffville*
**Contact: 647.340.9490 / 647.831.0363**

# சார்பியல் - 12

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

சிறப்புச் சார்புக் கொள்கையின் சிறப்புக்களிற் சிறந்தது $E = mC^2$ என்பதனை சென்ற தடவையிற் கூறியிருந்தேன். அதன் தொடர்ச்சியான அணுக்குண்டு விவகாரங் களையும் அறிந்திருப்பீர்கள். அழிவுக்கருவி யாக அணுசக்தி பாவிக்கப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் அயன்ஸ்ரைன் $E = mC^2$ இனை அறிமுகப்படுத்துகையில் இப்படியான விபரீதங்கள் வெளிவரும் என்று எண்ணவே இல்லை. இயற்கையின் இரகச- ியங்களை, அழகியல் வெளிப்பாடுகளை வெளிக்கொண்டு வருவதே அவரது நோக்கமாக இருந்தது. இச்சமன்பாடுதான் கதிரவனிலும் விண்மீன்களிலும் இருந்து வெளிவீசப்படும் சக்திக்கான விளக்கத்தினை யும் வானவியல் ஆய்வாளர்களுக்கு தெளிவுபடுத்தியது.

இனி, இச்சமன்பாட்டின் முடிவு ஒன்றினையும் உய்த்தறிவோம். பொருள் ஒன்று தனது இயக்கம் காரணமாக சக்தியைப் பெறுகின்றது. அதனைப் பொதுவாக பொருளின் இயக்கசக்தி என்போம். இச்சக்தியானது அப்பொருளுடன் சேர்ந்து இருக்கும். அயன்ஸ்ரைனின் $E = mC^2$ எனும் சமன்பாடானது திணிவினையும் சக்தியினை யும் தொடர்புடையதாக ஆக்கியதுடன் இரண்டையும் சமவலுவாக்கியும் உள்ளது. அதனால் இயங்குகின்ற பொருளின் இயக்க சக்தியானது அதனது சமவலிமை இயல்பினை ஒத்ததாய் அப்பொருளில் திணிவினைப் போலச் செயற்படலாமல்லவா. அதனால் இவ்வியக்கச்சக்தியானது அப்பொருளின் திணிவினை அதிகரிக்கச் செய்துவிடுகிறது என்ற உண்மை வெளி வருகிறது. அதனை இன்னொரு வகையிற் கூறுவதாயின் பொருட்கள் இயங்குகையில் அவற்றின் பாரம், அவை ஓய்வாக இருப்பதி லும் பார்க்க அதிகரிக்கிறது. சாதாரணமான எங்கள் வாழ்வியல் இயக்கங்களில் இது எங்களுக்குப் புலப்படாது. பொருளின் வேகமானது ஒளியினது வேகத்தினை அண்மிக்குகையில் இந்தத் திணிவு அதிகரிப்பானது பெரியதாக இருக்கும்.

சுவாரசியமான இந்த விடயத்தினைக் இன்னமும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம். இயங்குகின்ற அப்பொருளின் வேகத்தினை அதிகரிக்கச் செய்வதற்கு இன்னமும் சக்தி தேவைப்படும். ஆனால் இப்போது தேவைப் படும் சக்தியானது முன்னரைவிட அதிகமாக இருக்க வேண்டும். ஏனெனில் இப்போது கொண்டுள்ள இயக்கம் காரணமாகப் பெற்ற சக்தியின் காரணமாக அதன் சமவலுத் திணிவானது கூடியிருக்கும். இதனை விளக்குகின்ற எடுத்துக் காட்டினைப் பார்ப்போம். பொருள் ஒன்று ஒளியின் வேகத்தின் பத்து வீதமான வேகத்தில் செல்லுகையில் அதன் திணிவானது அதன் இயல்பான திணிவின் 0.5 வீதத்தால்தான் அதிகரிக்கும். அதாவது 100 கிராம் திணிவானது செக்கனுக்கு 30,000 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றால் அதன் திணிவு 100.5 கிராமாக இருக்கும். ஒருவேளை அது தனது வேகத்தினை ஒளி யின் வேகத்தின் 90 வீதமாக மாற்றினால் அதன் திணிவானது 50 வீதத்தினால் அதிகரிக்கும். எடுத்துக் காட்டாக அதே 100 கிராமான பொருள் செக்கனுக்கு 270,000 கிலோமீற்றர் வேகத்தில் சென்றால் அதனது திணிவு 150 கிராமாக வந்துவிடும். பார்த்தீர்களா! வித்தியாசத்தினை. ஒளியின் வேகத்திற்குக் கிட்டவாக பொருளின் வேகம் வரவர இந்தத் திணிவதிகரிப்பு வீதமும் அதிகரித்துக் கொண்டு போகும். ஏனென்பது உங்களுக்குத் தெரியும் தானே. திணிவு அதிகரிக்க அதி- கரிக்க பொருளின் வேகத்தை மேலும் கூட்டுவதற்கு பெருமளவு சக்தி இன்னமும் தேவைப்படும். இதன் விளைவு என்னவெனில், எந்தவொரு திணிவும் (பொருளும்) ஒளியின் வேகத்தை அடைய முடியாது என்றாகிறது. ஏனெனில் பெருளானது ஒளியின் வேகத்தினைப் பெறுகையில் அதன் திணி வானது முடிவிலா (முடிவிலி) பெறுமானத்தை அடைந்துவிடும். அதற்குத் தேவையான சக்தியும் முடிவிலாத அளவு ஆகும். எனவே எந்தவொரு பொருளும் ஒளியின் வேகத்தினை அடைய முடியாது. அதாவது ஒளியின் வேகமே, பொருட்களின் எல்லை வேகமாகும்.

லோறன்சும் பிற்ஸ்ஜெராட்டினதும் மாற்றீடு களும் கூட, பொருட்களின் வேக அதிகரிப்புடனான திணிவதிகரிப்பினைக் காட்டியிருந்தன. ஆனால் ஈதரில் ஏற்படும் இயக்கம் காரணமாகவே இது நிகழ்கின்றது என இல்லாத ஈதரினைக் கூறிச் சிக்கற் பட்டுவிட்டார்கள். அயன்ஸ்ரைனின் ஈதர் அகற்றப்பட்ட வெளியில் இம்மாற்றமானது ஒரு உண்மையான விளைவெனக் காட்டப் பட்டுள்ளது. சிறப்புச் சார்புத் தத்துவத்தின் பிரதான முடிவுகளில் இதுவும் ஒன்றாகும். இதனைத் திணிவதிகரிப்பு என்பார்கள். திணிவு அதிகரிப்பினைப் போல் இன்னமும் சில விளைவுகளை சிறப்புச் சார்புத் தத்துவம் காட்டுகின்றது. அந்த விளைவுகள் நீளக் குறுக்கம், நேரக்குறுக்கம் என்பவை யாகும். நீளக் குறுக்கம் என்பது பற்றி ஏற்கெனவே பார்த்து விட்டோம். அதில் இப்போதுள்ள மாற்றம் என்னவெனில், ஈதர் எனவென்று இல்லை என்பதே. அடுத்த தடவை யில் நேரக் குறுக்கம் பற்றி அடுத்துப் பார்ப்போம்.


- கனி -

416.261.1348

leptons@hotmail.ca




உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.




# ஐங்கலை வெண்பா

## 2. இசை

சங்கீதம் தன்னை தனியாக எந்தனுக்குப்
பங்கமின்றிச் சின்னாள் படிப்பித்த - தங்க
நடேசன் ஆசிரிய நல்லார்க்கு நன்றிக்
கடன்செலுத்து கின்றேன் கசிந்து. (9)

(பங்கமின்றி - குறையேதும் இன்றி.)

ஈர்த்து மனந்தன்னை எல்லையில்லா இன்பத்தை
வார்த்துப் பழம்பால்தேன் வானமுதம் - சேர்த்து
விருந்துச் சுவையூட்டி மேனகைபோல் பக்கல்
இருந்துதான் கொஞ்சும் இசை. (10)

(மேனகை - தேவலோக அழகி.)

மனக்கவலை நோயுடலம் வாட்டும் வறுமை
இனக்கவலைக் கெல்லாமின் னிசையே - தனக்குவமை
இல்லா மருந்தாம் இசைவாணர் எல்லோரும்
சொல்வார் இதையே துணிந்து. (11)

புல்லும் புழுவும் மரஞ்செடியும் புள்ளினமும்
கல்லும் மணலும் கடலுயிரும் - நல்லிசையால்
கட்டுண்(டு) அமையும் கசிந்து களித்தாடும்
மட்டில் அளவிசையின் மாண்பு. (12)

(மட்டில் அளவிசையின் மாண்பு - மட்டு இல் அளவு இசையின் மாண்புளு இசையின் பெருமை அளவிட முடியாதது.)

கல்லாதார் ஆயிடினும் கன்னலிசைக்(கு) ஆளாகார்
பொல்லாதார் என்றே புரிந்தவரை - மெல்ல
வெருவி விலகிடுதல் நன்றாகும் வெள்ளம்
வரமுன்னர் கட்டும் வரம்பு. (13)

(கல்லாதார் - இசையைக் கல்லாதார். கன்னல் - இனிமை. வெருவி - அஞ்சி.)

சாதி மதபேதம் தாண்டிநிற்கும் சங்கீதம்
வாதம் பிடிவாதம் வஞ்சகம்பொய் - சூதுகளின்
சூத்தரின் சூழ்ச்சிக் கொடுமைப் புயலினின்றும்
காத்துதவும் காதற் கலை. (14)

இசைக்கெல்லை இல்லை மொழித்தடையும் யில்லை
பசிக்கின்ற மாடும் புசியா(து) - இசைகேட்கும்
பாம்பும் மகிழ்ந்தாடும் பண்கேட்டுத் தேன்சொரியும்
சாம்பும் மலரும் தளிர்த்து. (15)

(சாம்புதல் - வாடுதல்.)

குரலில்லா தார்க்கு விரலென்று சொல்வார்
புரிசங்கும் யாழும் குழலும் - சரசலங்கை
மத்தளம் மேளம் உடுக்கு மணிமுரசென்(று)
எத்தனை வாத்தியங்க ளே. (16)

(சரசலங்கை - சரசரக்கும் சலங்கைளு சரமாகக் கோக்கப்பெற்ற சலங்கைகள் என்றும் கொள்ளலாம்.)



கவிஞர் வி. கந்தவனம்

**Free Real Estate Class**
Free Realestate Class
Call: **416.321.6969**

# யார் தமிழர்?

11ஆம் பக்கத்தொடர்ச்சி

வசித்து வந்த ஒரே குடும்பத்தவர் தான்.

அது சரி, ஆனால் இந்த திராவிட இனம் என்பது எங்கே, எப்போது, எப்படி தோன்றியதாம்? அது கல் தோன்றி மண் தோன்றும் காலத்துக்கு முன்னால் எல்லாம் தோன்றியது என்று நாம் மிகைப் படுத்தி, 'முதலில் தோன்றிய மூத்த குடியாக்கும்' என்றெல்லாம் கதை விட்டுக்கொண்டிருக்க முடியாது. காரணம் இன்று எல்லா கூற்றுகளையும் அறிவியல் ரீதியாக பரிசோதிக்க முடியும்! மானுடம் என்ற ஜீவராசி தோன்றியே ஒரு மில்லியன் ஆண்டுகள் தான் ஆகின்றன, என்பது அறிவியல் உண்மை. அப்புறம், இந்த கல் தோன்றி, மண் தோன்றா காலத்து கதைகளை சொன்னால், அது அபத்தம் ஆகிவிடுமே!

கதை எல்லாம் எதுவுமில்லை, நிஜம் இது தான்: கிட்ட தட்ட ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் சிந்து சமவெளியில் நாகரிகத்தை தோற்றுவித்தவர்கள். ஆஸ்கோ பார்போலா என்ற மொழியியல் நிபுணரும், ஐராவதம் மஹாதேவன் அவர்களும் தெள்ளத் தெளிவாக சொல்லி இருக்கிறனர். சிந்து சமவெளி காரர்களின் எழுத்து ஆதி திராவிட எழுத்துவடிவம் தானாம்! என்றாலும், அடுத்த கேள்வி எழுகிறது. சிந்து சமவெளிக்கு திராவிடர்கள் எப்படி வந்து சேர்ந்தார்கள், அதற்கு முன்னால் அவர்கள் எங்கே இருந்தார்கள்?

எல்லா மனிதர்களும் ஆரம்பத்தில் தென் கிழக்கு ஆ∴ப்ரிக்காவில் தான் தோன்றினார்கள். அங்கே தான் ஹொமினினே என்கிற ஒரு வாலற்ற குரங்கு இனம் பரிணாம வளர்ச்சியில் உரு மாறிக்கொண்டே இருந்தது. இந்த ஹோமினினே குரங்கு தான் கிட்ட தட்ட ஐந்தாறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் சிம்பான்சி, போனோபோ, ஆஸ்திரலோபிதிகஸ் என்கிற மூன்று வகைகளாக பிரிந்தது. இதில் ஆஸ்திரலோபிதிகஸ் என்கிற வகை மேலும் மேலும் பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டு, உருமாறிக்கொண்டே போய், கிட்ட தட்ட ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இப்போது இருக்கும் மனித இனமான ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ் என்கிற இனமாக உருவானது. இந்த இனம் தோன்றியது தென்கிழக்கு ஆ∴ப்ரிக்காவில் தான். ஆரம்பத்தில் இந்த இனத்தில் ஜனத்தொகை சில நூறுகளாக மட்டுமே இருந்தன. இவை ஒரே மொழியை பேசின. ஒரேவிதமான நம்பிக்கைகளை கொண்டிருந்தன. ஒரேவிதமான மரபுகளை பின்பற்றின. உணர்ச்சிகள், தேவைகள், ஆசைகள், எண்ணங்கள், அவ்வளவு ஏன், உடல் மற்றும் மனநலநோய்கள் கூட இவற்றுக்கு ஒரே மாதிரித்தான் இருந்தன. இந்த இனம் உணவு தேடி, நாடோடிகளாய் பல புதிய திறந்தவெளிகளை நோக்கி பயணித்தன. இப்படி பரவிய இந்த மனித கூட்டம், கடந்த பத்தாயிரம் ஆண்டுகளாய், பல திக்குகளுக்கு பிரிந்து போயின. போன இடத்தில் புதுப்புது உணவுகளை உட்கொண்டு, புதுப்புது வாழ்க்கை முறைகளை பின்பற்றி, மொழியை மாற்றி மாற்றி பேசினாலும், இன்றுவரை இவை அனைத்துமே ஒரு இனம் தான். உலகின் எந்தக் கோடியில் பிறந்த மனிதருக்கும், வேறு எந்த கோடியில் பிறந்த அடுத்தவர் ரத்த/உறுப்பு தானம் செய்ய முடியும். இருவரது திசுகளும் பொருத்தமாய் இருந்தால். இதைவிட பெரிய அதிசயம், இன்றும் மனிதர்களுக்கும் போனோபோ குரங்குகளுக்கு மரபணுக்கள் கிட்டத் தட்ட 98% ஒரே மாதிரி இருக்கின்றனவாம், பொனோபோக்களின் உதிரத்தை மனிதர்களுக்கு செலுத்த முடியுமாம். பொனோபோக்களுக்கு மனிதர்களுக்கு இனக்கலப்பு செய்தால் குழந்தைகூட பிறக்கலாம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். ஐந்தாறு மில்லியன் வருடங்களுக்கு முன்பே பிரிந்து போன சகோதர இனங்களான பொனோப்போவும் மானுடமும் இத்தனை ஒற்றுமைகள் இன்னும் இருக்கின்றன என்றால், பத்தே பத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உணவைத் தேடி போனதில் பிரிந்து போன மனித வர்க்கம் இன்னும் எத்தனை நெருக்கமானதாக இருக்க வேண்டும்!

அதனால் தான் எத்தனை மொழிகளை நாம் பேசினாலும் எல்லா மொழிகளுமே தாயை, 'மா' என்று தான் அழைக்கின்றன. அதனால் தான் நெதர்லாந்தில் பிறந்தாலும் கமில் ஸ்வெலிபில், மாதிரியான ஆசாமிகளுக்கு தமிழ் மீது ஆர்வம் வருகிறது. ஆக, எல்லா மனிதர்களும் அடிப்படையில் ஒன்றுதான் என்றால் தமிழர்கள் என்பவர்கள் யார்?

ஆ∴ப்ரிக்காவில் தோன்றி, சிந்துசமவெளியில் நாகரிகம் கண்டு, திராவிட மொழியையும், கலாச்சாரத்தையும் தோற்றுவித்து, பல ராஜியங்கள் கண்டு, இன்னும் இன்னும் பல புதிய நிலபரப்புகளுக்கு பரவிக்கொண்டு இருக்கும் அந்த இனம் தான் தமிழ் இனம். இந்த பெரிய பயணத்தில் அவர்களின் மொழி மாறி இருக்கலாம், அவர்களின் வாழ்க்கை முறை மாறி இருக்கலாம். ஆனால் தொடர்ந்து பயணிப்பதும், பிழைப்பதும், புதிய சூழலுக்கு தக்கபடி தங்களை மாற்றிக்கொண்டே போவதும் தான் இவர்களின் அடையாளங்கள். இவற்றை வைத்து இவர்களை நீங்கள் இனம் காணலாம். இப்போது சொல்லுங்கள் பார்ப்போம், தமிழர்கள் என்றால் யார்?

-- மருத்துவர் ஷாலினி.

**Question Time**

**Q WHAT is the world's oldest language still spoken today?**
**C Mayo, Rotherham**

A RECENT archaeological evidence suggests that Tamil spoken in the Indian sub-continent could have been the language used by the Indus civilisation and even the Sumerians.


References to rivers that dried up 10,000 years ago are seen in Tamil literature. In fact, there is a possibility that Tamil was the root of Sanskrit, in turn the root of all Indo European languages.

**Flora Pulman**
**Ivybridge, Devon**

# A New Project By TRIDEL

## TRIO @ HWY 404 & SHEPPARD






## Occupancy Spring 2016

**For Further information Please Call**

**Tel: 416.321.6969**

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

**5215 Finch Ave, E, #203 - Tel: 416.321.6969**
**Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666**

*Independently Owned & Operated

# SKN FINANCIAL



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

எங்களது சேவை இப்போது ப்ராம்டணிலும்!...

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனை வாங்குவதில் பணச் சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

**உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..**

**குறைந்த வட்டி!..**

**நிறைந்த பெறுமதி!...**

## SKN FINANCIAL

**அன்பான சேவையைக் கனடாவில் வழங்கும் நிறுவனம்.**




**Brampton, Kennedy & Steeles, 905-499-0800**

**Scarborough , Brimley & Eglinton, 416 -269 -5393**


Trinity Events
when silence breaks, music speaks
PRESENTS
FEB 16th 2013
VIJAY
TV PARTNER
பிரபல பாடகர்கள்
Yuvan Shanker Raja
Karthik Raja
K J Jesudas
S P Balasubramaniyam
Hariharan
Mano
Karthik
Haricharan
Vijay Jesudas
Satyan
Bhavatharini
Chitra
Sadhana Sargam
Shweta Mohan
N S K Ramya
தென்னிந்திய
திரைபிரபலங்கள்
Goutham Menon
(Host)
Vivek
Parthipan
Sneha
Gobinath
(Host)
Prasanna
Solo Singers
Priya Himesh
Priyadharshini
Rahini Sri
(Super Singer)
Anita
(Super Singer)
எங்கேயும் எப்போதும்
ராஜா
100 இற்கும் மேற்பட்ட
இசை கலைஞர்கள்
பங்குபெறும் மாபெரும்
இன்னிசை நிகழ்ச்சி
AT ROGERS CENTRE TORONTO CANADA
ROGERS
CENTRE
TOLL FREE:1.855.554.4554
ticketmaster
1-855-985-5000
www.trinityeventsonline.com
TICKETS : VVIP, $150.00(VIP), $100.00, $80.00, $60.00, $39.00

# மரண அறிவித்தல்

# திரு. நவரட்ணம் சுந்தரலிங்கம் (சுந்தரா)




கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிப்பிடமாகவும் கொண்ட சுந்தரா என்றழைக்கப்படும் திரு. நவரட்ணம் சுந்தரலிங்கம் அவர்கள் 12.01.2013 சனிக்கிழமையன்று இயற்கை எய்தினார்.

இவர் காலஞ்சென்ற கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த நவரட்ணம் நாகபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், கல்வியங்காடு ஆறுமுகம் ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் ராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், ராசாத்தி என்றழைக்கப்படும் தனேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரகுமார் (நோர்வே), குமுதினி (கனடா), அமுதினி (கனடா), சுரேந்திரகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தர்மலிங்கம். ராஜலட்சுமி, பரராஜசிங்கம், தங்கரட்ணம், சீதாலட்சுமி, விக்னேஸ்வரலிங்கம், ஜெயலிங்கம், காலஞ்சென்ற செல்வமலர். ஆகியோரின் அன்புச் சகோதரரும், சைலா (நோர்வே), சண்முகநாதன் (கனடா), தவராஜா (கனடா), மீரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜீவா, சுகந்த், செந்தூரன், சவித்திரா, நிவேதா, சனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 1591 ELGIN MILLS ROAD EAST, RICHMOND HILL, ON, L4S 1M9 என்ற முகவரியில் அமைந்துள்ள "ELGIN MILLS CEMETERY" யில் 15.01.2013 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5:00 மணியில் இருந்து 9:00 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு, 16.01.2013 புதன்கிழமை அதே இடத்தில் காலை 9.00 மணியில் இருந்து 12.00 மணிவரை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று தகனம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மலர்வு
04.06.1935



உதிர்வு
12.01.2013

**தொடர்புகளுக்கு:**
905 470 9777 (சுரேன்)
416 937 2006 (மீரா)
416 575 9901 (சண்)
647 993 2220 (தவராசா)


## வாய்ப்பும்...வளர்ச்சியும்...
## சூப்பர் வருமானம் தரும் EMini S&P500

சில மணி நேரத்தில் வீட்டில் இருந்து கொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?






### முதலீட்டின் ரகசியங்கள்:

வெற்றிகரமான முதலீடு குறித்து சில முக்கிய ரகசியங்கள் உண்டு. இந்த ரகசியங்கள் பின்பற்றுவதற்கு எளிமையானவை. ஆனால் பலராலும் பின்பற்றப்படாதவை , நீங்கள் அந்த ரகசியத்தை பின்பற்றினால் நிச்சயம் ஜெயிப்பீர்கள். மகாபாரதத்தில் அபிமன்யுவின் கதை நம் எல்லோருக்கும் தெரியும். சக்கரவியுகத்தை அமைத்துக் கொண்டு எதிரிகளை துவம்சம் செய்தவன். ஆனால் அப்பேற்பட்ட வீரனுக்கு அந்த சக்கர வியுகத்திலிருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் போனதுதான் விதி. முதலீட்டாளர்களாகிய நாமும் சரியான நேரத்தில் முதலீடு செய்கிறோம். ஆனால் எப்போது வெளியே வருவது என்று தெரியாததால் இழப்பைச் சந்திக்கிறோம். ஒரு முதலீட்டிலிருந்து எப்போது வெளியே வருவது? நம் தேவையும் எதிர்பார்ப்பும் நிறைவேறிவிட்டால், அடுத்த நிமிடமே அதை காப்பாற்றிக்கொண்டு வெளியே வர வேண்டும். அதை கற்றுக் கொடுக்க நாங்க ரெடி, கற்பதற்கு நீங்க தயாரா? அழையுங்கள் CanBull Futures Trading!

### EMini S&P500 டெக்னிக்கல் பார்வை:

1400 WILL PENETRATE TO 1429 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505!

1363 WILL SLIDE DOWN TO 1315 AND 1295 TO HIT THE PREVIOUS LOW 1252 & 1100

THE 5 RICHEST MEN IN THE WORLD




LIVE CHAT ROOM & LIVE FLOOR TRADING

தேவை - பணம்
தேடல் - CanBull Inc
வெற்றி - நிச்சயம்



GTA SQUARE
222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

# மாடு சூப்பிய பனங்காய்

எனது பலம் எனது பழைய மாணவர்கள் என்று பெருமை பேசித் திரிகின்ற நான் அவர்களால் சில இக்கட்டுகளுக்கும் ஆளாகி எனது அசட்டுத் தனத்தைக் காண்பித்ததும் உண்டு. அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி எனது தற்பெருமைக்குச் சம்மட்டி அடி. பொதுவாகவே என்னைக் காண்கின்ற பழையமாணவர்கள் சம்பிரதாயபூர்வமாக சம்பாஷணையை ஆரம்பிக்கும் போது சேர் உங்கள் அபார ஞாபகசக்தி எங்களை அன்றும் இன்றும் திகைக்க வைக்கிறது என்று தொப்பி போட்டு விட்டே ஆரம்பிப்பார்கள். இதனால் எனது ஞாபகசக்தி பற்றி எனக்குச் சற்றுத் தற்பெருமைதான். இருமாதங்களுக்கு முன்னர் எனது இரு நூல்கள் கனடாவில் வெளியாகியதை சிலர் அறிந்திருப்பீர்கள். இந்த நூல்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலே அரும்பணியாற்றி என் நெஞ்சில் நிறைந்திருக்கும் அதிபர்கள் இருபத்தி மூவர் பற்றி எழுதியிருந்தேன். ரொறன்ரோவில் 320 பேர்கள் அந்த நூலினைப் பெற்றிருந்தார்கள். ஆனால் இதுவரை அந்நூல் பற்றி எனக்கு அபிப்பிராயம் சொன்னவர்கள் ஒரு கைக்குள் அடங்கக் கூடியவர்கள். ஆனால் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற ஒரு பெண்மணிக்கு அவரது சகோதரி பிரதி ஒன்றினை பார்ப்பதற்காக அனுப்பி வைக்க அந்தப் பெருமாட்டி என் புகழ் பாடியது என்னை மெய்மறக்கச் செய்தது. 'நல்ல மாடு என்றால் ஊரிலே உழும் தானே' என்ற பழமொழியை இரைமீட்ட வைத்தது. அது சோகக் கதை. எனக்கோ இந்த நூலினை உலகெங்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற பேராசை. இதற்கு ஊக்கம் கொடுத்தவர் எனது பெருமதிப்புக்குரியவரும், இலண்டன் சைவமுன்னேற்றச்சங்கத்தின் தூணாகச் செயற்படுபவருமான திரு. இராமநாதன் அவர்கள். இதென்ன பிரமாதம்! செய்து விடாலாம் எனக்கூறி இலண்டனில் வெளியீடு வைப்பதற்கு ஆயத்தம் செய்தார். நோர்வேயில் எனது பழைய மாணவர்களைக் கொண்ட ஒரு இலக்கிய ஆர்வலர் குழு உள்ளது. கலாநிதி இரகுபதி, இளவாலை விஜேந்திரன், நா. சோதிநாதன் போன்றோர் அங்கேயும் வெளியீடு வைப்பதற்காகத் தேதியும் குறித்து விட்டனர். பிறகென்ன. ஒவ்வொரு வார இறுதி நாட்களையும் விரயப் படுத்தாமல் ஆங்காங்கே வாழும் பழைய மாணவர்கள் வெளியீட்டு விழாக்களை ஒழுங்கு செய்ய வெறும் 48 நாட்களிலேயே, கொழும்பு, யாழ்ப்பாணம், பாரிஸ், ஹொல்லாந்து, ஜெர்மனி எனச் சுற்றுப் பயணம் ஒன்றினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்தது. எல்லாப் புகழும் அவர்களுக்கே!!

ஒரு சங்கடம். சென்ற ஆண்டு நவம்பர் மாதத்திலே எனக்கு சிறிதாக ஒரு மாரடைப்பு ஏற்பட்டது இங்கு வாழ்பவர்களில் மிகச் சிலருக்குத் தெரிந்திரும் ஒரு பத்து நாள் வைத்திய சாலையில் தங்கியிருந்தேன். குருதிக்குழாய்ப் பதிவு (Angiogram) செய்து பார்த்தவர்கள் பக்கத்து இணைநாடியில் (Co-lateral artery) ஒரு சிறு அடைப்பு உள்ளது குருதிக்குழாய் விரிவாக்கல் (Angioplasty) செய்தால் சரிப்படுத்தி விடலாம் எனக்கூறித் தேதியும் குறித்து வீட்டுக்கு அனுப்பிவிட்டனர் ஆனால் எனது பிரத்தியேக இதயவியல் நிபுணர் 'ஏனப்பா உன் வயதுக்கு குருதிக் கலன்கள் ஓரளவு நார்த் தன்மை பெற்றிருப்ப தால், ஊதி விரிவாக்கல் ( Balooning) செய்தால் சிலசமயம் அவை வெடித்துப் பிரச்சினை ஏற்படுதலாம் ஆகவே இப்படியே நாட்களை ஓட்டு என்றார். 'சரி ஐயனே நான் ஒரு பயணத்தை மேற்கொள்ளவுள்ளேன் அதற்கு ஒப்புதல் தருவீரா' என்றேன். சிறிது நேரம் யோசித்த பின்னர் 'கட்டாயம் போக வேண்டும் என்றால் போ ஆனால் மூன்று விசயம்' என்றார். 'என்ன' என்றேன். 'ஒரு உடநல காப்புறுதி எடுத்துக்கொள், விமானத்தில் தொடர்ந்து உட்கார்ந்திராதே இடையிடையே எழுந்து நட, உப்பினைக் கையாலும் தொடாதே' என்றார். 'எனக்குத் தொடர்ந்து இருப்பதில் கஷ்டம் இல்லை. அங்கே அரங்கேற்றங்களில் தொடர்ந்து ஆறு மணித்தியாலமாவது கல்லுப்பிள்ளையார் மாதிரி நான் உட்கார்ந்திருப்பேனே என்றேன். ஏளனமாகச் சிரித்தார். 'போற இடங்களில் எல்லாம் விருந்து அது இது என்று கணிசமாக உப்பு இருக்கும் பார்த்துக் கொள்' என்றார். அவருக்குத் தெரியுமா விமானத்தில் முதல் உணவே உப்பு, மிளகு தூளுடன் தான் வந்தது என்பது. விடுவேனா? சரி போற இடங்களில் இசக்குப்பிசகாய் ஏதேனும் நடந்து விட்டால் பழையமாணவர்கள் அநியாயத்துக்குக் கஷ்டப்படுவார்களே. ஆகவே இதயநிபுணர் கூறிய ஆலோசனைப்படி மருத்துவக் காப்புறுதி எடுக்கின்ற முயற்சியில் ஈடுபட்டேன். விசாரித்ததில் ஒரு சாரார் வயதைக் கேட்டவுடன் எட்டப் போய் விட்டார்கள். இன்னொரு சாரார் விசாரித்துச் சொல்கிறோம் என்றார்கள். இன்று வரை விசாரணை முடிந்ததாகத் தெரியவில்லை. T.D வங்கிக்காரர்கள் தான் செவி மடுத்தார்கள். வயது என்றார்கள் 77 என்றேன். சுகதேகியாக உள்ளாயா என்றனர். அப்படி இருந்தால் உங்களிடம் நான் ஏன் வருகிறேன். அப்போ உனது வருத்தங்களை எல்லாம் பட்டியலிடு என்றார்கள். இப்போதைக்கு, சலரோகத்திற்கு 36 வயது, இதய நோயிற்கு 20 வயது என்றதும், மாரடைப்பு வந்ததா என்றார்கள், ஒரு சிறிய மாரடைப்பு சென்ற நவம்பரில் வந்தது என்றேன். அப்போ அறுவை ஏதாயினும், என்றார்கள் ஒரு triple bypass 16 வருடங்களுக்கு முன் செய்துள்ளேன். இப்போ இன்னொரு நாடியில் சிறிய அடைப்பு உள்ளது. 'Triple bypass காலம் 10 வருடம். அது தாண்டி விட்டது என்றவர்கள் எத்தனை நாட்கள் பிரயாணம்' என்றார்கள். ஒரு 45 நாட்கள் வரை எடுக்கும் என்றேன். அப்பனே உன்னைக் கொண்டு போய் முழு உருப்படியாகக் கொண்டு வந்து இறக்குவது கஷ்டம் தான் என்றாலும், கணக்குப் போட்டுப் பார்த்து விட்டு 9500 டொலர் தருவதானால் காப்புறுதி செய்யலாம் என்றார்கள். எனது உடலைப் பொதியாக அனுப்புவதற்கே இந்தத் தொகை தேவையில்லையே என்றேன். அப்போ வேறு யாரையாவது பார்த்துக் கொள் என்றார்கள். இங்கே உள்ள எனது மாணவ டாக்டர்கள் நான்கு பேருடன் ஆலோசித்தேன். வெவ்வேறு விதமான அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இடர்நிலை (Risk) எடுத்து காப்புறுதி எடுக்காமல் போய்த்தான் பார்ப்போமே என எண்ணித் துணிந்தேன். எப்படியோ எண்ணியாங்கு எய்தி விட்டேன். இதோ உங்களுக்காக எழுதிக் கொண்டிருக்கிறேன்.

வேறு எங்கேயோ போய்விட்டேன் போலத் தெரிகிறதா? 'சேர்: இப்பவே நோர்வேக்கான விமானச் சீட்டு வாங்கினால் மிகவும் மலிவாகக் கிடைக்கும். நாட்செல்லச் செல்ல விலை அதிகரித்துக் கொண்டு போகும்' என இராமநாதன் கூறினார். அவர்கள் செப்ரெம்பர் 28ந்தேதி வைப்பதாக அறிவித்துள்ளார்கள். அதற்கு ஏற்றவாறு ஒஸ்லோவிற்கு பிரயாணச் சீட்டினை வாங்குமேன் என்றேன். சேர் ஒஸ்லோவில் இரண்டு விமானத் தளங்கள் உள்ளன. எதற்கு வாங்குவது என்றார். நான் இரகுபதியுடன் தொடர்பு கொண்டபின் சொல்வதாகக் கூறினேன். இரகுபதியிடம் கேட்டேன். சேர் இங்கு ஒஸ்லோ றிக்கி, ஒஸ்லோ ரோர்ப் என இரண்டு விமான தளங்கள் உள்ளன. றிக்கிதான் எங்களுக்குக் கிட்ட உள்ள தளம் என்றார். இங்குதான் எனது ஞாபக சக்தி காலைவாரி விட்டது. எனது ஞாபகசக்தியில் அதீத நம்பிக்கை வைத்த நான் எங்கும் இதனை குறித்து வைக்கவில்லை. இராமநாதனுடனும் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை அவர் அழைத்து எது விமான தளம் எனக் கேட்கும் வரை மறந்து விட்டேன். ஒஸ்லோவில் ஏதோ ஏதோ என நான் திக்கு முக்காடியபோது ரோர்ப்பா, றிக்கியா என்றார். நான் ரோர்ப்பென்று கூறிவிட்டேன். அவரும் பிரயாணச் சீட்டினை வாங்கிவிட்டார். சில நாட்களுக்குப் பின் இரகுபதியுடன் கதைத்த பொழுதுதான் என் முட்டாளத்தனம் பிரத்தியட்சமாகியது. ஐயோ சேர்! நீங்கள் றிக்கிக்கு எல்லவோ எடுத்திருக்க வேண்டும். ரோர்ப்பில் இருந்து விஜேந்திரன் வீடு வந்து சேரக் குறைந்தது 4 மணித்தியாலமாவது எடுக்கும் என்றார். என் முகத்தில் அசடு வழிந்ததை அவர் பார்த்திருக்கமாட்டார். என்ன செய்யலாம் என்றேன். தொனி மிக இறங்கியிருந்தது. பரவாயில்லை. சேர் வேலை நாள். விஜித் அரைநாள் விடுப்பு எடுத்துவிட்டு விமான தளம் வருவார் கவலைப்படாதீர்கள் என்றார். மனதுக்குள் முட்டாள் என வைத்திருக்கலாம். இப்படி வைவதற்காக எத்தனை வருடங்கள் காத்திருந்திருப்பார்களோ!! இலண்டனில் நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது. வியாழன் அன்று இராமநாதனும் நானும் நோர்வே புறப்படுவதெனத் தீர்மானித்தோம். விமானத்தில் கைப்பொதி மாத்திரம் தான் கட்டணம் இல்லாமல் ஒருவர் கொண்டு போகலாம். இன்னொரு பொதி என்றால் அநியாயக் காசு. நான்கு நாட்களுக்கு வேண்டிய துணிமணி மருந்து, சீப்பு சோப்பு, சவரத்துக்கான சாதனங்கள் மற்றும் எனது தலைக்குப் பூசி இழுக்க பிறில்கிறீம் சகிதம் ஒரு கைப் பொதியுள் அடக்கிவிட்டேன். சட்டன் விமானதளத்தில் இருந்துதான் பறந்தோம். எனவே நாம் காரில் ஹில்ரன் ஹோட்டலுக்குச் சென்று அவர்களுடைய கார் தரிப்பு நிலையத்தில் காரினை நிறுத்தி விட்டு அவர்களுடைய பேருந்தினில் விமான நிலையம் சென்றோம். எல்லாம் சுமுகமாகச் சென்றது. காபாந்து சோதனை வரை. பிளாஸ்ரிக் பெட்டி ஒன்றினுள்ளே காற்சட்டைப் பாக்கொட்டுக்குள் இருந்த அத்தனையையும் போடச் சொன்னார்கள். போட்டேன். இதையும் என எனது கைத்தடியைக் காட்டினார்கள். கொடுத்தேன். அது இல்லாமல் நடப்பாயா என்றார்கள். சுமாராக நடப்பேன் என்றேன். எனது காற்சட்டையினது பட்டியின் முன்புறத்தில் உலோகத்தினாலான வக்கிள் உள்ளது. காற்சட்டையை எனது இடுப்புடன் இறுகப் பற்ற வைப்பது இந்தப் பட்டியேதான். பட்டியில்லாமல் என் காற்சட்டை நீண்ட நேரம் அங்கே தங்கமாட்டாது மெல்லக் கீழே இறங்கும் என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அது அங்கே நிற்குமோ என்று கேட்டிருந்தால் நிற்காது என்றிருப்பேன். அவர்கள் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்ததோடு ஒருகையால் காற்சட்டையை தூக்கிப் பிடித்தபடி நின்றேன். பொதியினைத் திற என்றார்கள். மறு கையால் திறந்தேன். பார்த்தார்கள். இதனைக் கொண்டு செல்ல முடியாது எனக் கூறியபடி ஒரு பொருளை எடுத்தனர். எடுத்த பொருள் வேறொன்றுமில்லை. எனது பிறில்கிறீம் இருந்த குழாய். இதனை எப்படி கைப் பொதியுள் கொண்டு வரலாம் என்றார்கள். நான் கைப்பொதி மாத்திரம் தான் கொண்டு செல்கிறேன். இதனை இன்னொரு பொதியுள் எப்படி வைத்து அனுப்புவதாம் என்றேன். அது எங்களுக்குத் தெரியாது. இதனைக் குப்பைத் தொட்டியுள் போடப் போகிறோம். அப்போ நான் தலைக்கு எதனைத் தடவுவது என்றேன். அது உன் பிரச்சினை என்றவர்கள் 75 மி.லீற்றருக்கு மேற்பட்ட திரவப் பொருள் மற்றும் குறை திண்மம் எதனையும் கைப்பொதியுள் கொண்டு போகமுடியாது எனத் தெரியாதா என்றார்கள். தயவு செய்து அதனைக் கவனமாகப் பாருங்கள் நான் பிதுக்கிப் பிதுக்கி எடுத்ததால் குழாயின் பிற்பகுதி தட்டையாய் இருப்பதைப் பாருங்கள். உள்ளே ஒரு 25 மி. லீற்றர் வரையில்தான் இருக்கும் தயவு பண்ணுங்கள் என்றேன். நாங்கள் உள்ளே இருப்தைப் பார்ப்பதில்லை வெளியே என்ன எழுதியுள்ளது தெரியுமா 132 மி.லீ. ஆகவே அது குப்பைக் கூடையுள்தான் என்றபடி அதற்குள் வீசியும் விட்டனர். எது சொல்லியும் புண்ணியமில்லை. என்னைப் போலத் தலையிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்க மாட்டாது எனச் சிரித்தார் தன் தலையைத் தடவியபடி இராமநாதன். தலைக்கு என்ன செய்வதென்றேன். அங்கே போய் ஒன்றினை வாங்கினால் போச்சு என்றார் இராமநாதன்.

**பொன். கனகசபாபதி**



தொடர்ச்சி 24ஆம் பக்கம்

**TUTORING - ALL AGES & SUBJECTS**

*Including up to P.H.D single or group classes. Specialty with children with learning problems (ADD, ADHD, Aspergers, Autism) Punctuation, grammar, essays, civics, reading, history, science, French & Math special group rates. Also citizenship classes, Guitar classes.*

**Contact: 416.493.6540**

# மாடு...

23ஆம் பக்கத்தொடர்ச்சி


ஒஸ்லோ ரோர்ப் விமான தளம் சென்று இறங்கினோம் விஜித் எமக்காகக் காத்திருந்தார். நீண்ட நேரமாகக் காத்திருக்கிறீரா என்றேன். இன்று முழு நாள் விடுப்பு எடுத்துவிட்டேன் ஆகவே காத்திருக்கிறேன் என்றார். அரை நாள் எடுத்திருந்தால் நான் பிந்தியிருப்பேன். நீங்கள் காத்திருக்க வேண்டியிருந்திருக்கும் என்றார். விஜேந்திரன் வீடு நோக்கிப் பிரயாணித்தோம். நான் விஜித்துடன் பேசிக் கொண்டு இருந்தேன். இராமநாதன் பின் ஆசனத்தில் சாவகாசமாகச் சயனித்தார். பாறைகளையும், குன்றுகளையும் துளைத்து குழாயாக்கி அமைத்திருந்த வீதிகள் ஊடாக வண்டி சென்றது. அதனையும் வாவிகள் நிரம்ப தோணிகள் காணப்படுவதையும் இராமநாதனின் குறட்டை சகிதமாக இரசித்தபடி சென்று விஜேந்திரனின் இல்லத்தினை அடைந்தோம். எம்மைக் காண்பதற்காக இரகுபதி மற்றும் சோதிநாதன் வந்திருந்தார்கள் சந்தோசமாக பேசிக் களித்தோம். இரவு உணவினை உட்கொண்ட பின்னர் அவர்கள் வீடு சென்றார்கள். நான் இலங்கையில் நடைபெற்ற T-20 கிறிக்கட் பார்த்துவிட்டு உறங்கினேன். காலையில் எழுந்து காப்பி அருந்துகையில் இங்கே எங்கேயாச்சும் பிறில்கிறீம் வாங்கலாமா எனக் கேட்டேன். அப்படியான ஒரு பொருள் இங்கே விற்பனையாவதாகத் தெரியவில்லை. எதற்கும் சில பேரங்காடிகளில் பார்ப்போமே என்றார் விஜேந்திரன். ஆகவே காலைக் குளியலின் போது தலையில் தண்ணீர் படுவதைத் தவிர்த்து விட்டடேன். முதல் நாள் பூசிய பிறில்கிறீமை கழுவிவிடாமல் இருப்பதற்காகவே இம்முயற்சி. விசாரித்துப் பார்த்ததில் பிறில்கிறீம் என்ற பெயரையே அவ்வூரவர்கள் காதால் கேட்டதாகக் கூடத் தெரியவில்லை. மறுநாட் காலையில் விஜேந்திரன் நடத்துகின்ற தமிழ்ப்பாடசாலைக்குச் சென்றிருந்தேன். காலையில் நான் குளித்தபின்னர் தலையினை நன்கு துடைத்துவிட்டு ஒரு தேனீர்க்கறண்டி அளவு பிறில்கறீமினைத் தலையில் அப்பி எனது இரு கைகளாலும் தலைமயிரை மசி மசி என மசித்த பின்னரே தலைவாருவேன். இதன் பிறகுதான் தலைமயிர் எனது எண்ணப்படி இசைந்து கொடுக்கும். இன்று பிறில்கிறீம் இல்லாமையால் தலை பிசையப்படவில்லை. தலை வாரினேன் ஆனால் மயிர் எனது இச்சைப்படி இயங்க இசையவில்லை. வித்தியாசமாகத்தான் இருந்தது. என்னைக் கண்ட இரகுபதி என்ன சேர் தலை ஒரு மாதிரிக்கிடக்கிறதே என்றார். நான் விசயத்தைச் சொன்னதும் கொஞ்சம் தண்ணி அடித்து இழுத்திருக்கலாமே என்றார். தண்ணி அடிக்காமலேயே நான் தள்ளாடித்தான் நடக்கிறேன். இந்த அழகில் தண்ணியும் அடிச்சால் சொல்லத் தேவையில்லை என்றேன். சேர் நான் அதைச் சொல்லவில்லை தலைக்குச் சிறிது தண்ணீர் அடித்து இழுத்திருக்கலாமே, அதைத்தான் சொன்னேன் என்றார்.

எப்படியோ வெளியீட்டு விழா வெற்றிகரமாக முடிந்தது. வாரிய தலையுடன் என்னை முன்பு பார்த்தவர்களுக்கு என்தலை வித்தியாசமாகத் தெரிந்திருக்கும். என் தலையை முதன் முறை கண்டவர்களுக்கு வித்தியாசமான தலை எனத் தெரிந்திருக்கும். மறுநாள் மதியம் சோதிநாதனின் இல்லத்தில் மதிய போசனம். இராமநாதன் காலையே தனது உறவினர் ஒருவரின் இல்லத்திற்கு அப்பம் சாப்பிடப் போய்விட்டார். அங்கிருந்து சோதிநாதன் இல்லம் வந்தார். மதிய போசனம் முடிந்தபின்னர் சோதிநாதனின் காரினில் யாவரும் விமான தளம் சென்றோம். பயணம் நீண்டதாயினும் மகிழ்ச்சிகரமாக அமைந்தது. நான் இம்முறை முன் ஏற்பாடாக எனது காற்சட்டைப் பொக்கற்றுக்களில் எதனையுமே வைக்கவில்லை. காபாந்தில் பொக்கெற்றுக்குள் உள்ள மடிசஞ்சு. சில்லறைக்காசு, திறப்பு இத்தியாதி எல்லாவற்றினையும் பிளாஸ்ரிக் பெட்டி ஒன்றுள் போடு என்பார்கள். ஆகவே அவை யாவற்றினையும் கைப்பொதியுள் வைத்து விட்டேன். விமான தளம் சென்றடைந்தோம். எனக்கு வசதியாக சக்கர நாற்காலி கிடைத்தது. தள்ளுனர் கடகட எனக் கொண்டு சென்றார். இதற்காக ஒரு ஒலிம்பிக் போட்டி வைத்தால் மனுஷன் வெகு சுலபமாக ஒரு இடம் பிடித்த விடுவார். இராமநாதனால் அவருக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. அவர் ஓட்டமும் நடையுமாக வாயில் முணுமுணுத்தபடி பின் தொடர்ந்தார். காபாந்து தடை வந்தது. என்னைச் சுலபமாகத் தடைக்கு அப்பால் விட்டு விட்டார்கள். திரும்பிப் பார்த்தேன். இராமநாதன் துகில் உரியாத குறையாக கைகடிகாரம், மடிசஞ்சு, திறப்புக் கோர்வை, இடுப்புப் பட்டி இத்தியாதிகளைப் பெட்டியுள் போட்டபின் கால்களின் சப்பாத்தினையும் கழற்றிக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. பிளாஸ்ரிக் பெட்டிகள் தடைக்கூடாக மறுபக்கம் வந்தன. இராமநாதனும் தடையினைத் தாண்டி வந்தார். மாஸ்ரர் இதோ உங்கள் கைப்பொதி என்றார். அடுத்து எனது கைத்தடியையும் தந்தவர். பெட்டியுள் இருந்த மடிசஞ்சியையும் எடுத்து உங்கள் மடிசஞ்சி எனக் கூறித்தந்தார். நான் அதனை எனது காற்சட்டைப் பாக்கெட்டுக்குள் திணித்தேன். தள்ளுனர் வேகமாக எனது சில்லுக் கதிரையைத் தள்ளிக் கொண்டு போனார். இராமநாதன் கழற்றிய அத்தனையையும் மீண்டும் சூடியபின்னர் ஆசுவாசப் படுத்திக் கொண்டு எம்மைப் பின் தொடர்ந்தார். எனது தள்ளுனர் வேகமாகத் தள்ளி வந்தவர் தடுப்பு வாசல் வந்ததும் மின்னியில் பிரவேசச் சீட்டினைத் தா, இங்கே காட்ட வேணும் என்றார். நான் அது இராமநாதன் வசம் உள்ளது என்றேன். என்னை ஒரு ஓரத்தில் நிறுத்திவிட்டுச் சிறிது நேரம் நின்றவர் மீண்டும் உள்ளே சென்று சிறிது நேரத்தில் பிரயாணச் சீட்டுடன் வந்தார். எப்படி இது என்றேன். அரைகுறை ஆங்கிலத்தில் உன் நண்பன் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறான். அவன் வருகிற நேரம் வரட்டும். நான் உன்னை விமானத்தில் ஏற்றி விட்டுப் போகிறேன் என்றார். சொன்னபடி செய்தும் விட்டார். நான் விமானத்தின் பின் உள்ள இருக்கையில் அமர்ந்து இராமநாதனுக்கு என் அருகே இருக்கையை ஒதுக்கி விட்டுப் பலகணி ஊடாக இராமநாதன் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தேன். இராமநாதன் வந்தார். என் அருகே அமர்ந்தவர் முகத்தில் கலவரக்குறி தெரிந்தது. என்ன விசயம் என்றேன். எனது மடிசஞ்சு தொலைந்து விட்டது என்றார். அதுதான் சுணக்கமா என்றேன். நான் திரும்பவும் காபாந்து தடுப்புக்குச் சென்றேன். செல்வதற்கு விடமாட்டேன் என்று கூறியவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி பெற்றுப்போய் பெட்டி எல்லாம் தடவியும் காணவில்லை. இறுதியாக ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்துள்ளேன் என்றார். பரவாயில்லை! அதற்குள் 6, 7 கடன் அட்டைகளும், இங்கிலாந்துக் காசு 100 பவுண்டும் இயூறோ காசு 50 பவுணும் உள்ளன என்றார் மனச் சுமையுடன். சரி போகட்டும் இலண்டன் போனதும் கடன் அட்டை நிறுவனங்களுக்கு அறிவிக்க வேண்டும். புதிய முறைகள் கையாளப் படுவதால் யாரும் எனது அட்டைகளைப் பாவிக்க முடியாது என்றவர் மீண்டும் அது எங்கே தொலைந்திருக்கும் என ஆராய்ந்தார். மனம் சுங்சலப்பட்டது தெரிந்தது. காலையில் உணவருந்தப் போன வீட்டில் கண்ணாடி மேசைக்கு முன்னர் வைத்திருக்கலாம். ஆனால் அதனை அவர்கள் கண்டிருப்பார்களே இதுவரையில். அப்படி என்றால் எடுத்துச் சொல்லியிருப்பார்கள். அப்படி இருக்கமுடியாது. சோதிநாதன் வீட்டிலும் தொலைத்திருக்க முடியாது. இது புரியாத புதிராக உள்ளது. எதற்கும் குஞ்சு ( மனைவி) வுக்கு இப்போது சொல்ல வேண்டாம். சரி ஏதோ கெட்டகாலம். ஆராய்வது, அவலப்படுவது, நியாயப் படுத்துவது என அவர் மனம் அல்லாடிக் கொண்டிருந்தது. அவருக்கு நிறையவே இறை நம்பிக்கை உண்டு.

விமானம் பறந்தது. அவரை ஆசுவாசப் படுத்தும் நோக்கமாக காப்பி குடிப்போமா என்றேன். வேண்டாம் மாஸ்ரர் அது எப்படித் தொலைந்தது என்பது தான் ஆச்சரியமாக உள்ளது என்றார். சரி தொலைந்தது தொலைந்து விட்டது. அந்தக் கவலையை விடுவம் என்றார். விமானம் மெல்ல இறங்கியது. நாம் எமது கைப் பொதியுடன் ஹில்ரன் பேருந்து தரிப்பு இடத்திற்குச் சென்றோம். பேருந்து காத்து நின்றது. உள்ளே ஏறப் போன எம்மிடம் நாம் போகும் போது காரினைத் தரிப்பு இடத்திலே விட்டதற்கான பற்றுச் சீட்டினைக் காட்டுமாறு ஓட்டுனர் கேட்டார். தொலைந்த மடிசஞ்சுடன் அதுவும் தொலைந்து விட்டது என்றார் இராமநாதன். அப்படி என்றால் ஆளாளுக்கு 5 பவுண்டு கொடுக்க வேணும் என்றார். மாஸ்ரர் ஒரு பத்து பவுண் தாருங்கள் என்றார் இராமநாதன். நான் எனது பொக்கெற்றுக்குள் இருந்த மடிசஞ்சினை எடுத்துப் பக்கவாட்ல் திறந்து பத்து பவுண் எடுத்தேன். அதனுடன் இரண்டு யூறோ தாள்களும் தலையை நீட்டின. எனக்கோ ஆச்சரியம். என் மடிசஞ்சில் இயூறோ தாள்கள் இருக்கவில்லையே எப்படி இங்கே வந்தது என் எண்ணியபடி நின்றேன். இந்த மரமண்டைக்கு அப்போது விஷயம் புரியவில்லை. ஓட்டுனர் நல்லவன். இராமநாதனிடம் பணம் வேண்டாம். ஆனால் அங்கே உன் காரினை எப்படி எடுக்கப் போகிறாய். பற்றுச் சீட்டு இல்லாமல் காரினைத் தரமாட்டார்களே. என்றார். இது வேறை தலையிடி என்று சிடுசிடுத்துக் கொண்டு வந்த இராமநாதன் இந்தாருங்கோ மாஸ்ரர் உங்களின் பணம். ஓட்டுனர் வேண்டாமென்கிறார் என்று கூறி என்னிடம் பணத்தைத் தந்தார். நான் அதனை மீண்டும் மடிசஞ்சியுள் வைக்கப் போன பெழுது அதன் முற்புறத்திலே பலநிறத்தில் கடன் அட்டைகள் என்னைப் பார்த்து பல்லிளித்தன. விசயம் புரிந்தது. இது இராமநாதனின் மடிசஞ்சு. இந்தாரும் உமது மடிசஞ்சு என அவரிடம் கொடுத்தேன். அவர் முகத்தில் கண்டது கோபத்தின் சின்னமா? ஆச்சரியத்தின் அறிகுறியா? அசட்டுத்தனத்தின் புலப்பாடா? இது எப்படி மாஸ்ரரர் உங்களிடம் வந்தது என்றார். நீர்தான் காபாந்துத் தடையால் வெளியே வந்ததும் எடுத்துக் கொடுத்தீர் ஞாபகமில்லையா? அப்போ உங்களது மடிசஞ்சு எங்கே.? அதனை நான் பவுத்திரமா எனது கைப் பொதியுள் அல்லவா வைத்தேன். அப்போ ஏன் மாஸ்ரர் நான் தந்தபோது அதைச் சொல்லவில்லை? நான் கைப்பொதியுள் வைத்ததை துப்பரவாக மறந்தே போய்விட்டேன். நீங்களும் உங்கள் அருமையான ஞாபகசக்தியும் எத்தனை அவஸ்த்தை என்றார் இராமநாதன். நீர் கொஞ்சம் கோபப்படாமல் விட்டிருக்கலாம் என்றேன். எப்படி மாஸ்ரர் கோபப்படாமல் இருப்பது. ஒரு நடக்க முடியாத கிழம், அதன் கைத்தடியும், கைப்பொதியும், எனது கைப்பொதி என அல்லாடிக் கொண்டிருக்கையில் அவர்கள் சப்பாத்தினையும் கழற்று என்றால் எப்படி மாஸ்ரர் கோபப்படாமல் இருப்பது. நான் பிறகேன் வாயைத் திறக்கிறேன். வீடு வந்து சேர்ந்தோம். வந்ததும் நான் பவனகுமாரிடம் விட்ட வேண்டுகோள் எனக்கு நாளைக்கு எங்கேயாவது ஒரு பிறில்கிறீம் வாங்கித் தரவேண்டும் என்பதே. சென்றதடவை நான் வந்தபோது எனது பிறில்கிறீம் முடிந்த விட பகீரதனிடம் கேட்டேன். அவர் எங்ஙெகெல்லாமே தேடிக் கிடைக்காமல் கடைசியில் ஜெல் ஒன்றினை வாங்கி வந்து கொடுத்தார் அதைப் போட்டுத் தலைவாரினால் என்தலைமயிர் குதிரையின் பிடரி மயிர் போல நின்றது. ஏன் என்ன விசயம் என்றார் சகோதரி. கதையைச் சொன்னேன். இவர்கள் இப்படித்தான் அதைக் கழட்டு இதைக் கழட்டு என்பார். ஒரு முறை என்னிடம் வசமாய் மாட்டிக் கொண்டார்கள் என்றார் சகோதரி. அவர் என்னைப் போல் அம்மாஞ்சி அல்ல. கொஞ்சம் மிடுக்குக் காட்டக் கூடியவர். 'எனது காப்புக்களையும் கழற்று என்றார்கள். நான் உடனே சவர்க்காரமும் தண்ணீரும் தாருங்கள்' என்றேன். 'ஏன்' என்றார்கள். 'காப்புகள் இறுக்கமாக உள்ளன. சவர்க்காரம் போட்டால் தான் கழற்று முடியும்' என்றேன். அம்மா தாயே பிரச்சினை இல்லை நீ சந்தோசமாகப் போய்வா' என்றார்கள். அட நான் பிழை விட்டு விட்டனே. அந்த பிறில்கிறீம் குழாயினைப் பெற்று உள்ளே உள்ளதை பிதுக்கி எனது தலையில் தப்பிக் கொண்டு போயிருக்கலாம். என்ன மாடுசூப்பின் பனங்காய் மாதிரி தலை இருந்திருக்கும். தவறிழைத்து விட்டேன் என்றேன். அவர்கள் சிரித்தார்கள்.


YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# அன்பு வாழ்வு மலர வேண்டும்

இவ்வுலக மக்களிலும் சரி இயற்கையிலும் சரி நாம் தினமும் பல்வேறு மாற்றங்களைக் காண்கிறோம். எமது தாயகத்தை விட புலம்பெயர் நாட்டின் கால நிலையில் பல வித்தியாசமான மாற்றங்களைப் பார்க்கின்றோம். இலைகள் மலர்கள் யாவும் உதிர்ந்து மரங்கள் யாவும் பட்டது போன்ற காட்சி, தாயகத்தில் இலை உதிர்காலத்தில் முதல் பட்ட மரம்போல் இருந்தவன் உயிர்பெற்று முன்னேறிவிட்டான் என்பார்கள். இந்தத் தத்துவ வசனம் இங்குள்ள இலையுதிர் காலத்துக்கும் வசந்தத்திற்கும் தான் பொருந்தும். இன்னும் மரங்கள் செடிகளின் இலைகள் நிறம் மாறுகின்றன. குளிர் மூடுகிறது. மீண்டும் வசந்தம். மொட்டுகள் மலர்ந்து அளிக்கின்றன. இந்த இயற்கையே எமக்கு ஒரு பாடமாக அமைகின்றது. இயற்கை தன்னையே பல மாற்றத்தின் மூலம் புதுப்பித்துக்கொள்கிறது. நமது வாழ்க்கையில் எப்படி வாழ்கிறோம். எப்படி வாழவேண்டும். எப்படியான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதை சிறிது சிந்திப்பது நலம்.

துன்பங்கள் துயரங்கள் வேதனைகள், சோதனைகள், போராட்டங்கள், சந்தேகங்கள் நிறைந்தது தான் வாழ்க்கை. சிலரது வாழ்க்கை போராட்டமாகவே உள்ளது. இந்தத்



துன்பங்கள் ஓடும் மேகங்கள் போன்றவை. நாம் வாகனத்தில் போகும் போது மரங்கள் வீடுகள் நாம் காணும் காட்சிகள் பின்னோக்கிப் போவது போல் இவற்றை மறைந்து போக வேண்டும். மனதில் இடம் கொடுத்தோம் என்றால் துன்பம் என்ற முத்திரையைப் பதித்துவிடும். அத்துன்பம் உதிரும். இலைகள் போல் காய்ந்து சருகாகி மறைந்து போக வேண்டும். புதிய எண்ணங்கள் சிந்தனைகள் புதிய உறவுகள் புதிய செயல்கள் முதலிய வற்றிற்கு இடம் கொடுத்து புதிய தளிர்களை முளைக்க விடவேண்டும். அப்போது தான் வாழ்வில் வசந்தம் தோன்றும். புதிய மனிதராக மாற வாய்ப்பு உண்டு.

அரசியல் ஆட்சி மாற்றங்கள், பொருளாதாரக் கொள்கையில் மாற்றங்கள், கலாச்சார மாற்றங்கள் அனைத்தும் வாழ்வைக் கொடுக்க வேண்டும், நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும். மரங்கள் நிறம் மாறும்போது எவ்வளவு அழகாக இருக்கிறது. மனதிற்கு மகிழ்ச்சியைக் தருகிறது. அதைப் போல் மனிதன் தன்னில் மாற்றம் கொண்டுவரும் போது, குடும்பம், சமூகம், உறவுகள் மகிழ்கின்றன.

அன்பு ஒன்றே அருமருந்து. அன்பின்மை எல்லாப் பிரச்சினைகட்கும் அடிப்படைக் காரணம். எல்லாமதங்களும் இதைத்தான் போதிக்கிறது. அன்பில்லாதவன் வாழ்வு அர்த்தமற்றது என்றும் சொல்லலாம். பிறரைக் குறைகூறுதல், பழிவாங்குதல், வரட்டுக் கௌரவம், அதிகாரத்தன்மை பகட்டான போலியான வாழ்வு அடிமைப் படுத்தல், குழிபறித்தல், மாட்டிவிடுவது, தீயசொற்களால் உள்ளத்தைப் புண்படுத்தல் போன்றவை அன்பின்மையால் ஏற்படு கின்றது. இவை நாளாந்தம் குடும்பத்தில் குடும்ப உறவுகளில் சமூகத்தில் நகர்ந்து கொண்டே இருக்கிறது. அன்பு, புரிந்துணர்வு, மன்னிக்கும் மனப்பான்மை இவை இல்லாமையால் குடும்ப உறவுகள் சிதைந்து சந்தோசங்கள் கலைந்து சந்தேகங்கள் மலிந்து மணமுறிவுகள் மலிந்து போவதையும் காணலாம். வாழ்வு மலர மனித உறவை வளர்ப்போம் மனித உறவை மதிப்போம். பகைமை என்பது, தேவை இல்லாமல் நமக்குள் நாம் சுமந்து கொண்டிருக்கும் நெருப்பு. ஒவ்வொரு நிமிடமும் நம்மை எரிக்கிறது. அனைவரோ டும் அன்பாகவும், பண்பாகவும் பழகுதல் மிக அவசியம். நமது துன்பமும் இன்பமும் பிறரிடமிருந்து வருவதில்லை. நாமே நமக்கு வருவித்துக் கொள்வது நம்மை நாமே அன்பு செய்ய வேண்டும். நம்மை நாமே ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம்

தொடர்ச்சி 31ஆம் பக்கம்




HOMELIFE/GTA Realty Inc., Brokerage*

Seelan Siva Aiyadurai
Real Estate Broker
416-451-0271
seelansiva@gmail.com
www.sivahomes.com

Uthayan Aiyadurai
Sales Represetaive
416-999-3555
aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

Tridel-10 YORK
steps away – the Air Canada Centre, Maple Leaf Square, Rogers Centre and Harbourfront, with direct highway access to all parts of the city



For A Better Living
Give Us A Call...

WISH YOU AND YOUR FAMILY
HAPPY NEW YEAR
Thank You
for your business and referrals...




Buy
Sell
Invest

1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

# BASEMENT RENT

**STEELES & STAINS**
2 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.539.3581 / 647.706.0669

**JANE & MAJOR MACKENZIE**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, mall, school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.317.0865

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, bank, supermarket. Avail. immediately.
416.471.0738 / 647.281.6786

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.504.2016 / 416.830.0472

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 parking, laundry. Close to TTC, school, mall. Avail. March 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.875.4377

**MCCOWAN & DENISON**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.554.3595

**MORNINGSIDE & NEILSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.295.7482

**MARKHAM & MAJOR MACKENZIE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.294.3260 / 647.708.2101

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable, parking. Close to all facilities.
647.718.2159 / 416.438.0397

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.2630

**MORNINGSIDE & FINCH**
சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள வீடொன்றில் bsmt apt with sep. entrance available for Rent. 1 Bed room, Living Room, Kitchen & washroom. Walk to public transit, school, park and shopping. Rent included parking, utilities and cable.
தொடர்புகளுக்கு: 647.499.0603

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.792.3661

**STAINES & STEELES**
2 bedroom bsmt and 1 Bedroom for rent - main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.805.5722 / 647.348.1913

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, washroom, parking, internet, cable. Close to TTC (39, 133, 139)
தொடர்புகளுக்கு: 647.863.6348

**MAVIS & STEELES**
Brand new 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013.
416.843.6610 / 647.703.7717

**MCCOWAN & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013.
**9TH LINE & 14TH AVE**
2 Bedroom walk-out bsmt for rent. Avail: February 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.554.7114

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.855.5239

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.332.3624 / 416.898.1242

**MORNINGSIDE & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt fo rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.519.2899 / 416.303.6589

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.908.1250

**MARKHAM & HIGH GLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.473.8520

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, stores, school.
தொடர்புகளுக்கு: 416.724.8084

**BELLAMY & EGLINTON**
3 Bedroom bsmt for rent. 2 Washrooms, sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013. Rooms also avail.
தொடர்புகளுக்கு: 647.588.7829

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Laundry. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.1986

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. All facilities close by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.7146

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.728.7036

**MIDDLEFIELD & FINCH**
Newly renovated One Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to ayyappan temple, TTC, GTA Square mall. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.754.8857

**MARKHAM & STEELES/ ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.472.1543

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 car parking. Close to TTC, 3 bus routes Kennedy, Finch & Scarborough RT Station.
அமைதியானவர்கள் விரும்பப்படுவர்.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.205.4150

**MARKHAM & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Family preferred. Close TTC, mall, school. Avail. February 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.509.5664

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, livingroom, basic cable. Close to school, mall, TTC. Avail. immediately.
416.609.9087 / 647.987.4532

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. $650 + utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.720.7561

**MCLEVIN & NEILSON**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Couple preferred. Close to all facilities.
1 Bedroom for rent in a mainfloor. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.771.8426

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. Anytime. Close to ttc, school, shopping.
தொடர்புகளுக்கு: 416.284.6226

**ELLESMERE & SCAR.GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.419.7873 / 416.335.9290

**MCCOWAN & 16TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. தொடர்புகளுக்கு:
416.414.5562

**LAWRENCE & SCAR. GOLF CLUB**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, Tamil stores. Avail. immediately.
416.438.2857 / 416.728.9580

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Milliken park. Avail. Anytime.
416.569.5117 / 647.922.5117

**MARKHAM & PAINTED POST**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry internet. Close to all facilities. Avail. Anytime. Bachelor preferred.
416.431.4730 / 647.771.3801

**MCCOWAN & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Kitchen, washroom, sep. entrance, parking, laundry, easy access to backyard. Close to Go station, Kennedy station, mall, TTC.
647.686.3283 / 416.879.3283

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Parking. laundry. Close to all facilities. Avail. immediately.
416.792.3661 / 416.508.4361

**LAWRENCE & BELLAMY**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.917.5325

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.297.4100

**KENNEDY & FINCH**
1 bsmt bedroom Apt. for rnt. Sep. entrance. Safe zone neighborhood. Utilities included. Avail. immediately.
647.706.5851 / 416.321.9969

**BRIMLEY & LAWRENCE**
1 or 2 or 3 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.894.9122

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.839.0679

**MCCOWAN & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.439.1570 / 416.431.5195

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry.Close to all facilities. No smoking & No drink. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.285.7014

**MARKHAM & DENISON**
2 bedrooms bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $750. தொடர்புகளுக்கு: 647.740.5623

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.831.8549

மேலும் பக்கங்கள் 27, 28

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE / SHEPPARD**

Brand new 2 or 1 bedroom bsmt for rent. Sep. entrance. Gardening செய்யும் வசதியும் உண்டு. Malvern mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking. Daycare available.
தொடர்புகளுக்கு: 416.834.1081

## ROOM FOR RENT

**MORNINGSIDE & NIGHTSTAR**

2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, Elementary school, mall. Female or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.335.8539

---

ஸ்காபரோ, 2691 எக்லிங்டன் கிழக்கு (பிரிம்லி) யூனிட் 3ல் ஒரு தனி அறை, ஒருவரோ அல்லது இருவரோ, குறிப்பாக வயது முதிர்ந்த தம்பதியர் மிகக்குறைந்த மாதந்த வாடகையில் தங்கிட வாடகைக்கு விடப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.
416.834.2266 / 647. 701. 7075

---

**NEILSON & MCLEVIN**

1 Bedroom for rent. Close to TTC, Malvarn mall. Rent $350. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.854.2723

---

**PHARMACY & FINCH**

1 Bedroom for rent - Main floor. Parking, laundry. Close to TTC, schools. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately. Ladies preferred.
416.201.1222 / 416.299.4895

---

**MARKHAM & SHEPPARD**

சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

---

**BELLAMY & LAWRENCE**

Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet o all facilities. Avail. immediately.
416.438.2626 / 647.286.7687

---

**FINCH & BIRCHMOUNT**

1 Bedroom for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

---

**MORNINGSIDE & SHEPPARD**
**Morningview Trail**

4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to ttc - 131 bus, school.
தொடர்புகளுக்கு: 416.805.8791

---

**NEILSON & MCLEVIN**

2 அறைகள் கொண்ட Condoவில் ஒரு பெரிய அறை வாடகைக்கு உண்டு. Attached wash-room, laundry, parking. Avail. immediately. பெண்கள், வயதானவர்கள் விரும்பப்படுவர்.
416.896.8388 / 1.330.277.0287

---

**MORNINGSIDE & NEILSON**

2 Large bedrooms வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Including bedroom set. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.740.5162

## ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**

Rooms for rent. Close to TTC, mall, stores. சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately.
647.713.0624 / 647.856.0444

---

**BSMT / ROOMS FOR RENT**
**WARDEN & FINCH**

2 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.493.6540

---

**MARKHAM & LAWRENCE**

Newly renovated bsmt apt. Avail. immediate-ly. Close to TTC, mall, Centennial college.
647.706.4881 / 416.439.4076

---

**WELLESLEY & PARLIAMENT**

1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.917.1013

---

**WARDEN & FINCH**

1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
416.434.0539 / 416.494.3042

---

**LAWRENCE & PHARMACY**

**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
647.388.1481 /416. 759.7016

---

**KEELE & EGLINTON**

Rooms for rent. Parking, laundry. Close to TTC, York University, no frills. 1 bedroom bsmt with sep. entrance also available. Avail. immediately.
416.658.1144 / 416.302.3070

---

**MCCOWAN & EGLINTON**

1 Bedroom for rent in an Apt. Laundry. Close to Kennedy Subway. Avail. immediately. ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.402.5253

---

**MARKHAM & DENISON**

Room for rent in main floor. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately. 1 Room in bsmt for rent.
தொடர்புகளுக்கு: 647.339.1062

---

**SHEPPARD & ROUGH RIVER**

புதிய வீட்டில் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. சைவ உணவுடன் அல்லது உணவு இல்லாமல். 2 minutes TTC. Safe & Convenient.
தொடர்புகளுக்கு: 416.697.2611

---

**FINCH & MIDDLEFIELD**

1 Bedroom for rent in a condo. Parking, laun-dry, kitchen. Close to all facilities. Rent $400. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

---

**KENNEDY & LAWRENCE**

Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

---

**NEILSON & FINCH /MORNINGSIDE**

Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

## HOUSE FOR RENT

**BRIMLEY & LAWRENCE**

3 Bedroom bungalow house for rent. 1 Washroom, 2 parkings, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.728.7036

---

**DONMILLS & EGLINTON**

3 Bedroom town house for rent. Parking, laun-dry. Close to TTC, school, mall. Avail. February 01, 2013.
416.425.0508 / 416.893.5262

---

**KENNEDY & EGLINTON**

3 Bedroom house for rent with 2 bedroom bsmt. Close to all facilities. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately.
416.587.3982 / 416.522.8545

---

**MCCOWAN & LAWRENCE**

***3 Rooms for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediate-ly. 647.706.4922 / 416.522.3314 / 905.554.2496***

## CONDO FOR RENT

**MIDLAND & EGLINTON**

2 Bedroom condo. for rent. 2 Parking, 1 washroom, A/C, laundry.

**SPACE FOR RENT.**

Office, Hair salon, Travels or many users.
தொடர்புகளுக்கு: 416.505.4449

## CONDO FOR RENT.

**MCCOWAN & HWY 401**

1 bedroom + Den Condo. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

## CONDO. FOR RENT /SALE

**KENNEDY & EGLINTON**
***Rainbow Village***

2 Bedroom + den Condo. 2 Washroom, corner unit condo. for rent or sale. 1200Sq.ft. Hardwood floor. Close to TTC, Kennedy Subway, Tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.5085

## HOUSE FOR SALE

யாழ்ப்பாணம் KKS வீதியில் பழைய Milk White Company க்கு அருகாமையில் மூன்று பரப்புக் காணியுடன் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளும் நிறைந்த இரண்டுமாடி வீடு விற்பனைக்கு உண்டு. Jaffna University, Technical College, Hindu College, Hindu Ladies College மிக குறுகிய தூரத்தில் உண்டு.
தொடர்புகளுக்கு:
416.291.6667 / 416.895.8111

## FOR SALE

Custom frames & Custom frames making things for sale.
தொடர்புகளுக்கு: 647.716.7770

## FOR SALE

**QUEENS WEST & LANDESDOWNE**

Pizza & fast food foe sale. Close to High school. Very traffic area. Price $79,999.
தொடர்புகளுக்கு: 416.826.4205

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## JOB JOB JOB

**HWY 401 & WESTERN**

இரு வயோதிபர்களை பராமரிக்க பெண் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் இலவசமாக கொடுக்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.889.1027

---

## JOB JOB JOB

Flooring company ஒன்றிற்கு receptionist வேலைக்கு ஒருவர் தேவை. Car ஓடத் தெரிந்திருக்க வேண்டும். ஆங்கிலம் பேசத்தெரிந்திருக்க வேண்டும். Part-time.
www.idealstairs.ca

## VAN FOR SALE

2002 Toyota Sienna XLE LTD for sale. Price $7,500. All power, 142,000km. Blue colour. Good condition. New tires and well maintained.
தொடர்புகளுக்கு: 647.234.9585

## CAR FOR SALE

1997 & 1998 CRV cars for sale. Black colour. 4 Door. Automatic. Good condition.
416.688.8364 / 416.754.2002

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569

## மணமகள் தேவை

55 வயதுடைய இந்துமத மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.564.8902

---

## மணமகன் தேவை

கனடாவை வதிவிடமாகக் கொண்ட 31 வயதையுடைய C.G.A பட்டப்படிப்பை முடித்த மணமகளுக்கு கனடா, அமெரிக்காவில் படித்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.720.5136

---

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை வதிவிடமாக கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 647.918.5520

மேலும் பக்கங்கள் 26, 29

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

# சிந்தனையும் பேராற்றலும்

'உங்களால் பெறமுடியாதது என்று ஒன்றும் இந்த உலகில் இல்லை. அதை அடைய முடியும் என்ற உண்மையை நீங்கள் ஒருமுறை சிந்தனாரீதியாக ஏற்றுக் கொண்டால் போதும்' - றொபேட் கோலியர்.

இந்த அற்புதமான வரிகளை மீளமீள சிந்திப்போமானால் வியக்கத்தக்க வாழ்க்கைக்கு நாம் தயாராகி விடுகிறோம் என்பது தான் அர்த்தம். நாம் மகிழ்ச்சியான, ஆனந்தமான, பரவசம் மிகுந்த வாழ்க்கைக்கு தகுதியானவர். நாம் தன்னம்பிக்கை நிறைந்த மதிப்பீடு, சுயமரியாதை, தனிப்பட்ட பெருமிதம் போன்ற உயர்வான தன்மைகளை கொண்டுள்ளோம். மனித வரலாற்றில் மிகச் சிறந்த ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். எமது கனவுகளை நனவாக்கிக் கொள்ளும் விதத்தில் ஏராள-மான வாய்ப்புக்கள் எம்மைச் சூழந்து உள்ளன. எமது சொந்த சிந்தனையில் நாம் எப்படியிருக்க வேண்டும். எப்படிச் செயல்பட வேண்டும், என நினைக்கிறோமோ அதுவே உண்மையான எல்லைகளாகும்.

நாம் பெரும்பாலான வேளைகளில் எதைப்பற்றி சிந்தித்து கொண்டிருக்கி றோமோ நாம் அதுவாகவே உருவாகி விடுகிறோம் என்பதே உண்மையாகும். எமது மனம் அளவு கடந்த ஆற்றலுடையது. எமக்கு நிகழ்கின்ற ஒவ்வொன்றையும் எம்முடைய சிந்தனைதான் கட்டுபடுத்தி தீர்மானிக்கின்றன. ஒரு நிகழ்வின்போது எங்களது சிந்தனைகள் தான் எம்மை மகிழ்ச்சியாக அல்லது வருந்தலாக இருக்கும்படி செய்கிறது. நாம் எச்சரிக்கை யுடனோ, விழிப்புடனோ அல்லது வெறுப்புடனோ, மனச்சோர்வுடனோ இருப்பதற்கு அவைதான் காரணம். எமது சிந்தனைகள்தான் நாம் வெற்றியடையவோ அல்லது தோல்வியடையவோ, செல்வச் செழிப்பு உள்ளவராகவோ அல்லது வறுமை நிறைந்தவராவோ, மதிக்கப்படுபவராகவோ அல்லது மறக்கப்படுபவராகவோ செய்கின்றன. நாம் சிந்தனைகளின், மனப் போக்குகளின், விருப்பங்களின், படிமங் களின், பயங்களின், நம்பிக்கைகளின் பெருவிருப்பங்களின் கூட்டுக்கலவையாக நாம் உள்ளோம். எமது கற்பனையிலிருந்து அல்லது புறச் சூழ்களிலிருந்து தூண்டப்படும். காட்சிகளும், படிமங்களும் அவற்றிற்கு பொருத்தமான கருத்துக்களை யும், உணர்ச்சிகளையும், மனப்போக்கு களையும் தோற்றுவிக்கின்றன. எம்முடைய செயல்கள் அவற்றிகே உரிய உணர்ச்சி களையும், மனப்போக்குகளையும் உந்தி விடுகின்றன. 'எவற்றையெல்லாம் நாம் உறுதியாக நம்புகிறோமோ அவையே எமது யதார்த்தமாக வடிவம் பெறுகின்றன' என்று நம்பிக்கை விதி சொல்கிறது.



ஆழமாகவும், செறிவாகவும் உணர்ந்து பின்பற்றும் எமது நம்பிக்கைகளின் அடிப்படையில் நாம் எப்போதும் செயல்படுகிறோம்.


நாம் ஒரு 'வாழும் காந்தம்' என்று ஈர்ப்பு விதி கூறுகிறது. நேர்மறையாக, நம்பிக்கையுட னும், நேசத்துடனும், வெற்றிக்குரிய சிந்தனைகளுடனும் நாம் சிந்திக்கும் போது, இரும்புத் துகள்களை ஈர்க்கும் காந்தத்தைத் போல, நாம் எதைப்பற்றி சிந்திக்க கூடிய ஆற்றலுடைய காந்தப் புலத்தை உருவாக்கிக் கொள்கிறோம். எதைக் குறித்து எமது மனத்தை தெளிவாக மையப்படுத்தும் நிலையில் நாம் இருந்தால், எது எமக்கு விருப்பமில்லையோ அதிலிருந்து விலகி இருந்தால், நாம் அடைய விரும்பும் இலக்குகளை தயார் செய்து கொண்டிருந்தால் எல்லாவற்றையும் அடைய முடியும். சிந்தனையில் மாற்றம் செய்து எமது வாழ்க்கையை தயார் செய்ய முயலவேண்டும்.

வெற்றி பெறாதவர்களைவிட, வெற்றி யடைந்தவர்கள் அதிக தீவிரத்துடன் சிந்திப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்களே தங்களுடைய வாழ்க்கையையும், உறவுகளையும், இலக்குகளையும், பிரச்சினைகளையும், அனுபவங்களிலிருந்து மாறுபட்ட முறையிலேயே அணுகுகிறார்கள். அதனால் அவர்கள் நல்ல வாழ்க்கையை அடைகிறார்கள். நாமும் இதனை சிந்திக்க ஆரம்பித்தால் நாமும் வெற்றியடைந்து, மகிழ்ச்சியான, உடல்நலம் மிக்க, செல்வாக்கு மிகுந்தவர்களாக மாறிவிடலாம்.

எங்களை பற்றி நாம் தெரிந்து வைத்திருக்கும் அனைத்தும் எம்முடைய நம்பிக்கை எல்லாம் எமது ஆளுமை என்றும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எம்முள் உருவாக்கிக் கொண்ட சுயகருத்தின் செறிவான முறைப்படியே நாம் வெளிஉலகத்துடன் தொடர்பு கொண்டு செயல்படுகிறோம். எனவே எமது வாழ்க்கை யில் அடையும் முன்னேற்றம் எல்லாமே எமது சுய அபிப்பிராயத்தை செழுமைப் படுத்தும் முயற்சியிலேயே தொடங்குகிறது. பொதுவான சுய அபிப்பிராயம் தான் நாம் எப்படி சிந்திக்கிறோம் என்பதனையும், எம்மைப்பற்றி உணர்வதனையும், நாம் எப்படி செயல்படுகிறோம் என்பதனையும் அளவீடு செய்கிறது.


எமக்கு எது சாத்தியமாகக் கூடியதோ அதைப்பற்றி எம்முடைய நம்பிக்கைகளை யும், எதிர்பார்ப்புக்களையும் உள்ளடக்கும் விதத்தில் சிந்தித்து எம்மைப்பற்றி உணர வேண்டும். அதுதான், நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும், எமக்கு நிகழ்கின்ற ஒவ்வொன்றையும் தீர்மானிக்க உதவுகிறது. நாம் ஒன்றின்மீது மட்டுமே முழுமையான கட்டுப்பாட்டை நிறுவக்கூடியவராக உள்ளோம். அதுதான் எம்முடைய சிந்தனை! குறிப்பிட்ட சூழ்நிலையில் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதனை எம்மால் முடிவு செய்ய முடியும். எமது சிந்தனைகளும் உணர்ச்சிகளும் எங்களை முன்னெடுத்து சென்று நாம் அடையும் விளைவுளை தீர்மானிக்கின்றன.

வாழ்க்கையை விரிவுபடுத்துபவை நேர்மறை சிந்தனைகள் (Positive Thinking) ஆகும். அவை எம்மை ஆற்றல் பெற செய்து இன்னும் வலிமையுடையவராக, அதிக நம்பிக்கையுடையவராக மாற்றுகின்றன. நேர்மறைச் சிந்தனை என்பது வெறுமனே ஊக்குவிக்கும் கருத்துஅல்ல. அது, எம்முடைய ஆளுமை, எமது உடல்நலம், எமது ஆற்றல் அளவுகள், எமது படைப்புத் திறன் என்பவற்றின் மீது ஆக்கரீதியான தாக்கத்தை நிகழ்த்தக் கூடிய ஓர் அளவீடாக உள்ளது. எதிர்மறைச் சிந்தனைகள் (Negative Thinking) என்பது எதிர்விளைவுகளை ஏற்படுத்தி எமது ஆற்றலை இழக்கும்படி செய்கின்றன. எம்மை பலவீனமுள்ளவராகவும், நம்பிக்கை குறைந்தவராகவும் உணரச் செய்கிறது. எம்மிடம் உள்ள பேராற்றலை இழக்கச் செய்து விடுகிறது. நாம் ஏமாற்றம் உள்ளவராகவும், மகிழ்ச்சியில்லாதவராக வும் உணருவோம். காலப்போக்கில் நோயாளியாக உருவாக்கி உறவுகளைக் கூட நஞ்சாக மாற்றிவிடுகிறது. எமது இலக்கை அடைய, வியத்தகு வாழ்க்கையை நாம் வாழ விரும்பினால் எமது நேர்மறைக்கண்ணோட்ட உணர்ச்சி களை மட்டுமே வளர்த்துக் கொள்ள வேண்டும். எமது நேர்மறைக் கண்ணோட்ட உணர்வை ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டும். எதிர்மறை சிந்தனையை முற்றாக நீக்குவதே ஒரே வழியாகும். காரணம் எதிர்மறை கண்ணோட்டக் கருத்துக்கள் தவறான கருத்துக்களை அடிப்படையாக கொண்டிருப்பவை. 'கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை பற்றி நினைந்து நிலைகுலைந்து, அது குறித்து கோபமாக இருப்பதில் பயனில்லை. இதிலேயே உணர்ச்சிகளை செலவிடுகிறோம். எனவே உயர்ந்த முறையில் எங்களை உருவாக்கு வதற்குரிய நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 29ஆம் பக்கம்



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உடுவிலில் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.558.8562

**SAREE BLOUSE**

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

**திருமண சேவை**

உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை விரைவாக நிறைவேற்றிட எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஆண், பெண் இருபாலாரினதும் ஜாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்புகளுக்கு :
தனம் - **647.918 0027**
**nallai@hotmail.ca**

**தையல் வகுப்புக்கள்**
**தையல் Orders**
**MARKHAM & LAWRENCE**

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524


மேலும் பக்கங்கள் 26, 27


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**OFFICE SPACE FOR RENT**
**MORNINGSIDE & SHEPPARD**

Real Estate, Mortgage, Insurance offices போன்றவையும் Show Room உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

**Pl. Call: Murale - 416.569.4065**


**COMMERCIAL UNIT FOR SALE**

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough. ***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***


# சிந்தனையும்...

'மிக மிக உயர்வான கனவுகளை காணுங்கள். அப்படி நீங்கள் கனவு கண்டால் நீங்கள் அதுவாகவே உருவாக்கு வீர்கள்' என்பது ஜோன் ரஸ்கின் என்பவரது கருத்து. எமது மனம் தான் எம்முடைய மிகச்சிறந்த நண்பனாகவோ அல்லது எமது மோசமான எதிரியாகவோ இருக்கக் கூடும். எனவே மனத்தோடு சம்பந்தப்பட்ட ஆற்றல் சிந்தனைக்கு மட்டுமே உரியது. எனவே, வியத்தகு விளைவுகளை அல்லது அழிவுகளை எமக்கு அளிக்கக் கூடிய விதத்தில் எம்மை ஏதாவது ஒரு திசையில் திருப்பும் ஆற்றல் சிந்தனைக்கே உள்ளது. மிகப்பெரிய கனவுகளுடனும் சிந்தனை யுடனும் தொடங்கினால் மிகப்பெரிய இலக்குகளை அடைய முடியும். எல்லாவித சாதனையாளர்களையும் 'நீலவான சிந்தனை யாளர்கள்' என்று அழைக்கின்றனர். எதிர்காலத்தை உற்றுநோக்கும் வெற்றி யாளர்கள் சிந்தனைப்பயிற்சிக்கு உள்ளான வர்களே. பலவருடங்களை உள்ளடக்கிய எதிர்காலத்தில் நுழைந்து, அவர்கள் தங்கள் இலக்கை அடைகிறார்கள் என்று கொண்டால் நாமும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு தெளிவாகவும், விரிவாகவும் பார்க்க வேண்டும். மனத்திரையில் காட்சிப்படுத்தி பார்க்க வேண்டியுள்ளது. எங்களால் எந்த அளவுக்கு முடிமோ அந்த அளவுக்கு குறிப்பாக, ஒவ்வொரு இரவிலும் நித்திரைக்கு செல்ல முன்பு எம்முடைய இலக்குகளை மனதளவில் காட்சிப்படுத்தி பார்க்க வேண்டும். ஓர் உண்மையான இலக்கு என்பது தெளிவானதாகவும், தனித்தன்மை யுடையதாகவும், அளவிடக்கூடியதாகவும் அதற்குரிய கால அளவையும் தன்னகத்தே கொண்டிருக்கும். இலக்கு இல்லாத ஒன்று காற்றில் மிதக்கும் ஓர் அதீத கற்பனையாகும். இலக்குகளை முடிவு செய்வது மிகவும் கடினமான செயல். எனினும் தெளிவான இலக்குகள் இருந்தால் நாம் ஒன்றைச் செய்யமுடியும். எடுத்த காரியத்தை ஒருபோதும் கைவிடாது மன அளவின் விளிம்புவரை செல்ல வேண்டும்.

எல்லா சாதனைகளுக்கும், எல்லா கண்டு பிடிப்புகளுக்கும், புதுமைகளுக்கும் ஆதாரமாக இருப்பது சிந்தனைதான். வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கை பற்றி அறிந்து கொள்வதே முதல் வேலையாக இருக்க வேண்டும். வெற்றியாளர் சந்தித்த பிரச்சினைகள், ஏமாற்றங்கள், விரக்திகள், தடைகள் பற்றியெல்லாம் இதனால் தெரிய முடியும். ஒரு இலக்கை தெரிந்து விட்டால்



காலதாமதம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் நேரத்தை திருடுவது மட்டுமல்ல வாழ்க்கையை திருடும் செயலாகவும் உள்ளது. வேகமான செயல்பாடு மிக முக்கியம். எந்த அளவுக்கு வேகமாக செயல்படுகிறோமோ அந்த அளவுக்கு வெற்றி பெற முடியும்.

நேர்முக சிந்தனை என்பது எமது உள்ளாற்றலை வெளிக்கொண்டு வருகிறது. முதலில் இலட்சியத்தினை வடிவமைக்க வேண்டும். இந்த இலட்சியம் யதார்த்தமாக்கப்பட வேண்டும். எமது வருமானத்தையும், வாழ்க்கை முறையையும் இணைத்தே இலட்சியம் அமைய வேண்டும். எதிர்காலத்தில் எமது மிகப்பெரிய வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் இதுவே காரணமாகிறது. எனவே, எமது இலக்கு களை எழுதிவைத்து மறு ஆய்வு செய்ய வேண்டும். எமது சிந்தனையில் சுயபிரகடனம் மிகவும் முக்கியமானது. இப்படி செய்வதால் சுயஇலக்கு ஆழ் மனத்தில் பதிந்து விடுகிறது. இலட்சியத்தை அடைந்து விட்டது போல மனதில் காட்சிப்படுத்த வேண்டும். பத்து, பதினைந்து இலக்குகளை தாளில் எழுதிக்கொண்டு திரும்பத் திரும்ப படித்தால் அதில் ஒரு சிலவே முக்கியம் பெற ஆரம்பிக்கும். ஒவ்வொருநாளும் காலையிலும், படுக்கைக்கு செல்லுமுன்பும் இந்த இலக்குகளை மனக்காட்சிப்படுத்தி வந்தால் மிக விரைவில் அது நிறைவேறுவது பற்றி பெரு வியப்படைவோம். எந்த அளவுக்கு அதிக அளவில் வார்த்தைகளையும், படங்களையும் எமது ஆழ்மனதில் பதிவு செய்கிறோமோ, அந்த அளவுக்கு இலக்குகளை காந்தமாக கவர்ந்து இழுக்க முடியும். எம்முடைய வாழ்க்கைக்குள் மனிதர்களையும், வாய்ப்புக்களையும், கருத்துக்களையும், இன்னும் பிறவளங்களை யும் கொண்டு வரலாம்.

'கனவுகள் மெய்படவேண்டும்' என பாரதி கூறிய அற்புத வாக்கியம் இந்த நூற்றாண்டிற்கு மிகவும் பொருத்தமானது. முன்னோக்கிய சிந்தனை, எதிர்காலத்தையே ஊடுருவும் தன்மை, தொடர்ந்து செயலில் ஈடுபடுதல், தோல்வியையும் வெற்றியாக மாற்றுதல், உள்மனவிவாதம் செய்தல், சுழற்சிக்கண்ணோட்ட சிந்தனை, எமது மதிப்பீடுகளை தெளிவுபடுத்துதல், எமக்கு நாமே உண்மையாக இருத்தல், எமது தரத்தை நாமே நிர்ணயம் செய்தல், அசாத்தியமான துணிச்சல், அசைக்க முடியாத நம்பிக்கை, மாமேதை போல் சிந்தித்தல், முழு ஆற்றலையும் பயன்படுத்துதல் என்பனவே எம்மை உயர்த்திச் செல்லும் காரணங்களாகும். கடந்த காலத்தின் தோள் மீது ஏறி நின்று சிந்திக்க ஆரம்பித்ததால் வரலாறு எல்லையற்று விரியும். எமது சிந்தனை-களையும் அதனது பேராற்றல்களையும் புரிந்து கொண்டால் எமது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் மாபெரும் வெற்றிகள் வந்து குவியும். நாம் கொண்ட கனவும் நனவாகும்.





தமிழ் மரபுத் திங்கள், தைப் பொங்கல் ஆகிய கொண்டாட்டங்களை முன்னிட்டு கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் வழங்கும்

**தை மாலைப் பொழுது - 1**

**காலம்:** தைத் திங்கள் 6ம் (சனவரி 19ம்) திகதி சனிக்கிழமை
**நேரம்:** மாலை 5.00 மணி
**இடம்:** கனடா ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் கோயில் மண்டபம்
Unit # 1, Goldengate Court, Scarborough, ON (Brimley & Goldengate court)

சிறப்புச் சொற்பொழிவுகள், பட்டிமன்றம், கவியரங்கம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற இருக்கும் இவ்விழாவிற்குத் தமிழ் மக்கள் அனைவரும் வருகை தந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா - 905. 201. 7592
அருட்கவி த. ஞானகணேசன் - 647. 244. 0813

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

இரண்டு கிழமைகள் கடந்துவிட்டன. பிரச்சனை ஏதுமில்லை. வீடும் பழையபடி களைகட்டத் தொடங்கிவிட்டது. அன்று வெள்ளிக்கிழமை. மறுநாள் சிவாவிற்கு வேலையில்லை. இரவு பத்து மணிவரையில் வீட்டின் சமையலறையை அடுத்திருந்த அறையில் (அந்த அறையைத்தான் சிவா தனது அறையாகப் பாவித்துக் கொண்டிருந்தான்) ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். யன்னலை ஒட்டியதாக சிறிய மேசை ஒன்றினை வைத்திருந்தான். மேசைக்குக் கிட்டவாக அறையின் மூலையில் ஒரு சிறிய இரும்பு அலுமாரி இருந்தது. அதனுள்தான் இவர்கள் பற்றிய எல்லாப் பத்திரங்களும் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேசை எப்போதும் ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருக்கும்.

ஏறக்குறைய ஒரு மாதத்தின் வேலைகள் பின் தங்கியிருந்தன. (பாழாய்போன பேயின் சேட்டையால்) மளமளவென எல்லாவற்றினையும் செய்து ஒழுங்கு படுத்தும் வேலையில் சிவா மும்மரமாக இருந்தான். வேலை மும்மரத்தின் இடையே யாரோ பின்னால் நிற்பது போன்ற பிரமை!

திரும்பிப் பார்த்தான்.

யாருமேயில்லை. கதவு மூடியபடியே இருந்தது. சிவாவின் அறைக்கு வெளியே, விருந்தினர் அறையில் நீலவேணி தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு இருந்ததால் தனது அறைக் கதவை சாத்தியே வைத்திருந்தான். ஒருவேளை நீலவேணி வந்து பார்த்துவிட்டுப் போயிருப்பாளோ?

அப்படித்தான் இருக்கும் எனத் தன்னுள் எண்ணிக்கொண்டவன் மீண்டும் தனது வேலையில் மூழ்கிக்கொண்டான். இருப்பினும் மனதில் ஏதோஒரு உறுத்தல். நாற்காலியில் நின்றும் எழுந்தவன் நடந்துபோய் கதவைத்திறந்து விருந்தினர் அறையை எட்டிப் பார்த்தான். நீலவேணி இவனுக்கு முதுகைக் காட்டிய வண்ணமாக தொலைக்காட்சியில் ஏதோ ஒரு நிகழ்ச்சியை மிக ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. (அவளுக்குத்தான் இப்போ பயமெதும் இல்லையே!) அறையில் தொலைக்காட்சிப் பெட்டியில் இருந்து வந்த வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சம் இல்லை. தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் ஏதும் பார்ப்பதென்றால் அறையின் வெளிச்சத்தை அணைத்துவிடுவது நீலவேணியின் வழக்கம்.

நீலவேணியை ஏதோ கேட்க வாயெடுத்தவன் நிறுத்திக் கொண்டான். மீண்டும் தன் அறைக்குள் நுழைந்தவன் கதவைச் சாத்தும்போது திரும்பவும் நீலவேணியைப் பார்க்க, திகைத்துவிட்டான்!

நீலவேணியின் அருகில் யாரோ இருப்பதுபோல் இருந்தது.

தெளிவில்லாத மங்கலான ஏதோ ஒன்று நீலவேணியிருந்த சோபாவில், அவளுக்கு அருகில், அவளை ஒட்டிய வண்ணமாக இருப்பது போல இருக்க,

கண்களைக் கசக்கிவிட்டு உற்றுப் பார்த்தான்.

ஒன்றுமேயில்லை!

ஆயினும், சிவாவிற்கு அந்த ஒருகணத்திலேயே முதுகின் முள்ளந்தண்டு எலும்பில் ஒரு வலி எடுத்து மறைந்தது. முதுகுப் பக்கமாக வியர்வைத்துளிகள் உடம்பில் இருந்து எட்டிப் பார்க்கத் தொடங்கின.

சிறிது நேரம் அப்படியே நின்றான். என்ன செய்வது, என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான். நீலவேணியிடம் இது பற்றிக் கேட்கலாமா? இல்லையா? என மனதுக்குள் ஒரு பட்டிமன்றமே நடத்தினான். 'அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பார்களே! ஒருவேளை இது எனது மனப்பிரமையோ என எண்ணியவன், 'ஓம் இது எனது மனப்பிரமைதான்' எனத் தன்னுள் சொல்லிக்கொண்டு அறையினுள் நுழைந்து தனது வேலையில் ஈடுபடத் தொடங்கினான்.

வேலையில் மனம் ஏனோ முற்றாக ஈடுபட மறுத்தது.

ஏன் இந்த மனப்பிரமை? மனப்பிரமையா அல்லது ஒருவேளை உண்மையிலேயே…….
சீச்சீ! அப்படியிராது! பாதர் அருள் எவ்வளவு தேவசக்தி வாய்ந்தவர். எவ்வளவு வல்லமையாக செபித்தார்கள். எந்தப் பிசாசுமே இந்தப் பக்கம் இனித் தலையே காட்டமாட்டாது.

ஆனாலும்,

ஒருவேளை மீண்டும் அவை வந்துவிட்டனவோ!

சிவாவால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. தலையும் லேசாக வலிப்பது போல் இருக்க 'இஞ்சேருமப்பா! ஒரு தேத்தண்ணி கொண்டுவாரும். தலை வலிக்குமாப் போலை இருக்குது' கதவைத் திறந்து, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த நீலவேணியிடம் கேட்டான்.

அசதியாகவே எழுந்தவள் 'உங்களுக்கு எத்தனை தடவை திருப்பித் திருப்பிச் சொன்னனான். நீங்கள் கேட்டால்தானே! நாளைக்கு வேலையில்லைத்தானே. காலமை உதெல்லாம் செய்யலாமெண்டு. நல்ல சோக்கான படம். இப்பதான் முடிஞ்சுது. பாத்திருந்தால் கொஞ்சம் அலுப்பெண்டாலும் எடுபட்டிருந்திருக்குமெல்லே' என்று சொல்லிக் கொண்டே சமையலறைப் பக்கம் போனவள் 'என்ன இஞ்சி போட்டுத்தரவா இல்லை எலுமிச்சம்சாறு விட்டுப் போடவா?' எனக் கேட்டாள்.

'எதென்டாலும் ஒண்டைப் போட்டுக் கொண்டு வாரும்' என்றவன் அப்படியே வந்து சோபாவில் இருந்தான். சோபாவில் இருந்தவனுக்கு ஞாபகம் வரவே அருகில் ஏதாவது அல்லது யாராவது கூடவே அமர்ந்திருக்கின்றார்களோ என்று திரும்பிப் பக்கவாட்டில் பார்க்க, 'ரீவி நேரை முன்னுக்குத்தான் இருக்குது' என்ற சிரிப்புடன் கலந்த நீலவேணியின் குரல் கேட்டது. தன்னுள் சிரித்துக் கொண்டே நீலவேணி குசினிக்குள் போகின்றாள் என்பது சிவாவிற்குப் புரிந்தது.

தொலைக்காட்சியின் எந்த நிகழ்ச்சியிலும் சிவாவின் மனம் ஈடுபடவில்லை. தொலைக்காட்சியை நிற்பாட்டினான். அறையினுள் இருட்டு வந்தது. குசினிக்குள் இருந்து வந்த வெளிச்சச் சிதறல்களினால் விருந்தினர் அறை மங்கலான, இருட்டு வெளிச்சத்திற்கு வர, சிவாவிற்கு ஏதோ மாதிரியாக இருந்தது. அதனைப் பயம் என்பதா இல்லை வேறு ஏதோ என்பதா எனக் கூறமுடியாது.

மெதுவாக எழுந்தவன் குசினிக்குள் சென்று மனைவி தேனீர் தயாரிப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனையறியாமலேயே அவனது வலது கை மேலே எழ, விரல்கள் நெற்றியின் இருமருங்கிலும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டன.

**◊ கனி ◊**

- இன்னமும் வரும்.

# பில்லியனர் கழகம்

'பூமிப்பந்தில் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக மாறும்போது ஏழைகள் ஏழைகளாகிக் கொண்டே செல்கின்றனர். அண்மையில் Bloomberg Billionaire Index வெளிவந்தது. உலகில் முதல் 100 மிகப்பெரிய பணக்காரர்களின் பட்டியல் இதில் வெளிவந்தது.




2012 ஆம் ஆண்டு மிகப்பெரிய பணக்காரர்களிற்கு சிறந்த ஆண்டாக மிளிர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ் உலகின் புதிய புதிய இடங்களை நோக்கிச் சென்று அங்கு தமது முதலீடுகளை செய்வதனால் அவர்களின் பணம், அதிகூடிய வேகத்தில் வளர்வதாக இந்தக் கணக்கீடு எடுத்தியம்பியது. இதன் தொடர்ச்சி 2013 இலும் தொடரலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர். முன்னைய ஆண்டுகளில் அனேகமான முதலீடுகள் அமெரிக்காவிலேயே இருந்தன. இப்பொழுது இந்நிலைமை மாறிவிட்டது. அவர்களின் முதலீடுகளுக்கு புதிய இடங்கள் தெரியப்படுகின்றது.

2011ஆம் ஆண்டைப்போலவே, மெக்சிக்கோவைச் சேர்ந்த கார்லோஸ் சிலிம் (Carlos Slim) மீண்டும் முதலிடத்திலேயே உள்ளார். ஆனால் அவரின் மொத்த பெறுமதி மிகவும் அதிகமாக வந்துள்ளது. 72 வயது சிலிம் இன் பெறுமதி 75.2 பில்லியன் ஆகும். இவர் Mexico America Mouil SAB நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். இரண்டாவது இடத்தில் 57 வயதான பில் கேற்ஸ் (Bill Gates) 62.7 பில்லியன் பெறுமதியுடன் உள்ளார்.

| Name | rank | age | Netwroth Billion | Country |
|---|---|---|---|---|
| 1.Carlos Slim | 01 | 72 | $75.2 | Mexico |
| 2.Bill Gates | 02 | 57 | $62.7 | U.S.A |
| 3.Amancio Ortega | 03 | 76 | $57.5 | Spain |
| 4.Warren Buffett | 04 | 82 | $47.9 | U.S.A |

ஒரே ஒரு கனடியன் டேவிட் தொம்சன் (David Thompson) இந்த 100 பணக்காரர்களிலும் 23 ஆவது இடத்தில் $23 பில்லியன் பெறுமதியுடன் காணப்படுகின்றார்.

# இராமலிங்கம் அடிகள்

செல்வம் இருவகைப்படும். கண்ணாற் கண்டு மகிழ்வது ஒருவகை. நிலம், நீர், பொன், மணி என்பன இவையாம். மனத்தால் எண்ணி மகிழ்வது மற்றையது. கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், அருள் என்பன இவையாம். செல்வத்துள் செல்வம் அருட் செல்வம் என்பது வள்ளுவர் கருத்து. ஏனெனில் பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள என அதற்கு விடை பகர்ந்துள்ளார்.

அன்பும் அருளும் ஒன்றல்ல, அன்புக்கு வேறானது அருள். அருளொடும் அன்பொடும் என்ற தொடர் இதனை மெய்ப்பிக்கு. அன்புடமை பற்றி முதலில் கூறியிருக்கும் வள்ளுவர் பின் அருளுடமை பற்றிக் கூறியிருப்பதும் இதற்கு சான்றாக அமையும். ஆனால் அன்பும் அருளும் ஒன்றே என்பர் சிலர். ஏனெனில் இவை இரண்டும் கருணையுள்ள உள்ளத்திலேயே தோன்றுவதாகும் என்பர்.

அன்பும் அருளும் வேறாக இருந்தாலும் அவை இரண்டும் ஒன்று போலவே கருத்துடையனவாகும். தொடர்புடை யாரிடத்து தோன்றுவது அன்பு. பிறரிடத்து தோன்றுவது அருள். சாதாரண மக்களிடம் தோன்றுவது அன்பு. அருளாளரிடம் தோன்றுவது அருள். இல்லறத்தில் காணப்படுவது அன்பு எனவும் துறவறத்தில் காணப்படுவது அருள் எனவும் கூறலாம். திருக்குறளில் அன்பு இருபத்து நான்கு இடங்களிலும் அருள் பதினெட்டு இடங்களிலும் கூறப்பட்டுள்ளது. அன்பு பற்றுதலையும் அருள் இரக்கத்தையும் குறிக்கும். அன்பினை மனிதத் தன்மையின் மீதும் அருளினை தெய்வத் தன்மையின் மீதும் ஏற்றிக் கூறுவதுண்டு.

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்துவது விலக்குங் குணம்.



தன்னலம் கொண்டு உயர்ந்து செல்வது பறவைக் குணம். தீமை செய்தவர்க்கு தீமை செய்வது தேள், பாம்பு குணம். தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்க் குணம். தீமை செய்தவனை மன்னித்து அதை மறந்து அவனுக்கு தீமை செய்யாதிருப்பதே மனிதக் குணம். இவற்றை எல்லாம் கடந்து தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதே தெய்வ குணம். இதுவே அருட் குணம் எனப்படும். அருள் பழுத்த நெஞ்சினர்க்கே இது சாத்தியமாகும். மன்னுயிர் ஓம்புதலே அருள் எனப்படும்.

‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்பதும், ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்பதும் எவ்வுயிரும் பராபரன் சந்நிதி என்பதும் பிறரை உன்னைப் போல் நினை, நேசி என்பதும் அவர்களை வாழ வைத்து வாழ், அவருக்காகவே வாழ் என்பதும் அருள் ஆளுபவர்களின் செயற்பாடுகளாக அமையும்.

அறிவால், ஆற்றலால், உடலால், வலிமையால், பொருளால், பிறவற்றால் உன்னை விட மெலிந்தவரை ஏளனம் செய்யாதே. தாக்கும் நிலை வந்தால் உன்னை விட வலிமை வாய்ந்தவர்கள் உன்னை தாக்க வருவதாக நினை. எனவே அந்த நிலை வந்தால் உன்மனம் என்ன பாடுபடுமோ அதனையே அந்த ஏழைமனமும் படும் என அறியும்போது அருள் நிலைக்கு ஆளாவாய். துன்பப்படு பவர்களைக் கண்டால் விலகிச் செல்லாமல் விரும்பிச் சென்று உதவி செய். அப்போது அருள் கிட்டும்.

சொல்லில் தீச்சொல், சுடுசொல், கடுஞ்சொல், கொடுஞ்சொல் எனப் பலவகையுண்டு. நாவினால் சுட்டபுண் ஆறாது. எனவே இன்சொல் பேசும் போது அருள் நிலை ஏற்படும். தீச் சொல் அருட் செல்வத்தை அழிக்கும். தீஞ்சொல் அருட் செல்வத்தை அளிக்கும். தன் ஊன் பெருக்கற்கு தான் பிறிதூண் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள் என வினாவும் வள்ளுவர் உயிர்க்கொலை தவிர்க்க வேண்டும் என்றும் ஊண் உண்ணலை துறக்க வேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றார். ‘ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னிரு’ இனியது நாற்பதில் ஓர் அடி இது.

திருவருட்கடாட்சத்தினால் பெறும் செல்வம் நினைந்து பெறும், உணர்ந்து பெறும் செல்வம் அருட் செல்வம், பூர்வபுண்ணியப் பயனாலும் அருள் நிலை எய்தலாம். மூன்று வயதில் ஞான சம்பந்தர் அருள் ஞானம் பெற்றார். பயிற்சியினாலும், முயற்சியினா லும் வாழ்க்கை முறையாலும் பரமன் அருளுக்கு ஆளாகலாம் என்பதை அப்பரடிகள் வாழ்க்கை உணர்த்துகின்றது. அவன் அருளாலே தான் அவனது அருளைப் பெறமுடியும் என்பது வாதவூரடிகளின் வாக்கு. எனவே அருள் அருள்பவர்க்கு அல்லலில்லை.

வாடிய பயிரைக் கண்டு வாடிய உள்ளம் அன்பும்
தேடிய செல்வம் ஒன்று அது திருஅருளாம் செல்வம்.



நா. க. சிவராமலிங்கம்

# அன்பு வாழ்வு...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

அனைவரும் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவர்கள். கடவுள் எமக்குப் பல ஆற்றல்களைத் தந்துள்ளார். அதற்கு நாம் கடவுளுக்கு நன்றி கூற வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமான கடவுளின் படைப்பு கடவுளின் வித்தியாசமான வெளிப்பாடு. எல்லோரும் ஒரேமாதிரியாக ஒரே உயரத்தில் ஒரே நிறத்தில் வாழும் ஓர் உலகை கற்பனை செய்து பார்த்தால் அந்த உலகம் உங்களுக்குப் பிடிக்குமா? வித்தியாசமான படைப்பு இறைவனது கொடை நாம் குறைபாடு உடையவர்கள் என வருத்தப்படுவது தவறு. உங்கள் உள்ளங்கள் உயிர்பெறவேண்டும். நாம் ஒவ்வொருவரும் வித்தியாமானவர்கள் என்று மகிழ்வோம். நமது சூழலை வறுமையை வளமையை அப்படியே ஏற்றுக்கொள்வோம். குறைகள் தடைகள் அல்ல. குறைகளை மீறி வெற்றியடைந்தவர்கள் பலரைப் பற்றியும் அறிந்திருக்கிறோம். உலகைச் சிரிப்பில் ஆழ்த்திய சார்லி சப்ளின் குட்டையானவர் தானே. ஆபிரகாம் லிங்கன் ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்தானே. உடல் ஊனங்களைக் கூட வென்று சாதனை படைத்தவர்களும் எத்தனையோபேர் இருந்தார்கள். இறைவன் தந்த ஆற்றலை நம்பாமல்



ஏற்றுக்கொள்ளாமல் பயன்படுத்தாமல் கோட்டை விட்டுப் பரிதவிக்கும் ஏமாளித்தனம் வருந்தத்தக்கது. நமது வாழ்வு ஒரு கொடை. ஒருவாய்ப்பு. குறைகளை ஏற்போம். திருந்துவோம்.

நமது உடல்நோய்கள் பலவற்றிற்கும் நமது மன அழுத்தமும் செயல்களுமே காரணம் என மருத்துவம் கூறுகிறது. தன்நம்பிக்கையும் நேர்வழிச்சிந்தனைகளும் பல உடல் நோய்களைக் குணமாக்க முடியும். தவறிவிழுந்து விடுவோம் என்ற எண்ணம் மேலோங்கி விட்டால் நாம் தவறுவது உறுதி. எப்போதும் ஒரு புன்னகை உற்சாகமான சிந்தனை உற்சாகமான பேச்சு மற்றும் செயல்கள் சில நாட்கள் தொடர்ந்தால் உங்கள் நம்பிக்கையும் நட்பு வட்டமும் வளர்ந்து விடும். நல்ல சிந்தனை நற்பழக்கங்களை உருவாக்கும். நல்ல ஆளுமையையும் உருவாக்கும். ஆளுமைப் பண்பு வாழ்வை நிர்ணயிக்கும். உள்ளங்கள் திடம் பெறும். எமது தவறுகட்கு மற்றவர்கள் தான் காரணம் என்று மற்றவர்கள் மேல் பழி சுமத்துவது தவறு. சின்னத்தவறுகட்குப் பொறுப்பேற்கப் பழகுவோம். உண்மையில் மனநிறைவு தான் மகிழ்ச்சி. நேற்றைய இழப்புகளையும் தோல்விகளையும் பற்றிக் கவலைப்படாது வாழப் பழகுவோம். நமக்கு இன்று இப்போது இருக்கும் சுகங்களை அனுபவிப்பது தான் மகிழ்ச்சி. இன்றைய துக்கம் கூடத் தற்காலிமானது தான். உறவு வளரவேண்டும். உறவு எப்போதும் தேவை. தோல்வி என்பது கூட வெற்றிப் பயணத்தின் ஒரு படிக்கல். தோல்வி வாழ்க்கைப் பாடம். அனுபவப் பாடம். எமது வாழ்க்கை ஒரு பூந்தோட்டம். அதை அழகுபடுத்த ஆயிரம் பூக்கள் அவசியம் இல்லை. அன்றாடம் பூத்துக்குலுங்கும் மூன்றெழுத்துப் பூக்களே போதும் அவை. அன்பு, பண்பு, நட்பு ஆகும். அவை அன்றாடம் பூத்துக் குலுங்கினால், மங்காத வாழ்வும், மறையாத செல்வமும், கரையாத கல்வியும், கடவுளின் இரக்கமும் எம்மில் நிலைக்கும். கசந்த காலங்களை மறந்து கடவுளோடு இணைந்தால் வசந்த காலம் தோன்றும்.

ஆகவே உள்ளங்கள் உயிர்பெற வாழ்வு மலர அன்பை வளர்த்து, அறத்தை வளர்த்து, ஆளுமையை வளர்த்து, அறிவுத் திறனை வளர்த்து அரிய செயல்களை வளர்த்து மாற்றங்களைக் கொண்டு வருவோம். அப்போது அச்சத்திற்கு இடமில்லை. உள்ளங்கள் உயிர்க்கட்டும் அன்பு வாழ்வு மலரட்டும்.

R.L. சேவியர்
கலாச்சாரக் குழுத் தலைவர்.

# தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் நவத்துடன்

## ஆறாம் முறை 500 ரூபாய்

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கின்றேன். என் ஏலக்களத்தில் இலக்கியம், ஆன்மீகம், சமூகம் என்ற கருத்தியலோடு அரசியல் கோட்பாடும் இணைகிறது. இந்த அரங்கின் அனுபவங்கள் நீளமானவை. ஓர் ஆன்மீக வாதியின் அனுபவங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டியவை. ஆன்மீகவாதியின் அரசியல் உணர்வுகள் சாத்வீகமானவை. மனிதனுடைய முக்குணங்களான, ரஜதம், தாமசம், சாத்வீகம் என்பவற்றை திருந்து சாத்துவீகமாக மாற்றி இயங்கும் ஆன்மீகவாதி சட்டநீதியையும் கடந்து சமய நீதிக்குச் செல்வான். மனிதர் என்ன நினைப்பர் என்பதை விட கடவுள் என்ன நினைப்பார் என்பதுவே அவன் சிந்தனை யாகும். பாரததேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகான், இந்திய சுதந்திரத்திற்கு ராம நாமத்தையும் துணையாக்கிக் கொண்டவர். இந்திய ராச்சியம் என்பதையும் கடந்து ராமராச்சியம் என்பதை நெஞ்சில் பதித்துக் கொண்டவர். 'ரகுபதிராகவ ராஜாராம், பதீதபாவன சீதாராம்' என்ற அவருடைய பிரார்த்தனை பாக்குநீரணையையும் தாண்டி ஈழத்து மேடைகளிலும் ஒலித்த அதிசயம் உங்கள் நெஞ்சை விட்டு அகன்றிருக்காது. இன்றைய தலைமுறையினருக்கு இது சரித்திரக்குறிப்பு. நமது தலைமுறையினருக்கு இது சமயநெறி.

நண்பா!
வில்லங்கப்படும் இரண்டு பகுதியினருக்கும் பயன்தரக்கூடிய தீர்வே சமயநீதியின் தீர்ப்பு. இப்போக்கினை பிற்போக்கு பின்னடைவுப் பாதை என்று சொல்பவர்களும் இருக்கிறனர். இதுவே வெல்லும் வழி. வாழும் வாழி என்று கருதுபவர்கள் களத்துக்குவராமல் கடவுளை வேண்டிக் கொண்டு சும்மாயிருப்பார்கள். ஆன்மீக இலட்சிய நோக்குடையவர்கள் கும்பிட்டுக் கொண்டு சும்மா இருந்ததுவும் ஆன்மீக அரசியல் தோல்விகண்டமைக்குக் காரணம் எனலாம். இது நீண்ட நேர வியாக்கியானத்துக்குரிய விவகாரம் இதுபற்றிப் பின்பு பேசுவோம்.

இனம், வர்க்கம், சாதியம், பெண்ணியம் என்ற பல்வேறு கருத்து மோதல்கள், எழுந்து விவாதங்கள் சூடேறிக் கொண்டிருக்க இனம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படை அத்திபாரங்கள் மற்றவற்றை விட பாரிய கேள்விகளோடும், நம்பிக்கை யீனத்தோடும், எதிர்கால வாழ்வு இருப்பு என்ற ஏக்கத்தோடும் உலகில் உச்சங்கண்டுள்ள காலகட்டம் இன்றையது என்பதை அறிவீர்கள். தமிழ் இனத்தைப் பொறுத்த அளவில் இது 1960ஆம் ஆண்டளவில் கூர்மை கொண்டது. இந்தியத் தமிழ் அகத்தில் சிலம்புச்செல்வர், ம.பொ. சிவஞான கிராமணியாரும் தமிழரசுக் கழகமும், சி.பா. ஆதித்தனாரும், நாம் தமிழர் இயக்கமும், பெரியார் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் வழிவந்த அறிஞர் அண்ணாத்துரை தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழமும், தமிழினப் பாதுகாப்பு, தமிழ் தேசஎல்லை வரம்பு தமிழ் மொழிப் பாவனை என்றதுறைகளில் சிந்தித்தும், பேசியும், எழுதியும் போராடிய காலம் ஒன்றிருந்தது.

இக்காலப் பகுதியில் தமிழரசுக் கழகமும், நாம் தமிழர் இயக்கமும் தி.மு.கவுடன் இணைந்து செயல்பட்ட நிலையும், தமிழக அரசை நிறுவிய வாய்ப்பும் இருந்தமையை நீ அறிவாய். தமிழக அரசு நிறுவப்படுவதற்கு முன்பு தமிழ் தேசியம் என்ற கருத்தியலை முன்வைத்து,



சொல்லின் செல்வர் என்று தி.மு.கவினரால் பாராட்டப்பட்ட ஈ.வெ.கி சம்பத் தமிழ் தேசியக் கட்சியை தொடங்கியது ஒரு திருப்புமுனையாய் அமைந்தது. திராவிடம் என்ற கொள்கைப் பிடிப்பில் கன்னடம், மலையாளம், தெலுங்கானா, தமிழ்நாடு என்னும் நான்கு இனவழி இணைப்பில், தமிழ் மாநிலத்தைத் தவிர பிறமாநிலங்களில் திராவிட இயக்கத்திற்கு ஒருகிளை அமைப்பும் தோன்றவில்லை. இனிமேல் தோன்றவும் மாட்டாது. அவரவர்கள் தமது தேசிய நலன்களுக்காகத் தனித்துப் போராடும் சூழலே தோற்றம் கொள்ளும் என்று கூறியே ஈ.வெ.கி. சம்பத் தி.மு.க.விலிருந்து பிரிந்து தமிழ் தேசியக்கட்சியை தொடங்கினார். இவருடன் கவிஞர் கண்ணதாசன், மதுரைத் திருமாறன் முதலியோரும் இணைந்தனர். 'தமிழ்ச் செய்தி' என்ற கிழமை இதழையும் தொடங்கிப் பிரசாரம் செய்தார்கள். அன்று 'தமிழச்செய்தி' ஆசிரியராய் இருந்தவர் பி.சி கணேசன். இவரே 'எழுத்தாளன் காதலி' என்ற நாடகத்தை எழுதியவர். இந்த நாடகம் யாழ்ப்பாணத்திலே புதுமைலோலனின் நெறியாள்கையில் மேடையேறியது நினைவிருக்கிறதா? 1968 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். பி.சி. கணேசன் இப்பொழுது கனடாவில் வாழ்கிறார் என்றும் கேள்விப்பட்டேன்.


நிற்க!
ஈழத்தமிழ் இனமேம்பாட்டிற்காய் தோன்றிய தமிழ் காங்கிரஸ்கட்சி இலங்கையில் இரண்டுபட்டது. தமிழ் அரசுக்கட்சி உதய மானது. ஈழத்தமிழ் இனத்தின் தேசியம், மொழி, கலாச்சாரப் பேணுகைக்காய் தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் இயங்கிப் பல போராட்டங்களையும் சாத்வீக நெறியில் நடத்தியது. இது பலன்தராதநிலையில் கருத்து முரண்பாடு கொண்டு தமிழரசுக் கட்சியிலிருந்து பிரந்தவரே ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் வ. நவரெத்தினம். தமிழரசுக்கட்சியின் 'மூளை' என்று அக்கட்சித் தலைவர்களால் விதந்து பாராட்டப்பட்டவர் பிரிந்ததும் ஈழ சுயாட்சிக் கழகம் என்ற புதிய அமைப்பை உருவாக்கி தமிழர் சுயநிர்ணயத்தை முதன்மைப்படுத்திக் கூட்டங்களில் உரையாற்றினார். தமிழர் தலைவிதி ஒன்றாதலும் இரண்டாவதும் தானே!

1963ஆம் ஆண்டிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 'கம்பர்' மனையில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தகாலத்தில் ஈ.வெ.கி.சம்பத்தின் தமிழ் தேசியக்கட்சியின் கொள்கைகளையும் நகர்வுகளையும் கவனித்துக் கொண்டிருந்ததால் தமிழ் தேசியம் சுயநிர்ணயம், தன்னாட்சி போன்றவற்றில் உணர்வு பூர்வமான, புத்திஜீவிதமான புரிந்துணர்வுக்குள் தள்ளப்பட்டேன்.

1968 ஆம் ஆண்டு அண்ணாமலையால் திரும்பினேன். ஈழசுயாட்சிக் கழகம் தொடங்கிய நாடாளுமன்ற உறுப்பினர், வ. நவரெத்தினம் எங்கள் ஊர் கல்விக் கூடம் ஒன்றினை (பராசக்திவித்தியாலயம்) புதுப்பித்து அதன் ஆரம்பவிழாவுக்கு வந்திருந்தார். நானும் அன்று அங்கு சொற்பொழிவாற்றினேன். என்பேச்சுக்குப் பின்பு தலைவர் நவம் பகிரங்கமாகவே என்னைத் தனது கழகத்திற்குப் பணியாற்ற வரும்படி அழைப்பு விட்டார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியால் புறப்பட்ட அறிஞர் அண்ணாத்துரையை பெரியார் ஈ.வெ. ரா. தனது 'விடுதலை' இதழுக்கு ஆசிரியராகவும் திராவிடக் கழகத்திற்குப் பிரசாரகராகவும் விளங்கும் படி அண்ணாவை அழைத்தது போன்று புலவரை எமது விடுதலை இதழுக்கு ஆசிரியராகவும் எமது கழகத்திற்குப் பிரசாரகராகவும் பொதுமக்கள் சார்பில் அழைக்கிறேன் என்று சொல்லியே அழைப்பு விட்டார். கூட்டம் முடிந்ததும் அவருக்குச் சம்மதம் தெரிவித்த நான் அடுத்த கிழமையே சுயாட்சிக் கழக ஏடான 'விடுதலைக்கு' ஆசிரியரானேன். மேடைப் பிரசாரங்களிலும் கலந்து கொண்டேன். யாழ். ராணித்தியேட்டருக்கு அருகாமையில் அமைந்திருந்த தீவுப்பகுதிமக்கள் இல்லத்தில் இருப்பு, இரவில் கூட்டம். பகலில் பத்திரிகைப்பணி என்னுடன் அப்போதைய சுதந்திரன் ஆசிரியர் நாக பத்மநாதன் 'தமிழன்' ஆசிரியர் த. இளங்கோவன் 'சத்தியம்' ஆசிரியர் மு. பொன்னம்பலம் ஆகியோரும் தங்கியிருந்த னர். மக்கள் இல்லமல்லவா? தாய்வீட்டில் வாயும் வயிறும் வேறாயிருந்தாலும் பிள்ளைகளாய் தங்கியிருந்தோம். நான்கு கட்சிகளின் பத்திரிகை ஆசிரியர்கள் இரவு நேரத்தில் வேறு வேறு மேடைகளில் எதிர்பிரசாரம் செய்து விட்டு நடுச்சாமத்தில் வீடு திரும்பி உணவுண்டு, உறங்கி உறவாடிய பண்பாடு அல்லது நாகரீகம் இனி எந்த யுகத்தில் நடைபெறுமோ?

நண்பா!
இதனைத் தொடர்ந்து நடந்த பிரச்சினை களும் போராட்டங்களும் என்னைப்பாடாய் படுத்தியதை நீ அறிவாய். என் உறவினரான வழக்கறிஞர் ப.கதிரவேலு எங்கள் தொகுதியிலேயே நவத்தாரை எதிர்த்துப் போட்டியிட்டதும், நவத்தாரை ஆதரித்து நான் 'இரத்தத்திலகம்' இட்டு பிரச்சாரம் செய்த பின்பே வழக்கறிஞர் ப.க. களத்தில் குதித்ததும், நான் திணறித் தர்மசங்கடத்திற் குள் திண்டாடியதும் பண்டிதர். கா. பொ. இரத்தினமும் தேர்தல் களத்தில் நின்றதும் விவாத மோதல் நிலைப்பாடுகளும் நெஞ்சின் அலைகளாய் எழுகின்றன. தமிழர் சுயாட்சி என்பது இலங்கையில் இரு இனங்கள் மத்தியில் எப்படிச் சாத்தியமாகும்? என்ற கேள்விக்கு நான் 'விடுதலை' இதழில் எழுதியமையும், மேடைகளில் பேசியமையும் தலைவர் நவத்தை நன்றாகக் கவர்ந்தது. ஒரு உதாரணத்தைச் சொல்லி தமிழர் சுயாட்சி



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# 2013 ஆம் ஆண்டு

2012 ஆம் ஆண்டில் பல நல்ல கூடாத சம்பவங்கள் நடைபெற்றன. இப்போது 2013 இல் என்ன நடைபெறும் எனப் பார்ப்போம். சென்ற வருடம் போல உலக அழிவு பற்றி கூறக் கூடிய எந்த ஒரு நிகழ்வும் இவ்வருடம் இல்லை. சிலர் சூரியனிலிருந்து Solar flare வர வாய்ப்புள்ளது என்கிறார்கள். NASA இது தவறு என்றும் கூறியுள்ளது. பெப்ரவரி 10 ஆம் திகதியிலிருந்து சீனர்களின் பாம்பு வருடம் பிறக்கிறது. பாம்பு வருடம் சுகவாழ்வு, வெற்றி என்பன தரும் வருடம் ஆகும். உரோம எழுத்துகளில் இவ்வருடம் MMXIII என எழுதப்படும்.

இவ்வருடத்தில் வரும் சில குறிப்பிடத்தக்க ஆண்டு விழாக்களைப் பார்ப்போம். ஜனவரியில் அமெரிக்காவில் அடிமைகளை விடுதலை செய்து 150 வருடங்களாகும். லண்டன் 'Underground' நிலக்கீழ் பாதைகள் திறந்தும் 150 வருடங்களுமாகும். மகாத்மா காந்தி இறந்து இவ்வருடம் 65 ஆண்டுகள் ஆகும். மார்ச் மாதத்தில் CD க்கள் பாவனைக்கு வந்து 30 வருடங்களாகின்றன. நொவம்பரில் John F. Kennedy இறந்து 50 வருடங்களாகும். முதலாம் உலக மகாயுத்தம் முடிந்து 95 ஆண்டுகளாகும்.

இவ்வருடம் பல ஆங்கிலப் படங்கள் வர இருக்கின்றன. இதில் பல புத்தக கதைகளும், தொடர்கதைகளும் உண்டு. உதாரணமாக The Host, Iron Man 3, Star Trek, Despicable Me 2, The Smurfs 2, Percy Jackson, Star Wars, Catching Fire மற்றும் The Hobbit. இவ்வருடம் பல தொழில்நுட்ப முன்னேற்றங்களும் கண்டுபிடிப்புக்களும் வர இருக்கின்றன. iPhone 5S, Apple iTV, Xbox 720 என்று பல வர இருக்கின்றன.




Biometric Authentication அதாவது கை அடையாளம், Iris Scan விழித்திரை மூலம் ஒருவரை அடையாளம் செய்வது இவ்வருடம் அதிகரிக்கும் தொலைபேசியை Charge செய்யும் கைப்பை (hand bag)கள் மற்றும் Augmented reality கண்ணாடிகளும் (மூக்குக்கண்ணாடியில் இணையத்தளம்) வர இருக்கின்றன. Botox க்கு பதிலாக நாங்கள் தேனீயின் நஞ்சை பாவிக்கத்தொடங்குவோம். மேலைநாடுகளிலும் பலர் முட்டைகளை பெற கோழிகளை வீட்டு வளர்ப்பு பிராணிகளாக வைத்திருப்பார்கள்.

உணவகங்களில் நேரத்தைக் குறைக்க Menu இல்லாமல், ஒரு சில உணவு வகைகளை விற்பார்கள். வாழ்க்கையில் மன அழுத்தத்தை குறைக்க 2013 இல் ஒரு பூனை Cafe க்கு சென்று அங்கு பூனையுடன் விளையாடலாம்.

இவ்வருடம் Pantone (சிறுபொருட்களை செய்யும் நிறுவனம்) இயற்கை, உறுதி (Stability), அமைதி (Harmony) என்பவற்றை குறிக்கும் Emerald பச்சையை இவ்வருடத்தின் நிறம் என கூறுகின்றார்கள். Benjamin Moore (Paint விற்கும் கடை) இவ்வருடத்தின் நிறத்தை Lemon Sorbet (மஞ்சள்) என்கிறார்கள்.



ஞா. ஆரணி
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# கண்ணிய விளம்பரம் கலைபோல் மிளிர்கவே!

விடயம் பலவும் விளங்கத் தந்து
தொடராய் வாசகர் தொடரும் வண்ணம்
சுடராய் ஒளிர்ந்து சுகமே நல்கி
திடமாய் அறிவைத் தீட்டிடும் விளம்பரம்

கனடாத் தகவல் கணிதப் போட்டி
மனதிற் பதிக்கும் மாணவர் கல்வி
தனத்தின் மகிமை தாரணி மகிழ்வு
கனக்கும் கவிதை காணத் தருமே

அறிவியல் ஆன்மீ கம்சினி மாவொடு
நெறிமுறை தவறா நேரிய வாழ்வியல்
வறிதிலா நகைச்சுவை வாசகர் விரும்பிட
செறிவொடு தந்திடு சீரிதழ் வாழ்கவே

எண்ணி மகிழ ஏற்புடைக் கதையொடு
மண்ணில் இளையோர் மாண்புகள் பெறவே
திண்ணிய நெஞ்சொடு தீட்டிடக் களங்கொடு
கண்ணிய விளம்பரம் கலைபோல் மிளிர்கவே!

- இராஜ்மீரா இராசையா.

**Free Real Estate Class**

Free Realestate Class Call:

**316.321.6969**

# தைப்பொங்கல்

உலகத்துக்கு உணவூட்ட உழைத்த
உழவன் திருநாளாம் தைபொங்கல்
கதிர்விளைய ஒளி மழை கொடுத்த
கதிரவனுக்குக் காணிக்கை திருநாளாம்
ஏர்பூட்டி உழவு செய்ய உழவனுக்கு உதவிய
எருதுகளுக்கும் எடுக்கும் திருநாளாம்
தைபிறந்தால் வழி பிறக்கும் என்ற
நம்பிக்கை கொண்ட தமிழன் திருநாளாம்
அடிவானம் சிவக்குமுன் அதிகாலை எழுந்து
மனைவாசல் முற்றத்தை மனையாள் பெருக்கி
கோமயத்தால் மெழுகல் இட்டு
கோலமும் போட்டியிடுவாள்
மங்கல நீர் ஆடி மங்கை அவள்
மாவிலை தோறணம் கட்டிடுவாள்
பிள்ளையார் கொலிசொன்றை கோமயத்தில்
பிடித்து அங்கே வைத்திடுவாள்
முடித்தேங்காய் மாவிலை கொண்டு
பூரணகும்பம் வைத்து பூவும் சூடி
திருநீறு சந்தனம் குங்குமமும் வைத்து
திருவிளக்கும் ஏற்றிவைப்பாள்
மஞ்சள் இஞ்சி இலை மண்பானையில் கட்டி
குறியும் வைத்து நீர், பால் நிரப்பி அதை
மூன்றடுப்புக்கள் மேல் ஏற்றி வைத்து
தீ மூட்டி எரிய வைப்பாள்
பால் பொங்கி சரிக்கையிலே பதம் செய்த
பச்சை அரிசியை பயறும் கலந்ததனை
பானையில் இட்டு எரித்து பதமாக வருகையிலே
பழவற்றல் சருக்கரையும் கலந்திடுவாள்
கதிரவன் கிழக்கே கதிர்வீசி வருகையிலே
தலைவாழை இலை போட்டு பொங்கல் படைத்திடுவாள்
பட்டாசுகள் படபடவெடிக்க கற்பூரதீபம் காட்டி
கதிரவனை வணங்கிடுவாள்
உழவனோடு உமையாளும் உறவுகளும்
பொங்கல் உண்டு மகிழும் திருநாளாம்
தைப்பொங்கல் திருநாள்.



- கவிநாதம் பரந்தாமன்

# ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்
# நத்தார் தின கொண்டாட்டம்

ஒன்ராரியோ முது தமிழர் மன்றத்தினரால் ஒவ்வொரு வருடமும் கனடாதினம், தீபாவளி, நத்தார் ஆகிய தினங்களைச் சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். அந்த வகையில் இவ் வருடமும் கடந்த 22ம் திகதி சனிக்கிழமை மாலை Scarborough No. 10 Sewells வீதியிலுள்ள Chruch of Nativity என்ற தேவாலய மண்டபத்தில் சிறப்பாக நத்தார் தினம் கொண்டாடப்பட்டது. இவ் விழாவிற்குப் பிரதம அதிதியாக அருட்கலா நிதி ஜோசப் சந்திரகாந்தன் அடிகளாரும் விசேட விருந்தினராக கிறீஸ்தவப் பெண் போதகர் வண. கிறிஸ்டபல் செல்வலிங்கம் அவர்களும் கலந்து கொண்டனர். ஆரம்ப நிகழ்வாக கனேடிய தேசிய கீதம், தமிழ்த்தாய் வணக்கம், மன்ற கீதம் இறுதியாக இரு நிமிட மௌன அஞ்சலி ஆகிய நிதழ்வுகள் முறையாக நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து மன்றத் தலைவர் திரு. மாயா கந்தையா அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்ட பின் நீரஜா சங்கர் என்ற பிள்ளையின் கீபோட் இசை நடைபெற்றது. இதன் பின்பு பிரதம விருந்தினர் அருட்கலா நிதி சந்திரகாந்தன் அடிகள் தமது உரையில் நத்தார் தினத்தின் அர்த்தத்தை மிகத் துல்லியமாக எடுத்துரைத்து கிறீஸ்துவின் பிறப்பின் மூலம் நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்களையும் மிகச் சுருக்கமாக எடுத்துரைத்தார். இதன் பின் ‘தேவ ராகம்’



என்ற இசை நிகழ்ச்சி மன்ற அங்கத்தவர்கள் சிலரால் கீபோட் சகிதம் பாடப்பட்டது. இதை யடுத்து தலைவர் திரு. மாயா கந்தையா அவர்கள் மன்றத்தின் வளர்ச்சி, அதன் செயற்பாடுகள், எதிர் காலத்திட்டங்கள் என்பன பற்றி மிகச் சுருக்கமாக எடுத்துரைத்தார். அடுத்த முக்கிய நிகழ்ச்சி யாக ‘புத்தம் புது பூமி வேண்டும்’ என்ற இசைச்சித்திரம் மிகச் சிறப்பாக மன்ற அங்கத்தவர்களால் நடித்துக் காட்டப்பட்டது. இதில் ஆண்கள் பெண்கள் சிறார்கள் எனப் பலர் பங்கேற்றனர். இயேசு நாதராகவும் எமது மன்ற உறுப்பினர் ஒருவர் நடித்து மக்களின் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து விசேட விருந்தினரும் Scarborough வில் கடமையாற்றும் ஒரேயொரு தமிழ்ப் பெண் போதகர் வண. கிறிஸ்டபல் செல்வலிங்கம் அவர்கள் Emmanuel Church of Nazarene ஆலயக் குழுவினர் சகிதம் அருமையான மறையுரை களையும் நத்தார் கீதங்களையும் இசைத்தது மக்கள் மத்தியில் ஒரு ஆன்மீக ரீதியான விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியதாய் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து நத்தார் தாத்தா (Santa Claus) மக்கள் மத்தியில் தோன்றி அனைவரையும் தமது நடிப்பால் பரவசப்படுத்தினது மட்டுமெல்லாமல் சிறார்களுக்கு இனிப்புப் பண்டங்களையும் வழங்கினார். நத்தார் தாத்தாவாக நடித்தவரும் எமது உறுப்பினர் என்றும் சொல்லப்பட்டது. இதையடுத்து மன்றச் செயலாளர் திரு. சிவா சின்னையா அவர்களால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் பரிசில்கள் வழங்கும் நிகழ்ச்சியும் இடம் பெற்றது. இறுதியாக ஒருங்கிணைந்த விருந்தோம்பலுடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிதே முடிவுற்றது.

R.L. சேவியர்
கலாச்சாரக் குழுத் தலைவர்
ஒன்ராரியோ முது தமிழர் மன்றம்.

# பொய் பற்றிய உண்மை

பொய் பற்றிய உண்மையொன்று உண்டெ ன்றால் அது இதுதான்: பெரும்பான்மையா னோர் தமது அன்றாட வாழ்க்கையில் பொய்யைத் தயங்காமல் பேசுகின்றனர்.

இதில் ஆச்சரியத்தக்க விடயம்



அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் பல்கலைக் கழகத்தின் உளவியல் பேராசிரியரான றொபேர்ட் ஃபெல்ட்மான் இப்படி கூறுகிறார். மனித வாழ்க்கையில் பொய்யின் செல்வாக் குப்பற்றி அறிந்து கொள்வதற்காக இவர் பல தொண்டர்களை தம்மிடையே உரையாட விட்டு வீடியோ மூலம் பதிவு செய்தார்.

இவ்வீடியோப் பிரதிகளை தொண்டர்கள் பின்னர் அவதானித்த போது, பத்து நிமிட இடைவெளியில் 60 வீதமானோர் குறைந்தது ஒரு தடவையாவது பொய் கூறுவதைக் கண்டுபிடித்தனர். இதில் பெரும்பான்மை யினோர் இரண்டு அல்லது மூன்று தடவை கள் பொய்கள் கூறியுள்ளனர்.

என்னவென்றால், தமது பொய்யாற்றல் குறித்து தாமே ஆச்சரியப்பட்டுவிட்டனர் இத்தொண்டர்கள்!

பேராசிரியர் ஃபெல்ட்மான் 'கண்டுபிடித்த' இன்னுமொரு விடயம் என்னவெனில், பெண்களைவிட ஆண்களொன்றும் அதிகமா கப்பொய் கூறிவிடவில்லை. வித்தியாசம் என்னவென்றால் தாம் உரையாடிக் கொண்டிருப்பவரை உற்சாகப்படுத்த அல்லது அவர்களை உயர்த்திக்காட்ட பெண்கள் பொய் கூறினர்; ஆண்கள் தம்மைத் தாமே உயர்த்திக் காட்டப் பொய் கூறினர்.

## ஒன்ராரியோ இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சங்கம் அவ் ஓய்வூதியம் பெறுவோருக்கு உதவிகளை அளிக்க முன்வந்துள்ளது

மேற்படி சங்கத்தின் பணிப்பாளர் சபை கூடி (at the council chambers, city hall, scarborough town centre) ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவுகள், ஓய்வூதியம் கொடுக்கப்படாமை போன்ற முக்கிய விடயங்களை ஆராய்ந்து முடிவுகளை எடுத்துள்ளன. அவை பின்வருமாறு.

1. குறித்த காலங்களில் உயிர்வாழும் பத்திரத்தை (Life Certificate) சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்ப உதவி செய்தல்.
2. சகல ஓய்வூதியம் பெறுவோருக்கும் அனுமதித்த மேலதிகக்கொடுப்பனவுகளையும் (Pension Increase) பண உதவிகள் (Allowance) சகல ஓய்வூதியம் பெறுவோருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.
3. அரசாங்கத்தில் ஓய்வூதியம் பெறுவதற்கான காலம்வரை சேவை ஆற்றியும், இடம் பெயர்ந்ததினால் அல்லது வேறுகாரணங்களுக்காக ஓய்வூதியம் கிடையாதோருக்கு ஓய்வூதியம் பெற வழி செய்தல்.
4. ஓய்வூதியம் பெற்றவர்கள் இறந்தபின், அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கும், பிள்ளைகளுக்கும் ஓய்வூதியம் பெற உதவி செய்தல்.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்படின், அல்லது சங்கத்தில் உறுப்பினராவதற்கும், அங்கத்துவதைப் புதுப்பித்துக் கொள்வதற்கும், பின்வரும் பணிப்பாளர்களில் ஒருவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

1. றெஜிஸ் (தலைவர்) 647.285.9336
2. சில்வா (உபதலைவர்) 416.293.8592
3. மாயா (உபதலைவர்) 416.291.6667
4. தம்பி (செயலாளர்) 289.997.0934
5. தங்கா (பொருளாளர்) 416.266.7895
6. விவேகா (உபபொருளார்) 416.296.0136
7. மதி (ஒருங்கிணைப்பாளர்) 416.879.6301
8. சுந்தர் (உதவி ஒருங்கிணைப்பாளர்) 416.454.6360

**Free Real Estate Class**
Free Realestate Class Call:
**416.321.6969**

# 85ஆவது ஒஸ்கார் விருதுகள் - 2013

சினிமாவில் உயரிய விருதாக திகழும் ஒஸ்கார் விருதுகளுக்காக பரிந்துரைக்கப் பட்ட படங்கள் மற்றும் தொழில்நுட்ப



கலைஞர்களின் பெயர்கள் வெளியிடப் பட்டுள்ளன. 85வது ஒஸ்கார் விருது வழங்கும் விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள பெவேலி ஹில்ஸ் பகுதியில் பெப்ரவரி 24ஆம் திகதி நடைபெற



உள்ளது. 2013ம் ஆண்டின் சிறந்த படத்திற்கான ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள படங்கள் இந்தியாவுடன் தொடர்புடையன ஆகும்.

ஆங் லீ (Ang Lee) இயக்கிய "லை.ஃ.ப் ஆ.ஃ.ப் பை" மற்றும் கேத்ரின் பிக்லோ (Kathryn Bigelow) இயக்கிய "சீரோ டார்க் தேர்ட்டி' (Zero Dark Thirty) போன்ற படங்கள் இந்தியாவில் படமாக்கப்பட்டவையாகும். சீரோ டார்க் தேர்ட்டி படம் சண்டிகரின் கூட்ட நெரிசல் நிறைந்த மார்கெட் ஒன்றிலும், லை.ஃ.ப் ஒ.ஃ.ப் பை படம் புதுச்சேரியிலும் படமாக்கப்பட்டுள்ளன.

மேலும் லை.ஃ.ப் ஒ.ஃ.ப் பை படத்திற்காக இந்தியாவின் பிரபல கர்நாடக இசைப்பாடக-ியான பாம்பே ஜெயஸ்ரீ எழுதிய "பைஸ் லுல்லாபை" என்ற தமிழ் பாடலும் சிறந்த பாடல் விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கனடாவைச் சேர்ந்த இசையமைப்பாளர் மைக்கேல் டேன்னா இப்பாடலுக்கு இசை அமைத்துள்ளார். இதே பாடலுக்காக இவர் சிறந்த இசையமைப்பாளர் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக ஒஸ்கார் விருதுக்காக இந்த ஆண்டு அதிக விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட படம் ஸ்டீபன் ஸ்பீல்ஸ்பெர்க் இயக்கிய "லிங்கன்" படமாகும். சிறந்த இயக்குனர், சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகை என இப்படம் 12 விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதிகம் பரிந்துரைக்கப்பட்ட இப்படம் இந்திய தொழிலதிபர் அனில் அம்பானியின் ரிலையன்ஸ்-ட்ரீம் வொர்ஸ் நிறுவனத்தின்



கூட்டு முயற்சியில் இயக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# சரியான காரணத்திற்கு சரியானதில் வைக்கும் நம்பிக்கை

நான் நியாயமான விடயங்களில் நியாயமான காரணங்களிற்காக என் நம்பிக்கையை வைப்பதால் நம்பிக்கை யின் சக்தியை இப்போ அனுபவிக்கிறேன்.



நாம் எம்மையும் பிறரையும் நம்புவதில்லை என நினைத்தாலும் நம்பிக்கையின்றி வாழ முடியாதென்ற படியால் பலவிதங்களில் நம்பிக்கையைக் கைக்கொள்ளத்தான் செய்கிறோம். எமது நாளாந்த வாழ்வின் மூலக்கூறு நம்பிக்கை. இரவில் தூங்கும்போது காலையில் விழித்து எழுவோம் எனும் விசுவாசத்துடன் தான் துயில்கிறோம். எமக்கு நோய் வரும்போது வைத்தியர்களும் தாதிகளும் எம்மைக் குணப்படுத்துவார்கள் என நம்புகிறோம். வங்கிகளை நம்பி எமது பணத்தை முதலீடு செய்கிறோம். ஆசிரியர்களை நம்பி எமது பிள்ளைக-ளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். மெக்கானிக்கை நம்பி காரை விடுகிறோம். ஆனால் என்ன காரணமோ தெரியாது. நெருங்கிய உறவுகளில் ஒருவரை ஒருவர் நம்புவது மட்டும் கஷ்டமான விடயமாகவே இருக்கிறது. உண்மை என்னவென்றால் எம்மால் நம்பிக்கை வைக்க முடியும். நாம் பிறரை நம்பவும் செய்கிறோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தவறான விடயங்களைச் சில சமயங்களில் நம்பி விடுகிறோம்.

ஒருவரால் நாம் மனவேதனைப்பட்டால் மீண்டும் அவரால் வேதனைப்படுவோம் என நம்பி விடுகிறோம். அரசியல்வாதிகள் எமக்குப் பொய் சொல்கிறார்கள் என நம்பி விடுகிறோம். எமக்கு ஏதோ ஒரு விபத்து ஏறப்படப்போகிறது என நம்பி விடுகிறோம். ஆகவே அதைத் தடுப்பதற்காக எம்மைச் சுற்றிச் சுவர் எழுப்பி தற்காப்புக் கவசத்துடன் ஆயத்தமாகி விடுகிறோம். எம்மைப் பயப்படுத்தும் தோற்றமுள்ள ஒருவர் எதிரில் வந்தால் அவசர அவச-ரமாக வீதியின் அடுத்த பக்கத்திற்கு ஓடி விடுகிறாம். எப்படி நம்பிக்கை வைப்பது என்பதல்ல பலரின் பிரச்சனை. உரியவற்றில் எவ்வாறு நம்பிக்கை கொள்ளப் பழகிக் கொள்வது என்பதுதான் கேள்வி.

அன்பும் இரக்கமும் ஒவ்வொருவருக்குள் ளும் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. எல்லா நேரங்களிலும் அன்புடனும் இரக்கத்துட னும் நடப்போம் என நாம் ஒவ்வொருவரும் தீர்மானித்தால் எமது உள்ளார்ந்த ஒளி வெளியில் பிரகாசிக்க ஆரம்பித்து விடும். எல்லோரிடமுள்ள ஒளியை அடையாளங் காணப்பழகி, எல்லோருக்கும் நாமும் ஒளியாயிருக்க பழகினோமானால் எல்லோரிடமுமுள்ள ஒளியை நம்ப நாம் பழகி விடுவோம். உனது உள்ளார்ந்த ஒளியை நம்ப நீ பழகிவிட்டால் அதற்குப்பின் உனக்குப் பிரச்சனை ஒன்றுமே வராது என்பதல்ல. ஆனால் உனக்குத் துரோகம் செய்யும் ஒருவரையாவது உனது ஒளி சுட்டிக்காட்ட அவரை எவ்வாறு சமாளிப்பது என்பது உனக்குத் தெரிந்திருக்கும்.

**பிறரின் மேல் எவ்வாறு நம்பிக்கை வைப்பது என்பதை கற்றுக்கொள்ள வேண்டும் என இன்றுவரை நீ நினைத்திருக்கலாம். இன்று, நீ நம்பிக்கை கொண்டிருக்கும் விடயங்களைப் பரிசீலித்து ஏன் இவற்றை நம்புகிறேன் என உன்னையே நீ கேட்டுக்கொள். என் வாழ்வில் அன்பும் இரக்கமும் ஒளிவீசிட விசுவாசத்துடன் வழி வகுப்பேன் என இன்று தீர்மானித்துக்கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 211

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புருடி

# அறிவித்தல்

**அனைவருக்கும் வணக்கம்**

தமிழ் மரபுத் திங்கள் தைப்பொங்கல் (அறுவடை) விழாவினை யோர்க் பிரதேசத் தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து 2013, ஜனவரி 20 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று 'மிடில்பில்ட்' உயர் நிலைப்பள்ளியில் நடத்தவுள்ளனர். யோர்க் பிரதேச மாநகரசபையின் அங்கத்தவர்களினால் ஜனவரி மாதம் தமிழ்மரபுத் திங்கள் மாதமாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதற்கு அமைய இந்தவிழா ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இவ் விழாவில் எங்களுடன் இணைந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்:** 2013, ஜனவரி, 20, **நேரம் :** காலை 10:00 முதல் மதியம் 1:00 மணிவரை
**இடம் :** மிடில்ட் பீல்ட் உயர்நிலைப் பள்ளி, 525, கைக்லென் அவனியூ, மார்க்கம்.

தமிழ் கலாச்சாரச் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் தமிழர் பாரம்பரிய மதியபோசனமும் இந்நிகழ்வில் இடம்பெறும்.

மார்க்கம் தமிழர் அமைப்பு.
markhamtamilorg@gmail.com / **தொடர்புகளுக்கு:** 905.471.8070

# Education

## Review Tutorials - 131

### CHEMISTRY 12 & IB

**(Gr 12 )** The $K_{sp}$ of AgCl is 1.0 x $10^{-10}$, and the Ksp of AgI is 8.3 x $10^{-17}$. A solution is 0.100 M in $F^-$ and $Cl^-$. What is the concentration of iodide ions when AgCl just starts to precipitate?

**(Gr 11 & IB)**

A 1.35 g sample of pure Al reacts with excess HCl, and the liberated $H_2$ is collected over water at 30°C. The barometric pressure =755mmHg. What volume of gaseous mixture , in litres, is collected? SVP ($H_2O$) at 30°C=31.5 mmHg.

### MATH (GR 11).

A company manufactures toy-cars. The company uses the function $P_{(t)} = -25t^2 + 250t - 400$ to model its profit. $P_{(t)}$ = profit in thousands, t = the number of toy-cars sold in tens of thousands. Determine least number of toy-cars that should be sold to breakeven.

### MATH (GR 12)

Prove , $\frac{2\tan x}{1+\tan^2 x} = \sin 2x$

### PHYSICS

**(Gr 11)** (i)Explain why the output of an AC generator is stepped up when in transmitting electric power across long distances.

**(ii)** A high-resistance voltmeter connected across the battery reads 12 V when the switch is open. When the switch is closed the voltmeter reads 10.8 V. Suggest why this might be.

**(Gr 12A)** Calculate the impact velocity of a 1kg object falling vertically on a roof from a height of 10m. If the falling object is stopped in 0.5s, find the force exerted on the roof.

**(Gr 12B)** Calculate the momentum of a photon with


(a) A 700nm wavelength
(b) 200 eV energy


### IB & 11 Biology

Colour blindness is considered to be sex linked disease and males much more likely to be colour blind than females " Explain" why?

## Answer key 130

➢ **CHEMISTRY 12 & IB**




**(GR 12B)** (a) Successful collision also needed in calculation (b) Collision frequency depends on average kinetic energy. With the temperature the average kinetic energy increases slowly compared to that of sufficient energy required for reaction.

**GR 12 C)** X + Y → C+ P (slow)
C + Y → Q (fast)

**(Gr 12D)**

(i) $CH_3COOH + NaOH \rightarrow Na^+CH_3COO^- + H_2O$

Excess [$CH_3COOH$] = 0.025 moles in 75ml = 0.34mol/L

$CH_3COOH + H_2O \rightleftharpoons CH_3COO^- + H_3O^+$ $K_a = 1.8X10^{-8}$

Eq: $(0.34 - x)$ $(x + 0.34)$ $x$ $P^H$ (7.75) (ii)

(ii)Calculate the [$CH_3COO^-$]= 0.005mol/L ; hydrolysis of $CH_3COO^- + H_2O \rightarrow CH_3COOH + OH^-$ $K_b = 5.56x10^{-7}$ ; $P^H$ =8.56

(ii) Excess NaOH = 0.025 moles/ 75ml. $P^H$ (13.5)

**(GR 12)**

$$E_k = eV = (1.6X\,10^{-19})\,60 = 9.6X\,10^{-18}$$

$$v = \sqrt{\frac{2Ek}{m}} = \sqrt{\frac{2\,X9.6\,X\,10^{-18}}{9.11X\,10^{-31}}} = 1.45X\,10^{13}$$

$$\lambda = \frac{h}{mv} = \frac{6.63\,X\,10^{-34}}{9.11X\,10^{-31}\,X\;1.45X\,10^{13}} = 5.02X\,10^{-3}\mu m$$

**PHYSICS** bomber plane...(ans 30 ° to the horizontal)

**(Gr 12) IB Biology** Memory T cells are one type T-cells which provide immunity against future infections. Following an infection, some of the activated T-cells become memory cells. These memory T-cells are in a state of identifying recurrent infection (same infection) and produce many cells to fight against infection.

**BIOLOGY(Gr12)** Hypothalamus controls the release of ADH (anti-diuretic hormone). ADH acting on the kidneys and increases the permeability of water in distal and collecting tubules in nephron. For example, high concentration of salts in the blood sodium signals the posterior lobe of the pituitary to release ADH. As a result more water will be reabsorbed. It leads to less urine is produced.

*Answer key 131 - next issue*

**Contact: 647 341 3975**
**Dr. A.Sri Krishnaraj PhD**
**E mail: ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# தமிழர்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பதை விளங்கவைத்தேன். சிதம்பரம் நடராஜர் கோயிலும் அதனோடு ஒட்டியிருக்கும் ஶ்ரீரங்கநாதர் கோயிலும் சுயாட்சிக்கு நல்லதோர் உதாரணம். பிரத்தியட்சப் பிரமாணம் தனிஇருப்பு, தனி அடையாளம் தனிமுகவரி தனிக்கணக்கு, தனிப் பூசை, தனிப் பிரசாதம், தனித் தனிப் பத்ததிகள், தனித்தனியான ஆகமவிதிகள். நடராஜப் பெருமானுக்குப் பூசை செய்பவர் கள் தீட்சதர் என்று அழைக்கப்படுபவர். ஶ்ரீரங்கநாதனுக்கு பூசை செய்வோர் ஐயங்கார் என்று அழைக்கப்படுவர். ஏன் சிரிக்கிறாய்? ஓ! 'ஐயங்கார் வீட்டு அழகே' பாட்டு நினைவுக்கு வருகிறதா? வரட்டும்.

இலங்கையில் சிங்களஇனமும் தமிழ் இனமும் ஒட்டியிருக்கலாம். கனடாவின் Town House போன்று. தனி ஆட்சி, தனித்தலைவர்கள், தனிக்கணக்கு, சுயநிர்ணயம், தன்னாதிக்கம் எல்லாம் சுமுகமாக நடைபெறவழி பிறக்கும். நடராசர் கோயிலில் கும்பிடும் சைவர்கள் ரங்கனாதர் கோயிலுக்கும் போவது போல், ரங்கநாதர் கோயில் பக்தர்கள் நடராசர் கோயிலுக்கும் போவது போல் முக் குறியிட்ட நெற்றிகளும், நாமம் தரித்த நெற்றிகளும் சந்திப்பது போன்று சிங்களமக்கள் நயினாதீவுக்கும், தமிழ் மக்கள் கண்டி தலதா மாளிகைக்கும் செல்லலாம் என்று விளக்க மளித்தேன். இந்த விளக்கம் தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்கப்பட்டது. சிங்கள மக்கள் மத்தியில் இதனைப் புரிய வைக்க எடுத்த முயற்சிகளைப் பேரினவாதிகள் மழுங்கடித்து விட்டார்கள். இதனாலேயே இளைஞர்கள் தீவிரமடைந்தார்கள். அரசபயங்கரவாதம் தீவிரவாதிகளைப் போராளிகளாக்கியது. போர்குணத்தைப் பயங்கரவாதம் என்று பரப்புரை செய்தவர்கள், மேற்குல நாடுகளைக் குழப்பத்தில் ஆழ்த்தினர். இதன்பின்பு என்ன நடந்தன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழர் சுயாட்சிகிடைத்திருந்தால் இலங்லையில் இரண்டு இனங்களின் வாழ்க்கை முறை உலகத்திற்கு உதாரணமாய் விளங்கியிருக்கும். விதியின் பயன் இதற்கு என் செய்வோம்?. இன்று கண்ட பலன் என்ன? சாவுகளும் ஒருபக்க ஆதிக்கமும், தமிழர் உரிமைமறுப்பும், நிலப் பறிப்பும் கலாச்சாரச் சீரழிவும், கல்விக்குழப்பமும், கலங்கியவாழ்வும் என்று மாறிக்கிடக்கிறது.

நண்பா!

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழும் வரை தமிழ் தேசியத் தணலை ஆறவிடாது. உணர்வுகளை அடங்கவிடாது மொழி, இனம், சமயம், கலாச்சாரம் என்பவனவற்றைப் பேணும் பெருவிருப்போடு இயங்குவோம். தமிழ்ச் செழுமைகளையும், விழுமியங்களையும் நமது பாரம்பரியத்தினருக்கு ஊட்டி வளர்ப்போம். கனடா என்ற கடவுள் நாடு நமக்கு அந்தச் சுதந்திரத்தை உரிமையை தந்திருப்பதை நன்றியோடு பயன்படுத்துவோம். இந்த 'விளம்பரம்' இதழில் நீ பார்க்கும் படம் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் நவத்தாரின் குடும்பத்தோடு நான் அரசியலில் இயங்கிய காலத்தில் எடுத்த புகைப்படம் ஆனந்த விகடன் இதற்கு 500 ரூபாய் தரும் என்று நினைக்கிறேன். தந்தால் உனக்கும் அறிவிப்பேன். பொது வாழ்க்கை குறித்து என்னிடம் ஒளிவு மறைவு இல்லை. I always social open.

வேறு என்ன?
பிறபின்பு

50
PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE
AVAILABLE FOR RENT

*Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,* புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய *50* பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*
தொடர்புகளுக்கு: *416.917.6883*


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND ®
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
FALUDA
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ML
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

நகைச்சுவைத் தொடர் 260

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





26-01-2013 தைப்பூசம் ஏடு
தொடக்குதல் காது குத்தல்
தைப்பூசத்திருநாளில் தமிழெடுத்துப்பாடுவோம்


உண்மை பேசுபவர்கள் ஊமையாக இருக்கக்கூடாது.

உலகர் வீட்டுக்கு முன் வீட்டிலுள்ளவர்கள் அடிக்கடி உலகர் வீட்டை நோட்டம் விட்டனர். பொங்கலும் முடிந்துவிட்டது. உலகர் வீடு பூட்டிக்கிடந்த யாழ். பல்கலைக் கழகம்போல் அமைதியாக இருந்தது. உலகர் தூங்கியும் தூங்காநி-லை ஆட்டிலறி அன்னம்மாவின் முகம் அமலாபாலின் முகம்போல் சிவந்திருந்தது. செக்கண்ட்புளோர் செல்லம்மா மணவறைக்கு வரும் பெண்போல முக்காட்டுடன் இருந்தா. எல்லோரையும் ப்ளு தாக்கு தாக்கென்று தாக்கிவிட்டது. அமெரிக்காவையும் கனடாவையும் விட்டுவைக்கவில்லை.






பன்றிக்காச்சல், பறவைக்காச்சல் அனைத்தையும் கொன்றோம்.
இப்போ மனிதனுக்கு இருமல் தடிமன் காச்சல்...
தடிமனும் தலையிடியும் தனக்குத்தனக்கு
வந்தால்தான் தெரியும் என்பார்கள்.



இவ்வளவு அமளிதுமளிக்குள்ளும் ரூபனும் ரூபியும் கனடாவிலேயே முத்திரை பதித்து பட்டிதொட்டியெல்லாம் பேசப்படும் நிரு பிறாண்ட் தயாரிப்பில் சக்கரை, பயறுடன் பொங்கி மண்ணில்லாத சக்கரைப்பொங்கலை ரசித்து ருசித்துக்கொண்டிருந்தனர்.



………………

உலகில் காலம் தரும் மாற்றத்தையும் அழிவுகளையும் யாராலும் தடுக்கமுடியாது.



இலங்கையில் ஆங்காங்கே மழை, வெள்ளம், மண்சரிவு,
மீன்மழை, இறால்மழை, அரசியல் மழை...
ரஸ்யாவில் எரிமலைக் குழம்பு, அவுஸ்திரேலியாவில் சிகப்பு தூசுப்படலம்.


மாணவர் ஸ்ரைக், ஆசிரியர்கள் ஸ்ரைக், நீதிபதிகள் ஸ்ரைக், டாக்டர்கள் ஸ்ரைக் உலகின் ஒவ்வொரு கண்டத்திலும் மாறி மாறி நடந்துகொண்டேயிருக்கிறது

…………..



கனேடிய குடிவரவு அமைச்சர் கடந்தவார இலங்கை விசயத்தின்போது பிரச்சினைகளைக் கதைத்தபோது கனேடிய அமைச்சருக்கு பார்வையில் கோளாறு என இலங்கை வெளிநாட்டு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் விவகாரமாகக் கூறியுள்ளார்.

காமாளை கண்ணனுக்கு காண்பதெல்லாம் மஞ்சள். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போலத் தெரிகிறது.



(அப்படிக்கோளாறு இருந்தால் நாடு திரும்பியதும் அவர் சிகிச்சைபெற்றுக் கொள்ளட்டும். இலங்கை அமைச்சரின் இலவச ஆலோசனைக்கு நன்றி)

உண்மை பேசுபவர்கள் ஊமையாக இருக்கக்கூடாது.

உலகர் இடையிடை விழித்து ரெலிவிசன் பார்க்கத்தவறவில்லை. தைப்பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி யென்றும் தமிழர் திருநாளென்றும் தைப்பெருநாளென்றும் வேறு தலையங்கங்களில் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. ரெலிபோன் ஒலிக்க உலகர் உலகண்ணை நான் தாமோதரம் யாழ்ப்பாணத்திலிருந்து கதைக்கிறேன். பொங்கல் வாழ்த்துக்கள் எனவும் உலகர் 3 நிமிடம் இருமவும் தாமோதரத்தின் 3 நிமிடப் போன் காட் முடியவும் சரியாக இருந்தது.

உலகர் புதினக் கலண்டரில் முக்கிய மறக்கமுடியாத மாற்றமுடியா நம்மவர் பேணிய தினங்களை புள்ளியிட்டுக்கொண்டிருந்தார்.

தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சித்திரா பௌர்ணமி, சித்திரை புதுவருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனித்திங்கள், ஆடிப்பிறப்பு, ஆடி அமாவாசை, ஆவணி ஞாயிறு, புரட்டாதிச்சனி, ஐப்பசி வெள்ளி, தீபாவழி, இன்னும் பல...

மறைக்கவும் கூடாது. மறக்கவும் கூடாது.

பாராட்டுக் கௌரவம் எல்லோருக்கும் பிடிக்கும். விளம்பரம் பத்திரிகையில் ஆக்கங்களை அலங்கரிக்கும் எழுத்தாளர்களை பாராட்டும் வகையில் நடத்தும் கௌரவிக்கும் விழா. வருடமுதல் வார சனிக்கிழமைகளில் நடைபெறுவது வழக்கம்.




கடந்தவாரம் தனது 23 வது ஆண்டில் கால்பதிக்கும் விளம்பரம் எழுத்தாளர் குடும்பங்கள் கலந்த இராப்போசனம் நடைபெற்றது. 80 வயதாகியும் தனது உடல்நிலையைப் பொருட்படுத்தாது தளராத உளநிலையுடன் தளராத குறமகள் வள்ளிநாயகி ராமலிங்கம் அவர்களின் பிறந்தநாள், அன்று சிவபாலு மாஸ்ரர் என எல்லோராலும் அழைக்கப்படும் சிவபாலு மாஸ்ரரின் பிறந்தநாள், அதுமட்டுமல்லாமல் பத்திரிகைக்குடும்பத்து ரஜீவ் மகேந்திரனின் ஆங்கில சொற்பொழிவு எல்லோரையும் ஆச்சரியப்படுத்தியது.




இளைஞர்களே இந்நாட்டின் முதுகெலும்பு. முதுகெலும்பு வளைந்த பல முதியோர்க்கு ஏன் இது புரிவதில்லை? முதலில் வாசிக்கப்பழகுங்கள். (வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்)
நீங்களும் எழுத்தாளராகலாம்.

'எங்கேயும் எப்போதும் ராஜா' பெப்ரவரி 16. லோங் வீக்கெண்ட் விளம்பரம் ரொரன்ரோ முழுவதும் பம்பரமாகச் சுற்றிக்கொண்டு திரிகின்றன.



ரூபனும் ரூபியும் இளையராஜாவின் இசை நிகழ்ச்சிக்குப் போவதற்கு புதிதாக வந்த விஸ்வரூபம் சாறி வாங்கப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். உலகரின் விசுவரூபம் தொடரும்.


ஜனவரி 15 –31.

15. பட்டிப்பொங்கல் (மாட்டுப்பொங்கல்)



15. 1799 இல் இலங்கைக்கு அடிமைகள் கொண்டுவருவது முற்றாக தடைசெய்யப்பட்டது.
(ஆனால் தமிழர்கள் அகதிகளாக்கப்படுவது நிற்பாட்டப்படவில்லை)

19. சீர்காழி எஸ். கோவிந்தராஜன் (1933-1988)



19. வானம்பாடி யோகராஜ் ஈழத்து வில்லிசைக்கலைஞர் நாடக எழுத்தாளர் நடிகர் தயாரிப்பாளர் ……….பலர். பாராட்டையும் விருதுகளையும் பெற்றவர் நினைவுதினம்.


20. இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பமானது.



24. சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில் நினைவுதினம் (1965)

25. சுன்னாகம் குமாரசாமிப்புலவர் (நினைவுதினம்)

26.தைப்பூசம்



30. மகாத்மா காந்தி நினைவுதினம்

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

**Free Real Estate Class**
Free Realestate Class Call:
**416.321.6969**

# 'விளம்பரம்' 23 ஆவது ஒன்றுகூடல்





விளம்பரம் பத்திரிகையின் 23 ஆவது வருடாந்த ஒன்றுகூடல் வழமைபோல் புத்தாண்டில் வரும் முதலாவது சனிக்கிழமை (ஜனவரி 05, 2013) அன்று GTA Square mall இல் அமைந்திருக்கும் Party Hall இல் நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடலுக்கு விளம்பரம் பத்திரிகையின் எழுத்தாளர்கள், நண்பர்கள் அவர்களது குடும்பத்தினரும் சமூகம் அளித்திருந்தனர். அன்ரனி மனோகரன் மிகவும் சிறப்பாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். ஒரு நிமிட அமைதி வணக்கத்துடன் மாலை 6:30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து விளம்பரம் பத்திரிகையில் எழுதுபவர்கள் விளம்பரத்தின் ஆக்கபூர்வமான வளர்ச்சி பற்றி தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் கூறினார்கள், தொடர்ந்து விளம்பரம் பத்திரிகையின் பதிப்பாளர் ராஜா மகேந்திரன் அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது (தமிழ்வணக்கம்) www.tamilvanakkam.com என்ற இணையத்தளத்தை அறிமுகப்படுத்த இருப்பதாக தெரிவித்தார்.

அதன் பின்னர் விளம்பரம் எழுத்தாளர்களான குறமகள், சிவபாலு மாஸ்டர் ஆகியோரின் பிறந்தநாளும் கொண்டாடப்பட்டன. பின்பு ரஜீவ் மகேந்திரனின் 'பேச்சாற்றல்' பற்றிய சிறு விளக்கம் அனைவரையும் மிகவும் கவர்ந்தது.

இவற்றைத் தொடர்ந்து இரவு உணவும், பாடல்களும், சில நகைச்சுவை நிகழ்வுகளும் இடம்பெற்றன. விளம்பரத்தின் 23 ஆவது ஒன்றுகூடல் பாடல்களைத் தொடர்ந்து இனிதே நிறைவு பெற்றது.




Siva Mailvaganam

Direct: 416 230 2991

Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca
80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4

Build An Investment & Protection For Your Loved Ones



BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA

| AGE | FEMALE | | MALE | | TAX FREE MONEY |
|---|---|---|---|---|---|
| | PER MONTH | MAX COST | PER MONTH | MAX COST | |
| 25 | $125.55 | $30,091 | $153.29 | $36,789 | $250,000 ++ |
| 30 | $170.68 | $40,992 | $193.71 | $46,470 | |
| 25 | $198.55 | $47,652 | $271.26 | $65,102 | $500,000 ++ |
| 30 | $288.61 | $69,266 | $350.50 | $84,127 | |

20 YRS PAY OUT PLAN

- Super Visa (100% REFUNDABLE)
- RRSP (SAVE 40%)
- RESP (SAVE UP TO $9,200)
- Critical Illness Insurance (100% CASH BACK)
- Life Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Travel Insurance

We're Hiring!
Telemarketer, one who can speak Tamil & English.
Please contact 416 230 2991

RBC Royal Bank · IA Pacific · BMO · Canada Life · Manulife Financial

MORTGAGE NEEDS....



Subo Thevarajah, AMP
Mortgage Agent
416.627.2222
BonaFide Mortgage Solutions Inc.
TD MCAP

BonaFide Mortgage Solutions Inc.



Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No : M12001612
* New Mortgages * Refinance * Second Mortgages
Call me for any Mortgage Financing questions?
Cell: 416-575-3211 ,Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@gmail.com

"Let me help you make the right choice"



SchurenSriskandarajah
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Cassvale Drive, Markham Ontario L3S 4M6
SCHUREN.CA • 416.333.9393

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்



SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated



Low Mortgage Rates

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-800-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Investments

| MINGAY & 16TH AVE FOR LEASE | OSHAWA | MARKHAM & STEELES |
|---|---|---|
|  |  |  |
| Bedrooms: 2<br>Washrooms: 1<br>$900 | Bedrooms: 3<br>Washrooms: 3<br>Bsmt: Finished<br>$369,900 | For Sale<br>Commercial / Retail<br>$349,900 |



Pre Construction condo.
In Downtown Toronto
Completion 2013 - 2014
Starting From $519 Per sq.ft



RE/MAX
Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
Real Estate / Principal Mortgage Broker
416.575.5055
Lic No: M08004376
"When bank says No We say Yes"
*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

ON THE SPOT
HOME INSPECTIONS INC.
Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist
416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca
No 80 Corport Dr, Unit #201
Toronto ON M1H 3G5

Free Real Estate Class
Free Real Estate Class Call: 416.321.6969



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough